153

ஆய்வில் பூத்த மலர்கள்

ஆய்வில் பூத்த மலர்கள்

ஆசிரியர்

அ. அப்துல் மஜீத்

இயக்குநர், தொல்லியல் துறை

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

தரமணி, சென்னை-600 113

2001

முதற் பதிப்பு 2001 — 500 பிரதிகள்

வெளியீடு எண் : 146

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY
10169
MADRAS-9

© தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

ஆய்வில் பூத்த மலர்கள் 930.1095482
ஆப்து

ஆசிரியர்

அ. அப்துல் மஜீத்

விலை : ரூ.

அச்சிட்டோர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
தரமணி
சென்னை-600 113

உள்ளடக்கம்

பக்கம்

அணிந்துரை

என்னுரை

தொல்லியலாய்வுகள்

1. புதை பொருட்கள் கூறும் புதிய செய்திகள் ... 1
2. அழகன்குளமும் அயல்நாட்டுத் தொடர்பும் ... 14
3. திருக்கோயிலூர் ... 20

ஊராய்வு

4. திருச்சிராப்பள்ளி ... 29

கோயிலாய்வுகள்

5. வரலாற்றில் அல்லூர் ... 39
6. அருமைமிகு ஆதம்பாக்கம் ... 47
7. பெருங்குடி அகத்தீசுவரர் ஆலயம் .. 55
8. திருத்தியமலை ஏகபுஷ்ப பெரியநாதசுவாமி கோயில் ... 62

கலை ஆய்வுகள்

9. கோயிற் கட்டடக் கலை ... 91
10. தமிழக கட்டடக் கலை மரபில் இசுலாமிய பள்ளிவாசல் ... 105
11. தட்டப்படாத கதவு ... 113
12. திருவானைக்கா பள்ளியறைச் சொக்கர் ... 126

கல்வெட்டாய்வு

13. பெரிய குறுக்கை அகரச் சுருதியின் கல்வெட்டு ... 131
14. ஐந்நூற்றுவர் செக்கு ... 134

சமூக ஆய்வு

15. தெசவியல் ... 139
16. உடன்கட்டை ஏறிய தேவதாசி ... 156

சு. இராமகிருட்டிணன், இ.ஆ.ப.
அரசு செயலாளர்
தமிழ் வளர்ச்சி பண்பாடு (ம)
அறநிலையத்துறை

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009
தொலைபேசி : 5362887
நாள் : 26—12—2000

அணிந்துரை

தமிழகத்திற்கு நீண்ட நெடிய வரலாறு உண்டு. அதனைத் தொகுத்து எழுதுவதற்கு எண்ணற்ற இலக்கிய, கல்வெட்டு தொல்லியல் சான்றுகளும் உண்டு. இம்மூலச் சான்றுகளைக் கொண்டு பல வரலாற்று அறிஞர்கள் தமிழக வரலாற்றை முழுமையாக எழுதுவதில் தம் பங்களிப்பை நல்கியுள்ளனர். எனினும் இன்னும் நிரப்பப்படாத இடைவெளிகள் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கின்றன. புதிய கள ஆய்வுகளின் மூலம் அறியப்படும் தடயங்களைக் கொண்டு தமிழகத்தின் வரலாறு முழுமையாக எழுதப்பட வேண்டும்.

இப்பணியில் அரசுத் துறைகளும், பல்கலைக்கழகங்களும் வரலாற்று ஆர்வலர்களும் தொடர்ந்து தொய்வின்றி தம்மை ஈடுபடுத்திக் கொள்வது மிகவும் இன்றியமையாததாகும், அவ்வகையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கள ஆய்வுகளிலும், மூல ஆவணங்களைச் சேகரிப்பதிலும், அவற்றை அவ்வப்போது வெளியீடுகளாகக் கொண்டு வருவதிலும் முனைப்போடு செயல்பட்டு வருகிறது. வரலாற்றுக் கருத்தரங்குகள் நடத்துதல், இளந்தலைமுறையினர்க்குக் கல்வெட்டுகளைப் பயிற்றுவிக்கப் பயிலரங்குகள்

நடத்துதல், அகழாய்வுகளை மேற்கொண்டு புதிய சான்றுகளைச் சேகரித்தல் போன்ற பல பணிகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது. ஆய்வுகளில் கண்டறியப்படும் புதிய செய்திகள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்னும் நோக்கத்தில் பல நூல்களையும் இத்துறை வெளியிட்டு வருகிறது.

அவ்வரிசையில் தற்போது இத்துறையின் இயக்குநர் திரு. அ. அப்துல் மஜீத் அவர்களின் ஆய்வில் பூத்த மலர்களாக இந்நூல் வெளியிடப்படுகிறது. இந்நூலாசிரியர் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இத்துறையில் பல்வேறு நிலைகளில் பணியாற்றுபவர், கள ஆய்வுகளிலும், அகழாய்வுகளிலும் நேரடி பட்டறிவு மிக்கவர். இவர் தனது ஆய்வுப் பயணத்தில், பல கால கட்டங்களில் எதிர்கொண்ட தரவுகளைக் கொண்டு எழுதப்பட்ட பதினாறு ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து இந்நூலாக வெளியிட்டுள்ளார். அகழாய்வு, ஊராய்வு, கோயில் ஆய்வு, கட்டடக்கலை, கல்வெட்டு, சமூகவியல் என்று பல தலைப்புகளில் இவ்வாய்வுக் கட்டுரைகள் அமைந்துள்ளன. இக்கட்டுரைகளின் மூலம் இவரது ஆய்வுத் திறமும், அறிவின் அகல ஆழங்களும் பெறப்படும்.

இதுபோன்ற இன்னும் பல நூல்களை அவர் எழுதி வெளிக்கொணர வேண்டும் என்ற வேண்டுகோளோடு இம்முயற்சிக்காக என்னுடைய வாழ்த்துக்களை திரு. அ. அப்துல் மஜீத் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய நூல்களுக்குத் தமிழுலகம் அளிக்கும் வரவேற்பைப் பொறுத்தே புதிய ஆய்வுகளும், வெளியீடுகளும் பல்கிப் பெருகும். தமிழ் கூறும் நல்லுலகம் இவ்வகை நூல்களை ஏற்று பயன் பெறுவதுடன் ஆய்வாளர்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கும் என நம்புகிறேன்.

சு. இராமகிருட்டிணன்

என்னுரை

தொல்லியல் ஆய்விற்கு உறுதுணையாக விளங்குவது கள ஆய்வாகும். அலுவலகப் பணியின் பொருட்டு தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களுக்கும், சிற்றூர்களுக்கும், பேரூர்களுக்கும் செல்லும் வாய்ப்புக் கிட்டியது. அப்பொழுது ஊர்களின் வரலாற்றையும், அங்குள்ள கோயில்களையும், கட்டடக்கலை களையும், கல்வெட்டுகளையும், செப்புத் திருமேனிகளையும், சிற்பங்களையும் கண்டதுடன் நில்லாமல், அவற்றைப் பற்றிய ஆய்வினை மேற்கொண்டு எழுத்தில் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் என்னுள்ளே எழுந்தது.

கள ஆய்வில் கண்டறியப்பட்ட மேற்குறிப்பிட்டுள்ள பொருள்கள் பற்றி ஆய்வு செய்து ஒவ்வொரு தலைப்பிலும் ஒரு கட்டுரை எழுதத் தொடங்கினேன். அக்கட்டுரைகளைத் தொல்லிய லாய்வுகள், ஊராய்வு, கோயிலாய்வுகள், கலை ஆய்வுகள், கல்வெட்டாய்வு, சமூக ஆய்வு என வகைப்படுத்தியுள்ளேன்.

ஆய்வின் பயனாய் மலர்ந்த இக்கட்டுரைகளைத் தொகுத்து எழுதினமையால் இந்நூலுக்கு **'ஆய்வில் பூத்த மலர்கள்'** என பெயர் சூட்டியுள்ளேன்.

இந்நூலை எழுதுவதற்குத் தூண்டுகோலாகவும், உறுதுணை யாகவும் இருந்த திரு. மா. சந்திரமூர்த்தி, பதிவு அலுவலர், சென்னை, முனைவர் திரு. சு. இராசகோபால், திருமதி அர. வசந்தகல்யாணி, சிறப்புநிலைக் கல்வெட்டாய்வாளர்கள், சென்னை, திருமதி சீ. வசந்தி, அகழாய்வாளர், சென்னை ஆகியோரைப் போற்றி பாராட்டி மகிழ்கிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிப் பெருமைப்படுத்திய தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு சு. இராமகிருட்டிணன், இ.ஆ.ப. அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூல் எழுதுவதற்கு என்னக்கு உறுதுணையாக இருந்த என்னுடைய வாழ்வரசி சு. பீர்பாத்திமா அவர்களையும், என் அருமை புதல்வி அ. யாஸ்மின் இஸ்ஸத்தையும் போற்றி மகிழ்கிறேன்.

இந்நூலினைக் குறித்த காலத்தில் செவ்வனே அச்சிட்ட தொல்லியல் துறையின் உதவிப் பணி மேலாளர் திரு. ச. செங்கல்வராயன் அவர்களுக்கும், அச்சுப் பிரிவில் பணியாற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றி.

அன்பகலா

அ. அப்துல் மஜீத்

தொல்லியலாய்வுகள்

I

புதை பொருட்கள் கூறும் புதிய செய்திகள்

பண்டைய இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், நம் நாட்டின் அமைப்பைப் பற்றியும், மன்னர்கள் நிகழ்த்திய போர்கள், வாழ்ந்த அரண்மனைகள், வழிபட்ட ஆலயங்கள், கோட்டைகள், மக்களின் வாழ்க்கை, அவர்கள் செய்த தொழில்கள் பற்றியும் பலவாறு புகழ்ந்து பேசுகின்றன. இவ்வாறு புகழ்ந்து பேசப்படும் செய்திகள் எல்லாம் நம்பத்தகுந்தனவா என்ற எண்ணம் நம்மிடையே எழுவதில் வியப்பில்லை.

காலப்போக்கில் இயற்கையின் சீற்றத்தினாலும், மன்னர்களின் படையெடுப்பினாலும், போற்றிப் பாதுகாப்போர் அருகினமையாலும், மன்னர்கள் தோற்றுவித்த அரண்மனைகளும், வழிபட்ட ஆலயங்களும், கோட்டைகளும் மண்ணில் புதைந்தும், சிதைந்தும் உள்ளன. இப்புதை பொருட்கள் நம் வரலாற்றிற்குப் பல புதிய செய்திகளை அளித்துள்ளன.

மண்ணில் புதைந்துள்ள கட்டடங்களின் அழிந்த பகுதிகள் ஆலயங்கள், கல்லறைகள், மக்கள் உபயோகித்த கருவிகள், கலன்கள், அணிகலன்கள் ஆகியவற்றை முறைப்படுத்தி, அவற்றின் மூலம் வரலாற்றை அறிவதும், அவற்றைப் பயன்படுத்திய மக்களின் பண்பை அறிவதும் புதைபொருள் ஆய்வாகும். தொடர்ந்து வரும் மனித வரலாற்றினை இடைவிடாது புதைபொருட்களின் கண்டுபிடிப்புகள் மூலம் ஆய்ந்து அறிவது புதைபொருள் ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

பழம்பெரும் நாகரிகங்களில் ஒன்றான எகிப்திய நாகரிகம் உலக மக்கள் யாவரும் வியக்கும் வண்ணம் புதைபொருள்

ஆய்வினால் கண்டுபிடிக்கப்பட்டதாகும். 1922-ஆம் ஆண்டில் ஜான் மார்ஷல் என்பவர் மொஹஞ்சதரோ, ஹரப்பா என்ற இரு இடங்களில் புதைபொருள் ஆய்வு நடத்தி சிந்து சமவெளி நாகரிகத்தினை இவ்வுலகிற்கு வெளிப்படுத்தினார். தமிழ்நாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க பல இடங்கள் புதைபொருள் ஆய்வு செய்யப்பெற்றுள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை; அத்திரம்பாக்கம், குடியம், பையம்பள்ளி, ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு, கொற்கை, கருவூர், உறையூர், அழகன்குளம், காவிரிப்பூம்பட்டினம், காஞ்சீபுரம், கங்கைகொண்ட சோழபுரம், வல்லம், கொடுமணல் திருக்காம்புலியூர், அழகரை ஆகிய இடங்களில் நடத்தப்பெற்ற ஆய்வுகளாகும்.

பழைய கற்கால மக்களுடைய வரலாற்றினை அறியும் பொருட்டு இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் 1963-ம் ஆண்டு அத்திரம்பாக்கம், குடியம் ஆகிய இடங்களில் புதை பொருள் ஆய்வு நடத்தப் பெற்றது. அத்திரம்பாக்கம் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ளது. இங்கு நடைபெற்ற ஆய்வின் மூலம் பழைய கற்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பழைய கற்கால மனிதர்கள் பயன்படுத்திய கல்லாலான கைக்கோடரிகள், கிழிப்பான்கள், சுரண்டிகள், சில்லு கருவிகள் முதலியன இங்கு கண்டுபிடிக்கப்பட்டன.[1] இந்தியா விலேயே இவ்விடத்தில்தான் மிகுதியான அளவில் பழைய கற்கால கருவிகள் கிடைத்துள்ளன. இப்புதைபொருள் ஆய்வு பழைய கற்கால மக்கள் தமிழகத்தில் சற்றேறக்குறைய ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் அத்திரம்பாக்கத்தில் வாழ்ந்து வந்தனர் என்ற புதிய செய்தியை எடுத்தியம்புகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் குடியம் என்னும் ஊர் உள்ளது. இவ்வூருக்கு அருகிலுள்ள மனசத்தம்மன் மலைக்குன்றுகளின் அடிவாரத்தில் பழைய கற்கால மனிதர்கள் வாழ்ந்த குகைகள் காணப்படுகின்றன. இங்குள்ள பதினாறு குகைகளில் மூன்று குகைகளில்தான் கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் உள்ளன. இக்குகைகளின் உட்பகுதியின்மேல் புகைபடிந்து உள்ளதைக் கொண்டு இங்கு வாழ்ந்த மக்கள் நெருப்பின் பயனை அறிந்திருந்தனர் என அறியலாம். இங்கு மூன்று இடங்களில்

புதைப்பொருள் ஆய்வு நடத்தப் பெற்றது. அவற்றில் குறிப்பிடத் தக்கது மனசத்தம்மன் குகையில் நடைபெற்ற ஆய்வாகும். இவ்வாய்வினால் இங்கு வாழ்ந்த கற்கால மக்கள் கற்கருவிகள் செய்யும் கொறில் நுட்பத்தில் படிப்படியாக முன்னேறி வளர்ச்சி பெற்றிருந்ததைத் தெளிவாக அறிய முடிந்தது. இங்கு அகழ்ந் தெடுக்கப்பட்ட கற்கருவிகளில் முக்கியமானவை கைக்கோடரிகள், கிழிப்பான்கள், வெட்டிகள், சுரண்டிகள் முதலியனவாகும். இக்கற் கருவிகளைக் கற்கால மக்கள் விலங்குகளின் தோலை உரிப் பதற்கும், மரக்கிளைகளை வெட்டுவதற்கும், நிலத்தைத் தோண்டு வதற்கும் பயன்படுத்தினர் என்ற புதிய செய்தியை இவை நமக்கு அளிக்கின்றன.[2]

பையம்பள்ளியில் நடைபெற்ற புதைபொருள் ஆய்வு புதிய கற்கால மக்கள் வாழ்க்கை பற்றியும், பெருங்கற்கால மக்கள் வாழ்க்கை பற்றியும் பல புதிய செய்திகளை அளித்துள்ளது. பையம்பள்ளி வேலூர் மாவட்டத்திலுள்ளது. இங்கு 1964,65-ஆம் ஆண்டுகளில் மத்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் புதைபொருள் ஆய்வு நடத்தப்பெற்றது.

புதிய கற்காலத்தில் இங்கு வாழ்ந்த மக்கள் விரைவில் அழியக்கூடிய பொருட்களைக் கொண்டு வட்டவடிவமான குடில்கள் அமைத்திருந்ததற்கான தடயங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. சாம்பல் நிறம் பொருந்திய கையால் வனையப்பட்ட மட்கலயங்களை அவர்கள் பயன்படுத்தினர். அவர்கள் பயன் படுத்திய கற்கருவிகள் வழவழப்புடன் காணப்படுகின்றன. வழவழப்பான கோடரிகளும், உளிகளும் இங்கு கண்டெடுக்கப் பட்டன. மக்கள் அணிவதற்குச் சுடுமண் மணிகளைப் பயன்படுத் தினர். புதிய கற்காலத்திற்குப் பின்னர் இங்கு வாழ்ந்த பெருங் கற்கால மக்கள் வட்ட வடிவிலும், செவ்வக வடிவிலும் தங்களுக்குத் தேவையான இல்லங்களை அமைத்துக் கொண்டனர். இவ்வில்லங் களின் தரைப்பகுதிகள் சுண்ணாம்பாலும், செந்நிற மண்ணாலும் மெழுகப்பட்டன. இங்கு வாழ்ந்த மக்கள் இரும்புத் தாதுக்களை உருக்கித் தங்களுக்குத் தேவையான இரும்புக் கத்திகளையும், கதிர் அரிவாள்களையும், ஆணிகளையும் செய்துகொண்டனர். அவர்கள் உணவு உட்கொள்வதற்குப் பயன்படுத்திய கருகிய கேழ்வரகு இங்கு கண்டெடுக்கப்பட்டது. சுடுமண்ணால் செய்யப்

பெற்ற பறவை, விலங்குகளின் உருவங்கள் இங்கு அகழ்ந்தெடுக்கப் பட்டன. மக்கள் அணிந்த கண்ணாடி வளையல்களும், சங்கு வளையல்களும் இங்கு கண்டெடுக்கப்பட்டன.[3]

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர் என்னுமிடத் தில் அலெக்ஸாண்டர் ரே என்பவர் கி.பி. 1900-ஆம் ஆண்டில் புதைபொருள் ஆய்வு நடத்தினார். இறந்தவர்களைத் தாழிகளி லிட்டு புதைக்கும் வழக்கம் இங்கு நிலவி இருந்ததைக் கண்டறிந் தார். தங்கம், வெண்கலம், இரும்பு போன்ற உலோகங்களை இங்கு வாழ்ந்த மக்கள் பயன்படுத்தி வந்தனர். மேலும், பொன் னாலான இருபத்தொரு நெற்றிப் பட்டங்கள் இங்கு கண்டெடுக்கப் பட்டுள்ளன. இங்கு வாழ்ந்த மக்கள் வழிபாட்டிற்காகப் பயன் படுத்திய கி.மு. 1000-ஆம் ஆண்டைச் சேர்ந்த தாய்த் தெய்வத்தின் வெண்கல உருவமும் இங்கு கண்டுபிடிக்கப் பெற்றது.[4]

தமிழகத்தில் நடைபெற்ற புதைபொருள் ஆய்வில் குறிப்பிடத் தக்கது பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேட்டில் நடந்த ஆய்வாகும். இவ்வாய்வு அறிவியல் அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டதாகும். இது தமிழக வரலாற்றிற்கு ஒரு புத்தொளியை வழங்கியது. தமிழகத்திற்கும் ரோம் நாட்டிற்கும் இடையில் நிலவி வந்த வணிகத் தொடர்பை நம் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ரோம் நாட்டிலிருந்து நம் நாட்டிற்கு மது, குப்பிகளில் அடைக்கப் பெற்று வந்ததை, புறநானூறு "யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல்" எனக் குறிப்பிடுகிறது. இவ்விலக்கியக் குறிப்பை மெய்ப் பிக்கும் வண்ணம் அரிக்கமேட்டில் ரோமானிய மதுக்குடங்களும், ரோமானிய மட்கலயம், அரிட்டைன் இன மட்கலயப் பகுதிகளும் அகழ்ந்தெடுக்கப்பட்டன. இவை கி. மு. 50-ஆம் ஆண்டு முதல் கி. பி. 200-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இங்கு வந்திருக்க வேண்டுமென இங்கு புதைபொருள் ஆய்வு நடத்திய சர். மார்டிமர் வீலர் கருதுகிறார். மஸ்லின் துணிகளுக்குச் சாயம் தோய்க்கும் தொட்டிகளும் இங்கு கண்டுபிடிக்கப்பட்டன. மக்கள் அணிவதற்குப் பயன்படுத்தப்பட்ட, சங்காலும், எலும்பாலும், பொன்னாலும், சுடுமண்ணாலும், கண்ணாடியாலும் ஆன மணிகள் இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டன. கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானிய அகல் விளக்கின் பகுதிகளும், பண்டைய தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட மட்கலயங்களின் பகுதிகளும்

இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவை தமிழ் எழுத்துகளின் வளர்ச்சியைப் படிப்படியாக அறிவதற்குப் பெரிதும் துணைப் புரிகின்றன. இரும்பு, செம்பு, தங்கம் முதலியவற்றால் செய்யப் பெற்ற பொருட்களும், சங்கினால் செய்யப் பெற்ற வளையல்களும் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கு கி.பி. முதல்நூற் றாண்டில் நிலவிய சுடுமண் கலையை மெய்ப்பிக்கும் வகையில் சுடுமண்ணாலான ஒரு பெண்ணின் உடற்பகுதி அகழ்ந்தெடுக்கப் பெற்றது. அவளது வலது கை தொங்க விடப்பட்டும், இடது கை ஒரு பழக்கூடையைத் தாங்கியும் காணப்படுகிறது. அவள் அணிந்திருக்கும் புடவை தற்பொழுது நம் மகளிர் அணிவது போலுள்ளது. இங்கு கிடைக்கப் பெற்ற புதை பொருட்கள் கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து இரண்டாம் நூற்றாண்டு வரை யிலுள்ள நாகரிகச் சிறப்பினை நமக்கு எடுத்தியம்புவதுடன் நம் மகளிர் புடவை அணியும் வழக்கத்தினை இக்கால அளவிலேயே கையாண்டு வந்தனர் என்பதை வெளிப்படுத்துகிறது.[5]

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை திருநெல்வேலி மாவட்டத் திலுள்ள கொற்கை என்னும் ஊரில் புதைபொருள் ஆய்வு நடத்தியது. கொற்கை, பாண்டிய மன்னர்களின் தலைநகரமாகவும், துறைமுகப்பட்டினமாகவும் விளங்கியது. அகநானூறு இதனை "நற்றேர் வழுதி கொற்கை முன்துறை" எனக் குறிப்பிடுகிறது. இவ்வூரின் பழம்பெரும் வரலாற்றைப் புதைபொருட்களின் வாயிலாக அறியும் பொருட்டு ஆய்வு நடத்தப் பெற்றது. இங்கு வாழ்ந்த மக்கள் கருப்பு சிவப்பு நிறம் பொருந்திய வழவழப்பான மட்கலயங்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர். இம்மட்கலயங்கள் வண்ணம் பூசப்பட்டு விளங்கின. மௌரிய மட்கலயங்களின் துண்டுகள் மூன்று இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவை வடகங்கைப் பகுதியினருடன் தமிழ் மக்கள் கொண்டிருந்த தொடர்பினை விளக்கும் புதிய செய்திக்குச் சான்றாக அமை கின்றன. பண்டைய தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பெற்ற மட்கலயங்களின் பகுதிகளும் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன.[6]

குறியீடுகள் இடப்பெற்ற மட்கலயங்களின் துண்டுகள் பல கிடைத்துள்ளன. அவற்றின் மேல் சுவஸ்திகம், திரிசூலம், சூரியன் நட்சத்திரம், முக்கோணம், ஏணி, படகு, அம்பு, வில், மீன் போன்ற குறியீடுகள் காணப்படுகின்றன. அறிஞர்கள் சிலர்

இக்குறியீடுகளைக் குயவனின் குறியீடுகள் எனக் கருதுகின்றனர். ரோம் நாட்டில் அரிஸ்ஸோ என்ற இடத்தில் தயாரிக்கப் பெற்ற அரிட்டைன் மட்கலயங்களின் மீது குயவனின் முத்திரைப் பதிக்கப் பெற்றுள்ளதை ஆதாரமாகக் கொண்டு இக்குறியீடுகளையும் குயவனின் குறியீடுகளெனக் கருதுகின்றனர். இக்கருத்தினைப் பலர் ஏற்றுக்கொள்ளவில்லை. யாஸ்தானி என்ற வரலாற்றறிஞர் இக்குறியீடுகள் ஒரு குறிப்பிட்டக் கருத்தினை வெளிப்படுத்துவன வாக இருக்கலாமெனக் கருதுகிறார். இக்கருத்தினையும் பலர் மறுத்துள்ளனர். இக்குறியீடுகள் பற்றித் தெளிவான எந்த முடிவிற்கும் வர இயலவில்லை. இக்குறியீடுகள் பெரும்பாலும் மட்கலயங்கள் செய்த பின்னர் இடப்பெற்றிருப்பதால், இம்மட்கலயங்களைப் பயன்படுத்திய மக்களின் குறியீடுகளாக இருக்கலாமென எண்ணத் தோன்றுகிறது.

கொற்கையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கரித்துண்டுகள் சி. 14 என்னும் அறிவியல் முறையால் காலம் கணிக்கப் பெற்றன. இக்கரித்துண்டுகளின் காலம் கி.மு. 785 என்று கணிக்கப் பெற்றது. இதனால் கி.மு. 785-ஆம் ஆண்டிலேயே கொற்கை சீருடனும் சிறப்புடனும் திகழ்ந்ததென்ற புதிய செய்தியை அறிய முடிகிறது

கரூர் மாவட்டம், கரூரில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினரால் புதைபொருள் ஆய்வு செய்யப்பட்டது. சேர நாட்டின் தலைநகரமான வஞ்சிதான் கரூர் என்பதை நிலைநாட்டத் தக்க தடயங்கள் இங்கு கிடைத்துள்ளன. ரோமானிய நாட்டுடன் கரூர் தொடர்பு கொண்டிருந்ததை இங்கு கிடைக்கப் பெற்ற ஐந்நூறுக்கும் மேற்பட்ட ரோமானியக் காசுகளும் அகழாய்வில் கிடைக்கப் பெற்ற ரோமானிய மதுக்குடங்களின் பகுதிகளும் உறுதி செய்கின்றன. பண்டைய தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட மட்கலங்களின் துண்டுகளும், செங்கற்களினால் கட்டப் பெற்ற கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டடப் பகுதிகளும் கரூரின் பண்டைய வரலாற்றினை எடுத்தியம்புகின்றன.

1964,65ஆம் ஆண்டுகளில் சங்ககாலச் சோழர்களின் தலை நகரமாக விளங்கிய உறையூரில் சென்னைப் பல்கலைக் கழகத்தினர் புதைபொருள் ஆய்வு மேற்கொண்டனர். இங்கு கருப்பு சிவப்பு நிறம் பொருந்திய மட்கலயங்களின் பகுதிகளும், வண்ணம் பூசிய

மட்கலயங்களின் பகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. பண்டைய தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட மட்கலயங்களின் பகுதிகள் இங்கு கிடைக்கப் பெற்றுள்ளன. ஒரு மட்கலயத்தில் மூப்பொன் பெடு அந்தன் நின்னூர் மாண்டான் என பண்டைய தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதனை அகழாய்வறிஞர்கள் மூன்பொன்பேடு என்ற ஊரைச் சேர்ந்த அந்தன் போரிட்டு மாண்டான் என்ற செய்தியை அறிவிப்பதாகக் கருதுகின்றனர். இங்கு துணிகளுக்குச் சாயம் தோய்க்கும் தொட்டிகள் கண்டு பிடிக்கப்பட்டன. இத்தொட்டிகள் இங்கு நெசவுத் தொழில் நடை பெற்றமையை மெய்ப்பிக்கின்றன. இவையன்றிச் சூரியன், சந்திரன், மீன், திரிசூலம், நட்சத்திரம், சதுரம், அம்பு போன்ற குறியீடுகள் இடப்பெற்ற மட்கலயங்களின் பகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கு கிடைக்கப்பெற்ற புதைபொருட்களைக் கொண்டு கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து இவ்வூரின் வரலாற்றை அறிய முடிகிறது.[7]

இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை ஆற்றங்கரையில் அழகன்குளம் என்னும் ஊர் உள்ளது. இவ்வூரில் 1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினர் புதைபொருள் ஆய்வு நடத்தினர். இங்கு நடைபெற்ற ஆய்வால் அழகன்குளம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் பாண்டியர்களின் துறைமுகப் பட்டினமாக விளங்கியதென அறிகிறோம். தமிழ்நாட்டிற்கும் ரோமிற்குமிடையே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நடை பெற்ற வணிகத் தொடர்பை நிரூபிக்கும் வண்ணம் இங்கு ரோமானிய மதுக்குடங்களின் பகுதிகள் கண்டெடுக்கப்பட்டன. கி.பி. 375-ஆம் ஆண்டில் ரோம் நாட்டை ஆட்சி செலுத்திய மாமன்னன் வாலண்டீனியனின் செப்புக் காசு ஒன்று இங்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மக்கள் அணிவதற்குப் பயன்படுத்திய உயர் வகைக் கல்மணிகளும், சங்கு வளையல்களும் இங்கு கண்டெடுக்கப் பட்ட புதைபொருட்கள் கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை இங்கு வாழ்ந்த மக்களின் வரலாற்றை அறிய பயன்பட்டன. இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட ரௌலெட்டட் இன மட்கலயத்தில் விளிம்பின் வெளிப்பகுதியின் கீழ் சிரிதா என்று பண்டைய தமிழெழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இதில் காணப்படும் எழுத்துக்கள் மட்கலயம் செய்து சூளையில் சுடுவதற்கு முன்பே எழுதப்பட்டு விளங்குவதால் இம்மட்கலயம்

நம் நாட்டிலேயே செய்தமையாகக் கருதப்படுகிறது. இத்தகைய மட்கலயங்கள் ரோம் நாட்டிலிருந்து நம் நாட்டிற்கு வந்ததாக முன்னர் கருதப்பட்டு வந்த செய்தி மாற்றம் பெறுகிறது. இது போன்ற புதிய செய்திகளைப் புதைப்பொருட்கள் நமக்கு அளிக்கின்றன.[8]

இந்தியத் தொல்லியல் துறையினர் காவிரிப் பூம்பட்டினத்தில் புதைபொருள் ஆய்வு மேற்கொண்டனர். இங்கு கீழையூர், வானகிரி, பல்லவனீஸ்வரம் ஆகிய இடங்களில் புதைபொருட்களைக் கண்டெடுத்துள்ளனர். கீழையூரில் செங்கற்கட்டடம் ஒன்று அகழ்ந்தெடுக்கப்பட்டது. இக்கட்டடத்தில் மூலை ஒன்றில் அழிந்த நிலையில் இரண்டு மரக்கம்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. உப்பை நெல்லுக்கு விற்று அதை ஏற்றி வந்த படகுகள் மரத்தறிகளிலே கட்டப்பட்டிருந்தன என்று பட்டினப்பாலை குறிக்கிறது. எனவே இம்மரக்கம்பங்கள் படகுகளைக் கட்டப் பயன்படுத்தப்பட்டிருக்கலாமென எண்ணத் தோன்றுகிறது.[9]

இங்குள்ள வெள்ளையனிருப்பு என்ற பகுதியில் சோழர்காலச் சுடுமண் உருவங்களும், நாட்டிய மகளின் உடற்பகுதியும் அகழ்ந்தெடுக்கப்பட்டன. வானகிரியில் ஒரு நீர்த்தேக்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காவிரிநீர் இதில் வந்து தேங்குகிறது. இவ்வடிவமுள்ள நீர்த் தேக்கத்தினை தேய்ப்பிறையுருவக் கேணி என்று நம் இலக்கியங்கள் கூறுகின்றன.

இங்கு பல்லவனீஸ்வரத்தில் நடைபெற்ற ஆய்வு குறிப்பிடத் தக்கதாகும். புத்த விஹாரம் ஒன்று இங்கு அகழ்ந்தெடுக்கப் பட்டது. இது ஐந்து சதுர அறைகளைக் கொண்டு விளங்குகிறது. இவ்வறையின் சுவர்கள் செங்கற்களால் கட்டப்பெற்றவை. சுவர்ப் பகுதிகள் அலங்கரிக்கப்பட்டும், வண்ணம் தீட்டப்பெற்றும் விளங்கியதற்கான தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள அறைகளில் ஒன்றில் தியான நிலையிலுள்ள புத்தர் திருமேனி ஒன்றும், சுடுமண்ணாலான பெண் தெய்வ உருவம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டன. இங்கு புத்த சைத்தியத்தின் பகுதிகளும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் பூம்புகாரில் பௌத்த மதம் சிறந்து விளங்கியதை குறிப்பிடுகின்றன. இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள பல செய்திகள் புதைபொருள் ஆய்வினால் வெளிப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

சுண்ணாம்புக் கல்லாலான புத்த பாதம் ஒன்று இங்கு அகழ்ந் தெடுக்கப்பட்டது. இப்புத்த பாதத்தில் பூர்ணகுடம், ஸ்வஸ்திகம், ஸ்ரீவத்சம் முதலிய மங்கலச் சின்னங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இதனை புத்த பீடிகை என்று நம் நூல்கள் குறிக்கின்றன. அமராவதி, நாகார்ஜுனகொண்டா முதலிய இடங்களில் கிடைக்கப் பெற்ற பௌத்த கலைப் பொருட்கள் போல் இங்கும் கிடைக்கப் பெற்றுள்ளமை சிறப்பாகும். இங்கு சதுர வடிவிலும் வட்ட வடிவிலும் செப்புக் காசுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இக்காசு களின் முன்புறம் வாலைத் தூக்கி நிற்கும் புலியின் உருவமும், சூரியனின் உருவமும் காணப்படுகின்றன. பின்புறம் யானையின் உருவம் காணப்படுகிறது. சோழர்களது இலச்சினையாக விளங்கும் புலி இக்காசுகளில் பொறிக்கப்பட்டிருப்பதால் இக்காசுகள் கரிகாலன் காலத்தவையாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இங்கு கிடைக்கப் பெற்ற புதைபொருட்கள் கி.பி. முதல் நூற்றாண் டிலிருந்து நான்காம் நூற்றாண்டு வரையிலான காவிரிப்பூம் பட்டினத்தின் வரலாற்றை நமக்குத் தெரிவிக்கிறது.[10]

காஞ்சிபுரத்தில் 1962 - 63ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையினர் புதைபொருள் ஆய்வு நடத்தினர். இங்கு சற்றேறக்குறைய ஐம்பது ரோமானிய மதுக்குடுவைகள் கண்டெடுக்கப்பட்டன. சாதவாகனப் பேரரசன் ருத்ரசதகர்ணியின் செப்புக்காசு ஒன்றும் இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டது. பெண் தெய்வ உருவமொன்றும், நடனமாடும் மங்கையின் உருவமும், காளையின் உருவமும் இங்கு கண்டெடுக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து சென்னைப் பல்கலைக் கழகத்தினர் 1969 - 70-ஆம் ஆண்டில் இங்கு ஆய்வு நடத்தினர். இவ்வாய்வில், முதல் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பண்டைய எழுத்துகள் பொறித்த சாம்பல் நிற மட்கலயத்தின் பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. இம்மட்கலயத்தின் மீது 'புதலிச' என்ற பௌத்த துறவியின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. பௌத்த ஆலயத்தின் அழிந்த பகுதிகள் இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டன. இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட புதைபொருட்கள் காஞ்சிபுரத்தின் வரலாற்றை கி.பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டுவரை தெரிவிப்பனவாய் அமைந்துள்ளன.

திருச்சி மாவட்டம் உட்கோட்டை என்னும் ஊரிலுள்ள மாளிகைமேட்டில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினர் புதை பொருள் ஆய்வு நடத்தினர். இங்கு சோழ மன்னன் முதலாம் இராஜேந்திரனால் தோற்றுவிக்கப்பட்ட மாளிகையின் அழிந்த பகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. ஐந்து அடி அகலமுள்ள இரண்டிரண்டு சுவர்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு அதன்மேல் தூண்களையும், சுவர்களையும் எழுப்பி அரண் மனையைத் தோற்றுவித்திருக்கின்றார்கள். அரண்மனையின் பல பகுதிகளில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்றுத் திகழ்ந்ததற்குரிய தடயங்கள் கிடைத்துள்ளன. மட்கலயங்களின் பகுதிகளும், சிதைந்து போன சீனத்துப் பீங்கான் துண்டுகளும், இங்கு அகழ்ந் தெடுக்கப்பட்டுள்ளன. இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள புதை பொருட்கள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் கட்டடக் கலையினை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தினர் தஞ்சைக்கு அருகிலுள்ள வல்லம் என்ற ஊரில் அண்மையில் புதை பொருள் ஆய்வு நடத்தினர். இவ்வாய்வில் கி. மு. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த பண்டைய தமிழ் எழுத்து பொறிக்கப்பட்ட மட்கலயங் களின் பகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. குறியீடுகள் இடப் பெற்ற கருப்பு சிவப்பு நிறம் கொண்ட மட்கலயங்களின் பகுதி களும், எலும்பினாலான அம்பின் கூரிய நுனிகளும், கூரைக்கு வேயப்பயன்படுத்தப்பட்ட ஓடுகளும் இங்கு அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட கரித்துண்டுகளைக் கொண்டு சி. 14 என்னும் அறிவியல் முறையில் காலத்தைக் கணித்ததில் இங்குள்ள வல்லம் கோட்டை கி.பி. ஏழாம் நூற் றாண்டிலோ அல்லது அதற்கு பின்னரோ எழுப்பப்பட்டிருக்கலா மெனத் தெரிய வந்தது. பெரும்பாலும் இக்கோட்டை குறுநில மன்னர்களாக விளங்கிய முத்தரையரால் எடுக்கப்பட்டிருக்கலாம். இங்கு கிடைக்கப்பெற்ற புதைபொருட்களைக் கொண்டு இவ்வூரின் தொடர்ச்சியான வரலாற்றை கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு வரை அறிந்து கொள்ளலாம்.

தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தினர் பெரியார் மாவட்டத்தில் கொடுமணல் என்ற ஊரில் 1985-86-ஆம் ஆண்டுகளில் புதை பொருள் ஆய்வு நடத்தினர். சங்க இலக்கியத்தில் இவ்வூர்

கொடுமணம் என்னும் பெயரில் விலையுயர்ந்த கற்களைக் கொண்டு அணிகலன்கள் செய்யும் புகழ்பெற்ற இடமாக வருணிக்கப் படுகிறது. இங்கு கிடைத்த புதைபொருட்களிலிருந்து சங்க இலக்கியத்தில் குறிப்பிட்டது போல அரிய அணிகலன்களும் இரும்பு செம்புப் பொருட்களும் செய்த தொழிற்கூடமாக இவ்வூர் விளங்கியதெனத் தெளிவாகிறது.

இங்கு சுண்ணாம்பு சரளைக்கல்லும், செம்மண்ணும் கொண்டு கெட்டிப்படுத்தப்பட்ட வீட்டுத் தரைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இங்கு தூண்கள் நடப்பட்டிருந்த குழிகளின் அடையாளங்கள் உள்ளன. செங்கற்களும் கூரைத்தட்டோடுகளும் அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன. தானியங்களைச் சேமித்து வைப்பதற்கு நிலத்தில் கடியில் வெட்டப்பட்ட வட்டவடிவமான பெரிய குழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இங்கு வாழ்ந்த மக்கள் சில சமயங்களில் இறந்தவர்களை வீட்டிற்கு அருகில் புதைத்துள்ளார்கள். ஒரு வீட்டிற்கு அருகில் ஒரு வயதான ஆணின் எலும்புக் கூடும், ஒரு குழந்தையின் எலும்புக்கூடும் கண்டெடுக்கப்பட்டன. வயதான ஆணின் எலும்புக் கூடு கால்களை மடித்து அமர்ந்த நிலையில் இருப்பது போல காணப்படுகிறது. குழந்தையின் எலும்புக்கூடு வடக்கு நோக்கி ஒருக்களித்த நிலையில் குறுக்கிக் கிடத்தப்பட்டிருந்தது. வயதான ஆணின் வலது கைச்சுண்டு விரலில் ஒரு செம்பு மோதிரம் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

வண்ணக் கோடுகள் தீட்டப்பட்ட கருப்பு சிவப்பு நிறப் பொருந்திய மட்கலயங்களின் துண்டுகள் இங்கு கிடைக்கப் பெற்றன. அவற்றின் மேல் பண்டைய எழுத்தில் 'கண்ணன் ஆதன்' 'வருணிய அகல்' 'கூலந்தை வம்பன் அகல்' போன்ற வாசகங்கள் காணப்படுகின்றன. இரும்பாலான அம்பு நுனி, கத்தி, அரம், ஆணி, உளிகள், செம்பாலான சிறிய ஒலிமணி, துளையிடும் ஊசிகள், தூண்டில், முள், காதணி முதலியன கண்டுபிடிக்கப்பட்டன. இரும்புத் தாதுவை உருக்கிக் காய்ச்சிப் பொருட்கள் செய்தமைக்கான தடயங்கள் கிடைத்துள்ளன. பளிங்குக்கல், கார்னிலியன், நீலம், பெரில், ஜாஸ்பர் முதலிய கற்களைக் கொண்டு மணிகள் செய்ததற்கான தடயங்கள் இங்கு

கிடைத்துள்ளன. கி.மு. மூன்று அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வெள்ளியால் செய்யப் பெற்ற முத்திரைக் காசும் இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டது.

இங்குள்ள ஈமக்காட்டில் கற்பதுக்கைகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. இரும்பினாலான கத்தி, கேடயம், வாள் போன்ற நீண்ட ஆயுதங்களும் இங்கு கண்டெடுக்கப்பட்டன. இவை இறந்தவரின் படைக்கலன்களாக இருக்கலாம். நான்கு கால்களையுடைய பெரிய சாடிகளும், கருப்பு சிவப்பு நிறம் பொருந்திய மட்கலயங்களும் உடுக்கை வடிவிலான பாத்திரம் தாங்கிகளும் சிறிய குவளைகளும், மூடிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. செம்பினாலான கிண்ணமும் தட்டும் கார்னீலியன் மணிகளும் ஈயக் கம்பி சுருள் மாலையும் இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டன. இவ்வூரிலும் ஈமக்காட்டிலும் கண்டெடுக்கப்பட்ட புதைபொருள்களைக் கொண்டு ஏறக்குறைய கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியின் வரலாற்றை அறிந்து கொள்ளலாம்.[11]

சென்னைப் பல்கலைக் கழகத்தினர் திருச்சி மாவட்டத்தில் திருக்காம்புலியூர், அழகரை என்ற இடங்களில் புதைபொருள் ஆய்வு மேற்கொண்டனர். இங்கு கண்டுபிடிக்கப்பட்ட நெற்களஞ்சியம், கருக்கு அருவாள், கலப்பையின் நுனிப்பகுதி முதலியன இங்கு வாழ்ந்த மக்கள் உழவுத் தொழிலை மேற்கொண்டு வந்தனரென்பதைத் தெரிவிக்கின்றன. நெற்களஞ்சியத்தின் சுவர்களுக்கிடையில் கிடைக்கப் பெற்ற பட்டு நூல்களின் திரள்கள் இங்கு கி.பி. நான்கு ஐந்தாம் நூற்றாண்டுகளில் நெசவுத் தொழில் நடைபெற்றமையை மெய்ப்பிக்கின்றன. இங்கு வாழ்ந்த மக்கள் தங்களுக்குத் தேவையான இல்லங்களை வட்ட வடிவிலும், சதுர வடிவிலும், செவ்வக வடிவிலும் அமைத்துக் கொண்டதற்கான தடயங்கள் காணப்படுகின்றன.

திருக்காம்புலியூரில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சுடுமண்ணாலான நாகலிங்கமும், மூஷிகம், பாலகிருஷ்ணன் உருவங்களும், அழகரையில் கண்டெடுக்கப்பட்ட சுடுமண்ணாலான கணபதியின் உருவமும்

சைவ, வைணவ சமயங்கள் கி. பி. நான்கு ஐந்தாம் நூற்றாண்டு களில் இங்கு நிலவியிருந்தமையைக் குறிக்கின்றன. இங்கு கிடைக்கப் பெற்ற புதைபொருட்கள் கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்த இப்பகுதிகளின் வரலாற்றை அறிவிப்பனவாய் அமைந்துள்ளன.[12]

கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தின் தொடர்ச்சி யான வரலாற்றை இடைவிடாது அறிய அகழ்வாய்வில் கிடைத்த புதை பொருட்கள் நமக்கு மிகவும் துணை புரிகின்றன. இன்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க பல இடங்களில் புதை பொருட்கள் மண்ணில் புதைந்து காணப்படுகின்றன. அப்புதை பொருட்களும் வெளிப்படுத்தப்படுமேயானால் நம்முடைய வரலாற்றிற்குப் பல புதிய செய்திகள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

அடிக்குறிப்புகள்

1. *Indian Archaeology* - A review - 1961 - 2, Page - 25; 1963 - 4, Page - 18.
2. Ibid 1964 - 5, Page - 19; 1962 - 4, Page - 12.
3. Ibid 1964 - 5, Page - 22; 1967 - 8, Page - 26.
4. Cat. Pre-Historic Antiquities from Adhicchanallur and Perumbair, Madras, Gen. D.K.
5. *Ancient India* Vol. II, July. 1946, ASI.
6. *Damilica* Vol. I, Journal of the Tamilnadu State Department of Archaeology, December - 1970.
7. *Indian Archaeology* - A review - 1967 - 8, Page-30.
8. இந்நூலின் ஆசிரியர் அழகன்குள அகழாய்வு செய்தபோது கண்டறிந்தவை.
9. *Indian Archaeology* - A review - 1963 - 4, Page-20; 1962 - 3, Page-13; 1961 - 2, Page-26; 1972 - 3, Page-32.
10. பூம்புகார், ஆசிரியர் அறுவர், தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு 1973.
11. Pamphlet published by Tamil University, Thanjavur.
12. *Excavation in the Lower Cauvery Valley* (Thirukkampuliyur and Alagarai) Dr. T. V. Mahalingam - 1970.

2

அழகன்குளமும் அயல்நாட்டுத் தொடர்பும்

அழகன்குளம் இராமநாதபுரம் மாவட்டத்தில், இராமநாதபுரம் வட்டத்தில் வைகையாற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஓர் ஊர். வைகை ஆறு வங்கக் கடலுடன் கலக்கும் ஆற்றங்கரை என்னும் ஊரிலிருந்து 3 கி.மீ. தொலைவிலுள்ளது. இவ்வூரின் வரலாற்றைப் பற்றிய நேரடியான இலக்கியச் சான்றுகளோ கல்வெட்டுச் சான்றுகளோ கிடைக்கவில்லை. ஆயினும் ஆய்வாளர்கள் இலக்கியங்களையும், கல்வெட்டுகளையும், கள ஆய்வில் கண்டறியப்பட்ட தொல்பொருட்களையும், அயல் நாட்டினரின் குறிப்புகளையும் கொண்டு சாலூர் (SALOUR) மருங்கூர்பட்டினம், ஊணூர், அர்கெரு (ARGEIRU) ஆகிய ஊர்களோடு ஒப்புமைப் படுத்தி அழகன்குளத்தை அடையாளம் காண முயற்சித்துள்ளனர்.

அகழாய்வின் மூலமாக தொல்பொருட்களை வெளிப்படுத்தியுள்ள அழகன்குளத்தை தாலமி குறிப்பிடும் சாலூரென்று. துளசிராமன் கருதுகிறார்.[1]

தொல்லியல் துறை வெளியிட்டுள்ள அழகன்குளம் அகழாய்வு முன்னறிக்கை சங்க இலக்கியமாகிய அகநானூறு குறிப்பிடும் ஊணூரும் மருங்கூரும் சேர்ந்த ஊரே தற்போதைய அழகன்குளம் எனக் குறிப்பிடுகிறது.[2] அர்கெரு என்னும் ஊர் கோடிக்கரைக்கு அடுத்துள்ளதாகத் தாலமி குறிப்பிடுவதால், அப்பெயர் ஆற்றங்கரையைக் குறிக்கலாமென நா. மார்க்கியகாந்தி கருதுகிறார். அழகன்குளம் என்ற பெயர் அண்மைக் காலத்தில் தோன்றியதாகையால், அப்பகுதியின் பழம்பெயர் ஆற்றங்கரையே என்பதும், தாலமி சுட்டும் அர்கெரு இதனையே குறிக்கிறதென்பதும் அவர்தம் கருத்து.[3] இக்கருத்துகள் மேலும் ஆய்வுக்குரியவை.

அழகன்குளத்திற்கு வடமேற்கே 15 கி.மீ. தொலைவில் தேவிப்பட்டினம் என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர் உள்ளது. கி. பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சடையவர்மன் சுந்தர பாண்டியன் கல்வெட்டும்,[4] கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விக்ரமபாண்டியன் கல்வெட்டும்[5] இவ்வூரை முறையே இளங்கோ மங்கலமாகிய உலகமாதேவிப்பட்டினமென்றும், புறக்குடி ஆகிய ஸ்ரீவல்லபப்பட்டினமென்றும் குறிப்பிடுகின்றன. கி.பி. 1533-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று தேவிப்பட்டினத்தை தேவிப் பட்டினம் என்றே குறிப்பிடுகிறது.[6] இம்மூன்று கல்வெட்டுகளும் தேவிப்பட்டினம் செவ்விருக்கை நாட்டில் இருந்ததாக குறிப்பிடு கின்றன. அழகன்குளம் தேவிப்பட்டினத்திற்கு அருகே அமைந் துள்ளமையால் இவ்வூரும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்து பாண்டிய நாட்டில் செல்விருக்கை நாட்டுப் பிரிவின் கீழிருந்தது என்று கருதலாம்.

இவ்வூரின் வரலாற்றை அறிய இங்கு அகழாய்வில் கண்டறியப் பட்ட தொல்பொருட்கள் மிகவும் துணைபுரிகின்றன. பல்வேறு மண் அடுக்குகளில் கிடைத்துள்ள தொல்பொருட்களைக் கொண்டும், மண்ணடுக்கில் கிடைத்த கரித்துண்டுகளை சி.14 (கார்பன் 14) என்னும் அறிவியல் முறையில் ஆய்வு செய்து அறியப் பட்ட கால அளவைக் கொண்டும், இவ்வூரின் வரலாற்றை கி.மு. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 5-ஆம் நூற்றாண்டு வரை அறிய முடிகிறது.

அழகன்குளம் அகழாய்வில் கண்டறியப்பட்ட தொல்பொருட் கள் என 'ரௌலெட்டட்' இனப் பானை மற்றும் ரோமானிய மதுக் குடுவைச் சில்லுகள்; ரோமானியக் காசுகள்; கப்பல் உருவம் பொறித்த மற்றும் பெண் உருவங்களுடன் கூடிய பானைச் சில்லுகள்; இடுப்பில் குழந்தையைத் தாங்கி நிற்கும் சுடுமண் பொம்மை; அரபி எழுத்துக்கள் பொறித்த சங்கின் பகுதி; சிங்கள பிராமி வகை எழுத்துக்கள் பொறித்த பானை ஓடு; அச்சுக் குத்தப் பட்ட வெள்ளிக்காசு; மௌரியப் பானை ஓடுகள் ஆகியவை அழகன்குளம் தமிழகத்திற்கு அப்பால் அயல்நாடுகளுடனும், பிற உள்நாட்டுப் பகுதிகளுடனும் கொண்டிருந்த வணிகத் தொடர்பை யும், பண்பாட்டுத் தொடர்பையும் வெளிப்படுத்துகின்றன. மேலும் அழகன்குளம் ஒரு சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கியது என்பதையும் மெய்ப்பிக்கின்றன.

ரோமானியத் தொடர்பு

தமிழ்நாட்டிற்கும் ரோம் நாட்டிற்கும் இருந்த உறவையும், தொடர்பையும் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. பாண்டியர்களுடைய படைகளில் ரோமானியப் போர் வீரர்கள் பணியாற்றியமைக்கான குறிப்புகள் காணப்படுகின்றன. பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் கோட்டை வாயிலில் ரோமானியப் போர் வீரர்கள் காவல் காத்து வந்தனர்;[7] ரோம் நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட இனிய மதுவைப் பாண்டிய மன்னர்கள் அருந்தினர்[8], என்று சிலம்பும், அகப்பாடலும் குறிக்கின்றன. அழகன்குளம் அகழாய்வில் கண்டறியப்பட்டுள்ள ரௌலட்டட் மட்பாண்ட ஓடுகள், ரோமானிய மதுக்குடுவையின் பகுதிகள், ரோமானிய மன்னர்களான இரண்டாம் வேலண்டைன் (கி.பி. 383-92). முதலாம் அர்கேடியஸ் (கி.பி. 395-408) முதலாம் தியோடிசியஸ் (கி.பி. 383-95) குளோரியா ரோமாநர்வம் (கி.பி. (402-408), கன்கார்டியா (கி.பி. 309-405) ஆகியோர் காசுகள் ரோமானிய நாட்டுடனான தொடர்புக்குத் தக்க சான்றுகளாக அமைகின்றன. கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த கப்பல் உருவம் பொறிக்கப்பட்ட பானை ஓடொன்று அழகன்குளம் அகழாய்வில் கண்டறியப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இப்பானையோட்டில் பொறிக்கப்பட்டுள்ள கப்பல் பற்றி அறிய பானையோட்டின் நிழற்படம் நியூயார்க் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் முனைவர் லியோனெல் கேஸ்ஸன் (LIONEL CASSON) என்பவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர் இக்கப்பலை ரோமானிய பல வண்ணப்பட்டையில் (ROMAN MOSAIC) இருக்கும் கப்பல்களோடு ஒப்பிட்டு, இக்கப்பல் ரோமானிய கப்பலை ஒத்துள்ளதென தெரிவித்தார். இதன்மூலம் ரோம் நாட்டோடு அழகன்குளம் கொண்டிருந்த கடல்வழி வணிகத் தொடர்பு மேலும் உறுதிப்பட்டுள்ளது.

கிரேக்கத் தொடர்பு

ஒருபெண் குழந்தையை இடுப்பில் தாங்கிக் கொண்டிருக்கும் நிலையிலுள்ள சுடுமண் உருவமொன்று இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவத்தின் கலையழகைக் காணும்பொழுது கிரேக்கக் கலைப்பாணியைச் சார்ந்ததாக இருக்கக் கூடுமென எண்ணத் தோன்றுகிறது.

எகிப்தியத் தொடர்பு

கி. மு. இரண்டு அல்லது முதல் நூற்றாண்டைச் சேர்ந்த அழகிய பெண் உருவங்களுடன் கூடிய பானை ஓடொன்று அழகன்குளம் அகழாய்வில் கண்டறியப்பட்டது. அவ்வோட்டில் இரு பெண்கள் ஒருவர் பக்கத்தில் ஒருவராக வலப்பக்கம் திரும்பிய நிலையில் உள்ளனர். ஒரு பெண் இடக்கையில் நீண்ட கழுத்துடைய சாடி ஒன்றினை ஏந்தியும் மற்றொரு பெண் தன் இடக்கையில் விசிறி அல்லது கண்ணாடியை ஏந்தியும் காண்பிக்கப்பட்டுள்ளனர். இவர்களை அடுத்து விசிறி ஒன்று மட்டும் பானை ஓட்டின் உடைந்த பகுதியில் காணப்படுவதால், மற்றொரு பெண்ணும் இப்பெண் உருவங்களுடன் இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம். இப்பெண் உருவங்கள் அனைத்தையும் சுற்றி சிறு சிறு குமிழ் போன்ற புள்ளி அமைப்புகள் காணப்படுகின்றன. இவ்வுருவங்கள் மெல்லியதாகவும் முன்னங்கைகளில் தடித்த வளையங்களுடன், பளுவான ஆடைகளுடனும் காணப்படுகின்றன. இடுப்பிற்குக் கீழே மட்டும் அணியப்பட்டுள்ள ஆடையில் மடிப்புகள் காணப்படுகின்றன. பெண்கள் நீள் வட்ட முகமும், திறந்த உதடுகளும் கொண்டுள்ளனர். இப்பெண் உருவங்களை எகிப்தியப் பிரமிடுகளிலுள்ள ஓவியங்களுடன் ஒப்புமைப்படுத்தலாம்.

அரேபியத் தொடர்பு

அழகன்குளத்தில் மேற்கொண்ட கள ஆய்வின்பொழுது சில சங்குகளின் உடைந்த பகுதிகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றுள் ஒன்றில் 'தீக்' என்று அரபு மொழியில் அரபு எழுத்துப் பொறிக்கப் பட்டுள்ளது. 'தீக்' என்ற அரபு சொல்லுக்கு 'சேவல்' என்று பொருள். இதன் வாயிலாக அரேபியாவுடன் பண்பாட்டுத் தொடர்போ, வணிகத் தொடர்போ கொண்டிருந்த மக்கள் இவ்விடத்தில் வாழ்ந்ததற்கான சாத்தியக் கூறுகள் தென்படு கின்றன. எனவே அழகன்குளம் அரேபியாவுடன் பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்ததெனக் கருதலாம்.

இலங்கைத் தொடர்பு

அழகன்குளத்தில் மேற்பரப்பாய்வில் கண்டெடுக்கப்பட்ட சாம்பல் நிறப்பானையோட்டில் இரண்டு சிங்கள பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவ்வெழுத்துக்கள் ஸமு...

என்னும் இரண்டு எழுத்துக்களாகும். ஐராவதம் மகாதேவன் 'ஸமுத' என்ற ஆள் பெயரைக் குறிக்கும் சொல்லாக இது இருக்க வேண்டும் என்று கருதுகிறார். ஸமுதஹா (ஆண்பால்) ஸமுதவா (பெண்பால்) என்னும் சொற்கள் இலங்கைக் குகைப் பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. எனவே அழகன் குளத்திற்கும் இலங்கைக்கும் உள்ள உறவையும் தொடர்பையும் இதன் மூலம் அறிகின்றோம்.

மௌரியர் தொடர்பு

அச்சுக் குத்தப்பட்ட வெள்ளிக் காசொன்று மௌரியப் பானை ஓடுகள் கிடைக்கும் மண் அடுக்குகளின் கீழுள்ள மண் அடுக்கில் அழகன்குளம் அகழாய்வுக்குழி எண் 10-இல் கிடைத்துள்ளது. இக்காசினை ஆய்வு செய்த ஆர். கிருஷ்ணமூர்த்தி இக்காசு நந்த அரசர்களால் கி. மு. நான்காம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டு புழக்கத்திலிருந்த காசாக இருக்கலாமெனக் கருதுகிறார். மேலும் மௌரியர் பானை ஓடுகள் (Northern Black Polished Ware) அழகன்குளத்தில் கிடைத்துள்ளமையால் தமிழ்நாட்டு மக்கள் கங்கைச் சமவெளி மக்களுடன் கொண்ட பண்பாட்டுத் தொடர்பையும், வணிகத் தொடர்பையும், மிகத் தெளிவாக அறிய முடிகிறது. இதுபோன்ற மௌரியர் பானை ஓடுகள் ஏற்கனவே பாண்டிய மன்னர்களின் தலைநகரமாகவும், துறைமுகப் பட்டினமாகவும் விளங்கிய கொற்கை அகழாய்வின் வாயிலாக கண்டறியப்பட்டமையும், சங்க இலக்கியங்கள் மோரியர் பற்றியக் குறிப்புகளைத் தருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.[9]

இலக்கியங்களும் கல்வெட்டுகளும் அழகன்குளத்தைப் பற்றி நேரடியாகக் குறிப்பிடவில்லையாயினும், அழகன்குளம் அகழாய்வில் கண்டறியப்பட்ட மேற்கூறிய தொல்பொருட்கள் அழகன்குளத்தின் வரலாற்றையும், அவ்வூர், ரோம், எகிப்து, அரேபியா, இலங்கை போன்ற அயல்நாடுகளுடனும், உள்நாட்டில் கங்கைச்சமவெளி யுடனும் கொண்ட உறவையும், வணிக மற்றும் பண்பாட்டுத் தொடர்பையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன.

அடிக்குறிப்புகள்

1. Saliyur - an Ancient Pandiya Port identified - D. Thulasiraman an article in *The Seminar on Marine Archaeology*, Published by State Department of Archaeology, Madras, 1992.
2. *Alagankulam, A Preliminary Report*, published by State Department of Archaeology, Madras 113-1992.
3. *Marungur and Alagankulam Ancient Ports of Tamilnadu* Dr. N. Marxia Gandhi. This paper is presented in the first International Conference on Marine archaeology held at Chennai on 22, 23-2-1997.
4. தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி 8 எண் 404.
5. மேலது எண் 405-408.
6. மேலது எண்.
7. 'கடிமதில் வாயில் காவலிற் சிறந்த அடல்வாள் யவனர்' - சிலம்பு 66-67.
8. 'ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ் சிறந்து ஆங்கினி தொழுமதி பொருமபுறம் 24: 31-33.
9. அகம் : 69, 251. 281; புறம் : 175.

DEPARTMENT OF ARCHAEOLOGY LIBRARY. MADRAS-20.

3

திருக்கோயிலூர்

திருக்கோயிலூர், விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூர் வட்டத்தில் தென்பெண்ணை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஊராகும். இவ்வூரினை அகநானூறு 'துஞ்சா முழவிற் கோவல்'[1] என்றும், புறநானூறு 'முரண்மிகு கோவலூர்'[2] என்றும் குறிப்பிடுகின்றன. திருஞானசம்பந்தர் இவ்வூரினை 'வளங்கொள் பெண்ணை வந்துலா வயல்கள் சூழ்ந்த கோவலூர்[3] என்கிறார். இதன் மூலம் திருக்கோவலூர் வளமுடன் விளங்கியதை அறிகிறோம். இவ்வூரின் தொன்மையான பெயர் 'கோவல்' அல்லது 'கோவலூர்' என்பதாகும். திருக்கோயிலூர் என்ற இக்காலத்து வழக்குப் பிழையாக மருவிய பெயராகும்.

முற்காலத்தில் கோவலூர் என்னும் பெயரில் மேலும் இரண்டு ஊர்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று செங்கம் பகுதியிலுள்ள மேற்கோவலூர். இவ்வூர் பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் முத்தரையரின் ஆட்சியிலிருந்தது. அண்மையில் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டத்திலுள்ள மேல் சிறுவனூரில் கண்டறியப்பட்ட நடுகல் ஒன்றில் கீழ்க் கோவலூர் என்னும் ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நடுகல் பொன்னுமுதனார் என்பவரின் சேவகர் நக்கியார் மகன் போரிட்டு வீரமரணம் அடைந்ததற்காக பல்லவ மன்னன் முதலாம் மகேந்திர வர்மனின் இருபத்தி நான்காம் ஆட்சி ஆண்டில் எடுக்கப்பெற்றது. எனவே, கீழ்க்கோவலூர் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திர வர்மன் ஆட்சியிலிருந்ததை அறிகிறோம்.

'கோவலூர்' என்னும் ஊர் 'திரு' என்னும் அடைமொழி சேர்த்து 'திருக்கோவலூர்' என வழங்கப்பட்டது. இத்திருக் கோவலூர், மலையமான்களின் தலைநகரமாக விளங்கியது. சங்க

காலத்து மலையமான் நாட்டின் எல்லையைத் திட்டவட்டமாகக் கூற இயலவில்லை. முள்ளூர்மலை என்னும் செழிப்பான நிலப் பகுதி இந்நாட்டு எல்லைக்குள் அடங்கியிருந்தது. சங்க காலத்தில் வாழ்ந்த மலையமான் திருமுடிக்காரி இவ்வூரை ஆட்சி புரிந்தான். சங்க இலக்கியங்களாகிய புறநானூறும், குறுந்தொகையும் இவனை மலையன் எனக் குறிப்பிடுகின்றன.[4] ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த தகடூரை ஆட்சிபுரிந்த அதியமான் நெடுமானஞ்சி திருமுடிக் காரியின் தலைநகரமாக விளங்கிய திருக்கோவலூர் மீது படை யெடுத்து வெற்றிகண்டான். இதனை வலியுறுத்தும் வண்ணம் திருக்கோயிலூர் அருகேயுள்ள ஜம்பை என்னுமிடத்தில் அதியமான் நெடுமானஞ்சியின் பண்டைய தமிழ் எழுத்துக்கள் பொறித்த கல்வெட்டு ஒன்று கண்டறியப்பட்டுள்ளது.[5] இக்கல்வெட்டு சமணத் துறவி ஒருவருக்கு அதியமான் நெடுமானஞ்சி கற்படுக்கை செய்தளித்தமையைக் குறிப்பிடுகிறது.

கல்வெட்டுகளில் மலையமான் நாடு 'மலாடு' என்றே மருவி வழங்கியுள்ளது. ஒரு கல்வெட்டிலும் மலையமான் நாடு என முழுமையாகக் குறிப்பிடப்படவில்லை. மலாடு என்னும் பெயரை மரூஉ மொழிக்கு எடுத்துக்காட்டாக இலக்கண உரையாசிரியர்கள் எடுத்தாளுவர்.

கடையேழு வள்ளல்களில் ஒருவனான மலையமானை, பல பாடல்களால் பாடிய புலவர், கபிலர் உயிர் நீத்த இடம் திருக் கோவலூராகும். இச்செய்தி, திருக்கோயிலூர் சிவன் கோயிலிலுள்ள முதலாம் இராஜராஜனின் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. திருக்கோயிலூரிலுள்ள குன்றொன்றில் வடக்கிருந்து நோன்பு நோற்று கபிலர் உயிர் நீத்தமையால் அக்குன்று கபிலர் குன்று என வழங்கப்படுகிறது. இக்குன்று தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இத்துறை தென்காசியில் கண்டறிந்த கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செப்பேட்டில், கபிலர், பாரி மகளிரை மணமுடித்துக்கொள்ள பரிந்துரை செய்து வேண்டிய மலையமான் மன்னன் அரசப்பக்கோன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[6]

தொண்டை மண்டலத்திலுள்ள காஞ்சி மாநகர் போன்று சமயங்களின் இருப்பிடமாக விளங்கியது திருக்கோயிலூராகும்.

இங்கு வைணவம், சைவம், சமணம் போன்ற சமயங்கள் பெருகி வளர்ந்தன. கி.பி. ஐந்தாம் அல்லது ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ ஆழ்வார்களில் முதன்மையாகக் கருதப்படும் பொய்கை, பூதம், பேய் ஆகியோர் இறைவனருளால் திருக்கோயிலூரில் ஒன்று கூடி உலகளந்த பெருமாள் மீது பிரபந்தம் பாடினார்களென கூறப்படுகிறது. திவ்விய பிரபந்தத்தின் தோற்றம் திருக்கோயிலூராகும். திருக்கோயிலூர் சைவ சமயத்திற்கும் பெயர் போன இடமாகும். எட்டு வீரட்டானங்களில் திருக்கோயிலூரும் ஒன்றாகும். இதனை நாயன்மார்கள் பலரும் பாடியுள்ளனர்.

கி.பி. 7,8-ஆம் நூற்றாண்டிற்றாண்டில் திருக்கோயிலூர் பல்லவர்களின் ஆட்சியின் கீழிருந்தது. வரலாற்றின் இடைக் காலத்தில் இவ்வூர் மலையமான் நாடாதலால் மலாடு என்றும் சேதிநாடு என்றும் வழங்கப்பட்டது. சேதிநாடு மெய்பொருள் நயனார் வரலாற்றுடன் தொடர்புடையது. சேதிநாட்டு அரசர்கள் சோழ மன்னர்களின் கீழ் குறுநில மன்னர்களாக விளங்கினர். திருக்கோவலூர் குறுநில மன்னர்கள் சோழ மன்னர்களுடன் திருமணத் தொடர்பு கொண்டிருந்தனர். மாமன்னன் முதலாம் இராஜஇராஜனின் தந்தை சுந்தர சோழன் திருக்கோயிலூர் மன்னனின் மகள் வானவன்மாதேவியை மணமுடித்துக் கொண்டார்.

முதலாம் இராஜராஜன் காலத்தில் மலைமான் நாடு மலாடான ஜனநாத வளநாடு என்று அவன் பட்டப்பெயர் கொண்டு வழங்கப் பட்டது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வரை சேதி மன்னர்கள் சோழ மன்னர்களின் கீழிருந்து இப்பகுதியை ஆண்டு வந்தனர். விஜயநகர் காலத்தில் மலையமான் நாடு திருவதி இராஜ்யம் என்று அழைக்கப்பட்டது. அச்சுதராயர் காலத்திலும் (1529-42), சதாசிவ ராயர் காலத்திலும் (1535-75) திருவதி சீர்மையென்றும் வழங்கப் பட்டது.

மலையமான் நாடு வரலாற்றின் இடைக்காலத்தில், பண்டைய ஓய்மா நாட்டின் மேற்குப் பகுதியையும், தற்போதைய சேலம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியையும், திருவண்ணாமலை மாவட்டத்தின் தெற்குப் பகுதியையும், கடலூர் வட்டத்தின் வடக்குப் பகுதியையும் உள்ளடக்கிய நாடாக விளங்கியது.

திருக்கோவலூர் நாடு 2000 பூமியைக் கொண்டதாக ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. ஒரு பூமி என்பது பத்து வேலி நிலப்பரப்பை கொண்டதாகும்.[7]

திருக்கோயிலூரின் தொன்மைச் சிறப்பையும், வரலாற்றுச் சிறப்பையும் அறியும் பொருட்டு இங்கு தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 1994 - ஆம் ஆண்டு அகழாய்வு மேற் கொண்டது. இங்கு ஆறுகுழிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. இவ்வகழாய்வு திருக்கோயிலூரில் கி.மு. முதலாம் நூற்றாண்டி லிருந்து கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரை மூன்று பண்பாட்டு காலங்களில் நிலவிய வரலாற்றுடன் தொடர்புடைய செய்திகளை அறிய உறுதுணையாகிறது.

திருக்கோயிலூர் அகழாய்வில் கண்டறியப்பட்டுள்ள ரோம் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மதுக்குடுவையின் பகுதி திருக்கோயிலூர் ரோம் நாட்டுடன் வணிகத் தொடர்பு கொண் டிருந்ததை வெளிப்படுத்துகிறது. தமிழ்நாடு சங்ககால அளவில் ரோம் நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்ததை 'யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்' என புறநானூற்று வரிகள் கூறும். திருக்கோயிலூருக்கு அருகேயுள்ள ஊர் ஒன்றில் கண்டெடுக்கப் பட்டுள்ள ரோமானியர் காசுகள், இத்தொடர்பை மேலும் உறுதி செய்கிறது.

இங்கு வாழ்ந்த மக்கள் வேளாண்மைக்கு அடுத்தபடியாக மட்பாண்டங்கள் செய்யும் தொழிலை மேற்கொண்டு வந்தனர். கருப்பு சிவப்பு நிறம் கொண்ட வழவழப்பானத் தட்டுகளையும், ரௌலட்டட் என்னும் வகையைச்சேர்ந்த உட்பகுதியில் வட்ட வடிவ நெளிநெளிவான அலங்காரங்களுடன் கூடிய தட்டுகளையும் வனைந்து பயன்படுத்தினர். வழிபாட்டிற்காகவும். சமயச் சடங்கு களை நிறைவேற்றவும் குழந்தைகள் விளையாடுவதற்கும் சுடுமண் பொம்மைகளைச் செய்து மகிழ்ந்தனர்.

வாய்க்காலிலிருந்து குடிநீர் கொண்டுவர, மக்கள் ஐம்பது சுடுமண் குழாய்களை ஒன்றுடன் ஒன்று பொறுத்தி 9.5 மீட்டர் நீளத்தில் குழாய் அமைத்துள்ளனர். ஒவ்வொரு குழாயும் 19 செ.மீ.

16.5 செ.மீ. 2 செ.மீ. அளவிளைக் கொண்டதாகும். இதுபோன்ற குழாய்கள் பெரியார் மாவட்டத்தில் உலகடம் என்ற ஊரிலும் தர்மபுரியிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலேயே குழாய் அமைத்து குடிநீர் கொண்டு வந்தமைப் பாராட்க்குரியதாகும். இங்கு வாழ்ந்த மக்கள் நெசவுத் தொழில் செய்து தங்களுடைய ஆடைகளைத் தயாரித்துக் கொண்டனர். இங்கு அகழாய்வில் கண்டெடுத்த சுடுமண் தக்களி இதற்குச் சான்றாக அமைகிறது.

மக்கள் தங்களுடைய இல்லங்களை மரம், இரும்பாலான ஆணிகள், சுடுமண் கூரை ஓடுகளைப் பயன்படுத்தி எழுப்பி யுள்ளனர். இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட செப்பு, சங்கு, கண்ணாடி ஆகிய பொருட்களான வளையல்களும், சுடுமண் காதணிகளும் பண்டைய மகளிர் அணிந்த அணிகலன்களைப் பற்றி அறிந்து கொள்ள ஏதுவாகிறது.

திருக்கோயிலூரில் சுடுமண்ணாலானப் புகைப்பான்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இப்புகைப்பான்களின் காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு முதல் 17-ஆம் நூற்றாண்டு வரையாகும். இதைப் போன்ற புகைப்பான்கள் திருக்காம்புலியூரிலும், உறையூரிலும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் காலம் கி. பி. நான்காம் நூற்றாண்டு வரையாகும். தமிழ் நாட்டில் கி.பி. நான்காம் நூற்றாண்டு முதல் 17-ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்த புகைப்பான்கள் அகந்தெடுக்கப் பட்டுள்ளன.

புகைப்பதற்குத் தேவையான புகையிலை முதன் முதலாக கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தான் போர்ச்சுக்கீசியரால் இந்தியா விற்குக் கொண்டு வரப்பட்டது. புகையிலையை முதன் முதலில் பயிரிட்ட நாடு தென் அமெரிக்காதான். ஆனால் புகைப்பிடிக்கும் வழக்கம் மக்களிடையே இருந்ததற்கு சங்க இலக்கியத்திலும் பிற இலக்கியங்களில் கூட சான்றுகள் இல்லை. புகைப்பதற்கு மக்கள் எப்பொருளைப் பயன்படுத்தினரென்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

திருக்கோயிலூரில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள தொல்பொருட்களையும், வரலாற்றுச் செய்திகளையும் கொண்டு திருக்கோயிலூர் சங்க கால அளவில், வரலாற்றுச் சிறப்புமிக்க தலைநகரமாக விளங்கியதென அறியலாம்.

அடிக்குறிப்புகள்

1. அகம் 35
2. புறம் 99
3. திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து வெளியீடு-1950
4. புறம், 154, 158, குறுந்தொகை, 312
5. தினமணி, 12-10-1981
6. Natana Kasinathan, Collected papers (Studies in Tamil Culture) P : 91, (Pub-1990)
7. Epigraphia Indica, Vol. No : 7. K.P. No. 146

உளராய்வு

STATE DEPARTMENT OF ADCH
LIBRARY
10162
MADRAS-20

திருச்சிராப்பள்ளி

பழம்பெருமை

தமிழ்நாட்டிலுள்ள குறிப்பிடத்தக்க நகரங்களுள் ஒன்று திருச்சிராப்பள்ளி. இந்நகரம் தமிழ்நாட்டின் மையப்பகுதியில் அமைந்துள்ளதால் தமிழ்நாட்டின் இதயம் என மக்கள் குறிப்பிடுவர். இப்பகுதியில் பழைய கற்காலத்திற்கும், புதிய கற்காலத்திற்கும் இடையிலுள்ள நுண்கருவிகளைப் பயன்படுத்திய காலத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. திருச்சிராப்பள்ளி இரயில் சந்திப்பின் அருகிலுள்ள நுண்அலை ஒலிபரப்பு நிலையத்தின் (micro wave station) அருகிலுள்ள திடலில் நுண்கருவிகளை இந்நூலாசிரியர் கண்டுபிடித்தார். இந்நுண்கருவிகளின் காலம் சுமார் கி.மு. 3000 ஆண்டாகும். இக்கண்டுபிடிப்பிலிருந்து கி.மு. 3000 ஆண்டிலேயே திருச்சிராப்பள்ளியில் மக்கள் வாழத் தொடங்கி விட்டனர் என அறிகிறோம்.

இலக்கியம் காட்டும் வரலாறு

சங்க இலக்கியங்களில் திருச்சிராப்பள்ளியைப் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை. ஆனால் கடைச்சங்க நூல்களுள் ஒன்றாகிய அகநானூற்றில், 'கறங்கிசைவிழவின் உறந்தைக்குணாது-நெடும் பெருங்குன்றம்'[1] என்று உறையூர்க்குக் கிழக்கே ஒரு குன்று கூறப்பட்டுள்ளது. அதன் பெயர் அது அமைந்துள்ள ஊரின் பெயரி அப்பாடலில் குறிக்கப்படவில்லை. ஆயின் சைவ சமயக் குரவர்களாகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் அக்குன்றின்மேல் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது பாடியுள்ள பதிகங்களிலே அக்குன்றினைச் சிராப்பள்ளி என்ற பெயரால் அழைத்துள்ளதைக் காண்கிறோம்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆட்சிபுரிந்த பல்லவ வேந்தனாகிய முதலாம் மகேந்திரவர்மன் சிராப்பள்ளிப் பெருங்குன்றை ஓரிடத்தில் குடைந்து சிவபெருமானுக்குக் கோயில் எடுப்பித்தான். வடமொழியில் சிறந்த புலமைப் பெற்றிருந்த அவ்வேந்தன் எட்டு சுலோகங்கள் இயற்றி அவற்றைத் தான் எடுப்பித்த சிராப்பள்ளி சிவன் கோயிலில் பொறித்துள்ளான். அச்சுலோகங்களிலிருந்து தான் புறச் சமயத்திலிருந்து திரும்பிச் சிவநெறியைக் கடைப்பிடித்துச் சைவனாகியதையும் சிராப்பள்ளிக் குன்றின் மேற் குகைக் கோயிலிற் சிவலிங்கத்தை எழுந்தருளி வித்ததையும் குறிப்பிட்டுள்ளான். இச்செய்திகளை நுணுகி நோக்குமிடத்து அம்மன்னனது ஆட்சியின் பிற்பகுதியிலே தான் சிராப்பள்ளிக் குன்றிற் சிவாலயம் அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதும் அதற்கு முன்னர் அவன் சமண சமயத்தை தழுவியிருந்த காலத்தில் அங்கே சிவாலயம் இருந்திலது என்பதும் புலனாகின்றன.

ஊர்ப்பெயர்க்காரணம்

சிராப்பள்ளிக் குன்றின் மேலுள்ள உச்சிப்பிள்ளையார் கோயிலுக்குப் பின்புறம் சமண முனிவர்களின் கற்படுக்கைகள் பல கற்தலையணைகளோடு இருத்தலை இன்றும் காணலாம். இத்தலையணைகளில் அவற்றை உபயோகித்த சமண முனிவர் களின் பெயர்கள் வரையப் பெற்றிருக்கின்றன. அவ்வெழுத்துக் களைக் கொண்டு அவற்றின் காலத்தை கி.பி. ஐந்தாம் நூற்றாண் டெனக் கொள்ளலாம். எனவே கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் குன்றின் மேல் சில சமண முனிவர்கள் தங்கித் தவம் புரிந்து வந்துள்ளமை அறியப்படுகிறது. அவர்களுள் 'சிரா' என்ற முனிவர் ஒருவர் இருந்தமை அங்குள்ள கல்வெட்டுகளால் அறியப்படு கின்றது.[2] அம்முனிவர் அத்தவப்பள்ளியின் தலைவராய் இருந்தமைப் பற்றி அது சிராப்பள்ளி என்று முதலில் வழங்கத் தொடங்கி அவர் காலத்திற்குப் பின்னரும் அப்பெயரோடு நின்று நிலவுவ தாயிற்று.

நாலவரும் சிராப்பள்ளியும்

சைவ சமயக்குரவர்களாகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக் கரசரும் தம் காலத்தில் வழங்கி வந்த சிராப்பள்ளி என்ற

அப்பெயரைத் தாம் அக்கோயிலிற் பாடியருளிய பதிகங்களிற் குறிப்பிட்டுச் செல்லுவராயினர். ஆகவே 'சிரா' என்ற சமண முனிவரது தவப்பள்ளியின் பெயராயிருந்த சிராப்பள்ளி என்பது பின்னர் முதலாம் மகேந்திரவர்மன் அங்கு எடுப்பித்த சிவன் கோயிலின் பெயராக மாறி விட்டமை அறியத் தக்கது. இக் கோயிலின் பெயரே பின்னர் 'திரு' என்ற அடைமொழி சேர்த்து 'திருச்சிராப்பள்ளி' என்று ஊருக்கும் பெயராக மாறிவிட்டது.

திருச்சிராமலைக் குன்றின் மேல் மகேந்திரவர்மன் அமைத்த குடவரைக் கோயிலில் சிராமலையந்தாதி பொறிக்கப்பட்டுள்ளது. இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக்கல்வெட்டு சிராமலையைப் பொன்மலை என்றும் திருமலை என்றும் பல பாடல்களில் குறிப்பிடுகிறது. இவ்வந்தாதியின் முதல் பாடல் உறையூர் நகரம் என்றும் சிராப்பள்ளி குன்று அதன் அயலது என்றும் சிராமலையின் பண்டைய நிலையைச் சுட்டுகின்றது.

சிற்றம்பரே சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி மேற்குகைக் கோயிலில் முதலாம் இராஜ ராஜ சோழனின் 16-ஆம் ஆட்சி ஆண்டுக் (கி.பி. 1001) கல்வெட் டொன்றுள்ளது. அக்கல்வெட்டு விக்ரமசிங்க மூவேந்த வேளான் என்பவன் விளத்தூர் நாட்டு ஆலங்குடியில் நிலம் விலைக்கு வாங்கி அதனை உறையூர்க் கூற்றத்துச் சிற்றம்பரிலுள்ள சிராப் பள்ளிக் கோயிலுக்கு அளித்தனன் என்று கூறுகிறது. அதனை ஆராயுமிடத்து அத்தலைவனால் இறையிலி நிலம் வழங்கப் பெற்ற சிவன் கோயில் சிராப்பள்ளி என்னும் பெயருடையது என்பதும் அக்கோயில் அமைந்துள்ள நகர்சிற்றம்பர் என்ற பெயருடையது என்பதும் அவ்வூர் உறையூர் கூற்றத்திலுள்ளது என்பதும் நன்கு புலனாகும். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இரண்டாம் வரகுண பாண்டியனது ஆட்சியின் 11-ஆம் ஆண்டில் அக்கோயிலிற் பொறிக்கப் பெற்றுள்ள வேறொரு கல்வெட் டொன்றும் ஊரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது 'சிற்றம்பர் நகர் எனவும் 'சிற்றம்பர்பதி' எனவும் குறிப்பிடுகிறது.

தமிழ்நாட்டில் அம்பர், இன்னம்பர், நல்லம்பர் என்ற ஊர்கள் இருந்ததைப் பலர் அறிவர். அவ்வூர்களைப் போல சிற்றம்பர் என்ற ஊரும் இருந்ததுள்ளது. இக்காலத்தில் அவ்வூரின் பெயர்

மறைந்தொழிந்தது. அவ்வூர் திருச்சிராப்பள்ளி என்னும் பெயருடன் இப்பொழுதும் வழங்குகிறது. எனினும் ஆங்கிலேயர்களது பேச்சு வழக்கின் காரணமாக 'டிரிச்சி' என்றழைக்கப்பட்டு திருச்சி என்று இன்றும் மக்களது பேச்சு வழக்கில் இருந்து வருகிறது.

காலப் போக்கில்

இதுகாறும் கூறியதிலிருந்து பண்டைக் காலத்தில் சிராப் பள்ளி என்பது 'சிரா' என்ற சமண முனிவனது தவப் பள்ளியின் பெயராயிருந்ததென்பதும் பிறகு பல்லவ வேந்தனாகிய முதலாம் மகேந்திரவர்மன் அங்கு எடுப்பித்த சிவன் கோயிலின் பெயராயிற் றென்பதும், அதன் பின்னர் அத்திருக்கோயில் அமைந்துள்ள நகரின் பெயராக வழங்கி வருகின்றதென்பதும் கோயிலின் பெயர் நகரின் பெயராகப் போய்விட்டமையின் 'சிற்றம்பர்' என்னும் அந்நகரின் இடைக்காலப் பெயர் மறைந்துவிட்டதென்பதும் நன்கு விளங்கும். அதுமட்டுமின்றிச் திருச்சிராப்பள்ளி என்ற பெயர் ஒரு ஊரின் தலைவனுக்கும் இருந்ததாக வீரபாண்டியனின் சிவகாசி செப்பேட்டின் மூலம் அறிகிறோம்.[3] அச்செப்பேட்டில் பெண் யானையை வலமாக நடத்தி சென்றவன் முள்ளிராஷ்டிரத் தில் குலக்கிராமம் என்ற ஊரின் தலைவன். அவன் பெயர் திருச்சிராப்பள்ளி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து பன்னிரண்டாம் நூற்றாண்டு இறுதி வரை திருச்சிராப்பள்ளி பல்லவ, சோழ, பாண்டிய மன்னர் களின் ஆளுகையின் கீழ் இருந்தது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் போசளர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. போசளர்கள் திருச்சிராப் பள்ளியை அடுத்த கண்ணனூரில் தலைநகர் அமைத்து சோழ நாட்டின் பகுதியை ஆளத் தொடங்கினர்.

பாண்டிய மன்னன் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1251-71) போசளரைத் தாக்கி முன்னோர் ஆட்சிக்குட் பட்டிருந்த சோனாட்டுப் பகுதியைத் தன்னடிப்படுத்த எண்ணி னான். அதனை நிறைவேற்றும் பொருட்டுப் பெரும்படையுடன் சென்று அப்போசளர்க்குரிய நகரமாகத் திருச்சிராப்பள்ளிக்கு அருகிலிருந்த கண்ணனூர் கொப்பத்தை முற்றுகையிட்டு வெற்றி

பெற்றான். போசளர்கள் மூன்றாம் இராசராசசோழன் காலம் முதல் தமக்குரியதாக வைத்திருந்த கண்ணனூர் கொப்பத்தை இழந்து விட்டனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் சேரன்மாதேவியிலுள்ள முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 20-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு (கி.பி. 1288) இவன் மலை நாடு, சோழ நாடு' ஈழ நாடு, தொண்டை நாடு என்பவற்றை வென்றான் என்று குறிப்பிடுகிறது. சோழ நாடு, நடு நாடு, தொண்டை நாடுகளி லுள்ள பல ஊர்களில் இவன் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. எனவே அந்நாடுகள் எல்லாம் இவன் ஆட்சிக்குட்பட்டிருந்தன என்பது தோற்றம். திருச்சிராப்பள்ளி சோழ நாட்டில் இருந் தமையால் இவனது அரசாட்சி காலத்தில் (கி.பி. 1269 முதல் 1311 வரை) இவனுடைய ஆளுகையின் கீழிருந்தது.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் திருச்சிராப்பள்ளி விஜய நகரப் பேரரசின் ஆளுகையின் கீழ் வந்தது. விஜயநகரப் பேரரசன் இரண்டாம் தேவராயன் இறந்ததும் கலிங்கத்து மன்னன் கபிலேசுர கஜபதி விஜய நகரப் பேரரசன் பல இடங்களையும் கைப்பற்றி இறுதியில் திருச்சிராப்பள்ளியையும் கைப்பற்றினான். கலிங்க மன்னன் கபிலேகரகஜபதிக்குப் பிறகு (கி.பி. 1463-64) சாளுவ நரசிம்மனின் ஆட்சி காவிரியின் வடகரையோடு தடைப்பட்டு நின்று விட்டது. அவனுக்குப் பிறகு விஜய நகர பேரரசை மூறை கேடாகக் கைப்பற்றி அரசாண்ட நரச நாயக்கன் கி.பி. 1496-இல் தன் ஆதிக்கத்தைக் கன்னியாகுமரி வரைப் பரப்பினான்.

விஜயநகர பேரரசுக்குப் பின்னர் ஆட்சி செலுத்திய விஸ்வநாத நாயக்கன் (கி. பி. 1529-64) காலத்தில் திருச்சிராப் பள்ளி நாயக்கர் ஆட்சி கீழ் வந்தது. முதலாம் சொக்கநாத நாயக்கன் காலத்தில் (கி.பி. 1659.1682) திருச்சிராப்பள்ளி மதுரை நாயக்கர்களின் தலைநகரமாக்கப்பட்டது. முஸ்லீம்களும் மராட்டி யர்களும் திருச்சிராப்பள்ளியின் மேல் படையெடுத்தனர். ருஸ்தும்கான் என்ற முஸ்லீம் நாடோடி ஒருவன் கி.பி. 1682-இல் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றி நாயக்கரின் அரியணையில் இராண்டாண்டுகள் அமர்ந்து இன்புற்றான். சொக்கநாத நாயக்கன்

ஆட்சியின் இறுதியில் மைசூர் படைகள் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டன. ஆனால் செஞ்சி, தஞ்சாவூர், மராட்டிய மன்னரின் துணையைக் கொண்டு சொக்கநாதன் மைசூர் படைகளைத் திருச்சிராப்பள்ளியிலிருந்து விரட்டினான்.

கி.பி. 1732-இல் விஜயரங்க சொக்க நாதனின் மனைவி மீனாட்சி அரியணை ஏறினாள். இவள் காலத்தில் ஆற்காட்டு நவாபின் மகன் சப்தரலியும், சந்தாசாகிபும் திருச்சிராப்பள்ளியின் மேல் படையெடுத்தனர். கி.பி. 1736-இல் மீனாட்சி தன்னுடைய உரிமை முழுவதையும் சந்தாசாகிபுவிடம் ஒப்படைத்தாள். திருச்சிராப்பள்ளி சந்தாசாகிபுவின் ஆட்சியின் கீழ் வந்தது. டியூப்ளேவும் சந்தாசாகிபும், முஜாபர்ஜங்கும் கி.பி 1749-இல் ஒன்றாகக் கூடி அன்வாருதீன்கானை ஆம்பூரில் யோரில் கொன்றார்கள். அன்வாருதீன்கான் மதன் முகமதலி திருச்சிராப்பள்ளிக்கு ஓடி விட்டான். அவனைத் துரத்திக் கொண்டு பிரஞ்சுப்படையொன்று திருச்சிராப்பள்ளியை நோக்கி விரைந்தது. இப்போர் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுகாரருக்கும் நடந்தது. திருச்சிராப்பள்ளியை நோக்கி விரைந்த பிரெஞ்சு அணிகள் தஞ்சாவூரிலேயே களைத்துப் போயின. அதே சமயம் ஆங்கிலேயரின் துணையைப் பெற்ற முகமது அலியின் எதிர்ப்பும் கடுமையாயிற்று. ஆங்கிலேயரின் படைவலி முழுதும் தன்வசம் வந்து அடையும் வரையில் முகமதுஅலி பிரெஞ்சுகாரரிடம் சமாதானப் பேச்சுப் பேசி காலம் தாழ்த்தி வந்தான். அவனுடைய யுக்தியை டியூப்ளே 1751-ஆம் ஆண்டு மாதம் தான் நன்கு உணர்ந்தான். உடனே தானும் லா என்பவன் தலைமையில் திருச்சிராப்பள்ளியை நோக்கி ஒரு படையை ஏவினான். திருச்சிராப்பள்ளி முற்றுகை நீடித்துக் கொண்டே போயிற்று. ஆங்கிலேயருக்கு மைசூர், தஞ்சாவூர் மன்னர்களும் மராட்டிய தலைவன் முரராரிராவும் படைத்துணையை அனுப்பி வைத்தனர். ராபர்ட் கிளைவ் வங்கத்திலிருந்து ஆங்கிலப்படை ஒன்றை திரட்டிக்கொன்று தமிழகத்தை நோக்கி கொண்டு வந்து ஆற்காட்டை முற்றுகையிட்டு கைப்பற்றிக் கொண்டான். அவனிடமிருந்து தன் தலைநகரை மீட்டுக் கொள்வதற்காக சந்தாசாகிபு ஆற்காட்டுக்கு ஒரு சேனையை அனுப்பினான். கி.பி. 1751-இல் கிளைவ் வெற்றி பெற்றான். பிரெஞ்சு படைத்தலைவன் லா ஆங்கிலேயரின் வெற்றியைக் கண்டு

திருவரங்கத்திற்கு ஓடி ஒளிந்தான். திருவரங்கத்தை வளைத்துக் கொள்ளுமாறு கிளைவ் ஆணையிட்டான். லாவும் அவனுடைய படையினரும் ஆங்கிலேயரால் சிறைபிடிக்கப்பட்டனர். சந்தா சாகிபின் தலை தரையில் உருண்டது. டியூப்ளே ஏங்கி நின்றான். டியூப்ளே எடுத்த முயற்சியை தளர மனமில்லாதவனாய் மீண்டும் கி.பி. 1752-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டான்.

மேற்கூறிய வரலாற்று நிகழ்ச்சிகளுக்கும் பின்னர் கி.பி. 1801-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ் வந்தது. 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ஆம் நாள் இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் தமிழ்நாட்டின் மாவட்டங்களில் ஒன்றாக திருச்சிராப்பள்ளி திகழ்ந்து வருகிறது.

திருச்சிராப்பள்ளியிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் வரலாறு கூறும் கல்வெட்டுகளும், ஆலயங்களும், சிற்பங்களும்' செப்புத் திருமேனிகளும், ஓவியங்களும், கட்டடங்களும் ஊரின் பழமையையும், சிறப்பையும் எடுத்துரைக்கும் வண்ணம் உள்ளன.

அடிக்குறிப்புகள்

1. அகம் 4.
2. *Annual Report on South Indian Epigraphy* for the year 1937-8, Page 78.
3. பாண்டியர் செப்பேடுகள் பத்து, தமிழ் வரலாற்றுக் கழகம், 1967.

STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
MADRAS 28.

கோயிலாய்வுகள்

5

வரலாற்றில் அல்லூர்

ஆற்றங்கரைகளில் தோன்றிய நாகரிகங்களை வரலாற்றில் பரவலாகக் கண்டிருக்கிறோம். சிந்து நதிக்கரையில் தோன்றிய சிந்து சமவெளி நாகரிகமும், யூபிரட்டஸ், டைகிரிஸ் நதிக்கரைகளில் தோன்றிய மெசபடோமியா நாகரிகமும், நைல் நதிக்கரையில் தோன்றிய எகிப்திய நாகரிகமும் உலக வரலாற்றில் குறிப்பிடத் தக்க இடத்தைப் பெற்றுள்ளன. பொதுவாக, ஆற்றங்கரையில் எழுந்த ஊர்கள் தனக்கென ஒரு வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டுள்ளன. அத்தகைய ஊர்களில் ஒன்றுதான் அல்லூர். இவ்வூர் திருச்சி மாவட்டத்தில் காவிரியின் தென்கரையில் திருச்சியிலிருந்து கருவூர் செல்லும் சாலையில் 11 கி.மீ. தொலைவில் உள்ளது.

அல்லூரின் அமைவிடமும், அங்கு பண்டைய மக்கள் வாழ்ந்த இடமும், அங்கு அண்மையில் கண்டெடுக்கப்பட்ட மிகப்பழமையான மட்கலங்களின் சிதைவுற்ற பகுதிகளும், முதுமக்கள் தாழியும், இங்கு எழுந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களும், வரலாற்றில் அல்லூர் எத்தகைய முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது என அறிய ஏதுவாக இருக்கின்றன.

இவ்வூரின் தெற்கே வயல்களுக்கிடையில் ஒரு பகுதி மண் மேடிட்டுள்ளது. இப்பகுதியை இவ்வூர் மக்கள் அறுவடைக் காலங்களில் நெல்லடிக்க களமாகப் பயன்படுத்துகின்றனர். இக்களத்திற்கு 'பழையவூர் களம்' என்று பெயர். இப்பெயர் நம் சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது. இப்பெயரிலிருந்தே இப்பகுதியில் பண்டைக்காலத்தில் ஊர் ஒன்று இருந்திருக்க வேண்டுமென ஊகிக்கமுடிகிறது. பண்டைய மக்கள் இங்குதான்

வாழ்ந்திருக்கவேண்டும். ஏனெனில், மக்கள் இப்பகுதியில் வாழ்ந்திருந்தனர் என்பதற்குச் சான்றாக அவர்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களின் சிதைவுகள் இங்கு அதிகமாகக் கிடைக்கின்றன. காலப்போக்கில் இங்கிருந்த மக்கள் இப்பகுதியை விட்டு நீங்கி தற்பொழுது அல்லூர் உள்ள இடத்தில் தங்களது குடியிருப்புக்களை அமைத்திருக்கின்றனர்.

தற்போது 'பழையவூர் களம்' என்னும் பகுதி அல்லூரில்தான் உள்ளது. இப்பகுதியை ஆய்வு செய்ததில் குறிப்பிடத்தக்க அளவில் கருப்பு-சிவப்பு நிறம் பொருந்திய மட்பாண்டங்களின் சிதைவுகள் கண்டறியப்பட்டன. இம்மட்பாண்டங்களின் உட்புறமும், வெளிப்புற விளிம்பும் கருப்பு வண்ணம் உடையனவாகவும், மற்ற வெளிப் பகுதி முழுவதும் சிவப்பாகவும் இருக்கும். எனவே இதை கருப்பு-சிவப்பு மட்பாண்டங்களென்பர். எகிப்து நாட்டில் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த மக்கள் இவ்வகையைச் சார்ந்த மட்பாண்டங்களை பெருமளவில் கையாண்டனர் எனத் தெரிகிறது. ஆனால் அல்லூரில் கிடைக்கும் மட்பாண்டங்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டுவரை தமிழக மக்கள் பயன்படுத்தி வந்த மட்பாண்ட வகைகளைச் சார்ந்தவை. இம்மட்பாண்டங்கள் தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க பழமையான இடங்களில் எல்லாம் காணப்படுகின்றன. இக்கருப்பு-சிவப்பு நிறம் பொருந்திய மட்பாண்டங்களைத் தமிழக மக்கள் உபயோகப்படுத்திய பொழுது ரோம் நாட்டு மக்கள் 'ரௌலெட்டட்' இனப் பானை ஓடுகளையும், 'அரிடைன்' இனப் பானை ஓடுகளையும், 'ஆம்பரோ' என வழங்கும் மதுவை சேமித்து வைக்கும் குடங்களையும் பயன்படுத்தி வந்தனர் என்பது அரிக்கமேட்டிலும், கருவூரிலும் மற்ற பிற இடங்களிலும் நடைபெற்ற அகழாய்வுகளிலிருந்து தெரிய வருகிறது. இக்கருப்பு-சிவப்பு நிறம் பொருந்திய மட்பாண்டங்களை முதுமக்கள் தாழிகளிலும், பெருங்கற்சின்னங்களிலும் காணலாம்.

பழையவூர் களத்திற்கு கிழக்கே 'வண்ணான் மேடு' என்ற இடமொன்றுள்ளது. இவ்விடமும் அல்லூரைச் சேர்ந்தது. இவ்விடத்தில் ஓடும் ஒரு சிற்றோடையில் சலவைத் தொழிலாளிகள் தற்பொழுது துணி துவைக்கின்றனர். அதனால் இவ்விடத்தை 'வண்ணான் மேடு' என அழைக்கின்றனர். இவ்வூர் அருகே உள்ள

வயலில் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் பூசணிச்செடிகள் பயிரிடுவதற்கு வேண்டிய தண்ணீர் தேவையின் காரணமாக நான்கு அடி ஆழத்திற்கு ஒரு விவசாயி குழியை வெட்டினார். அக்குழியின் நடுவில் ஒரு முதுமக்கள் தாழி இருப்பதைக் கண்டு, அதை சிதைவுப் படுத்தாமல் வயலின் தென்புறம் எடுத்து வைத்துள்ளார். இன்றும் இம்முதுமக்கள் தாழி அழியாத நிலையிலுள்ளது. முதுமக்கள் தாழியைப் பற்றி யாவரும் அறிவர். இத்தாழி மிகப்பெரிய அளவிலே குவிந்த அடியும், அகன்ற வாயும் உடையதாக இருக்கும். இத்தாழியில் இறந்தவரின் உடலையோ அல்லது எலும்புகளையோ வைத்து மண்ணிற்கடியில் புதைப்பது பண்டைய வழக்கம். மேற்குறிப்பிட்ட முதுமக்கள் தாழியைக் கண்ணுற்ற பொழுது, அத்தாழியில் இடப்பட்டவரின் இடுப்பு எலும்புத்துண்டுகளையும், கருப்பு-சிவப்பு நிறம் பொருந்திய சிதைந்த நிலையிலுள்ள சில கலயங்களையும் காண நேர்ந்தது. இவைப்பற்றி அங்குள்ள மக்களை கேட்டபொழுது இத்தாழியில் எலும்புகளும், சிறுகலயங்களும், சுடுமண்ணாலான உடுக்கை ஒன்றும் இருந்ததாகக் கூறுகின்றனர். பெரும்பாலும் முதுமக்கள் தாழிகளில் மேற்குறிப்பிட்ட ஈமச் சடங்கு பொருட்களை வைப்பது பண்டைய வழக்கம்.

இத்தாழிகளை 'முதுமக்கள் தாழி' என்றும் 'முதுமக்கட் சாழ்' என்றும் நம் இலக்கியங்கள் கூறுகின்றன. பண்டைக் காலத்தில் 'ஆசிவகர்' என்ற சமணப் பெரியோர், தாழிகளில் அமர்ந்து உயிர் போகும் வரை தவமிருப்பர் என்று அறிகின்றோம். எனவேதான் இத்தாழிகளை முதுமக்கள் தாழி என்று அழைத்தனர் போலும், ஒரு சோழ மன்னன் சிறப்பாக அரசு புரிந்தான். அவன் ஆட்சியில் எவருக்கும் மரணம் என்பதே ஏற்படவில்லை. சோழ மன்னனுக்குப் பயந்து எமன் எங்கோ சென்று ஒளிந்துகொண்டான். வயது முதிர்ந்தோர் கூனிக்குறுகிப் போயினர். எனவே, அவர்களை வைப்பதற்கு, சோழ மன்னன் முதுமக்கட் சாடி வகுத்தான். இவனை ஒட்டக்கூத்தர் மூவருலாவில் 'மாறழிந்தோடி மறலி யொலிப்ப முதுமக்கட் சாடி வகுத்த தராபதி' என்று குறிக்கிறார். இவ்விலக்கிய செய்திக்கு ஏற்றாற்போல், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கொற்கை என்னும் ஊரில் வாழும் மக்கள் ''முதுமக்கள் தாழியைப் பற்றி' இன்றளவும் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்கள்.

பொதுவாக வயது முதிர்ந்தவர்கள் முதுமையின் காரணமாக கூனிக் குறுகும் பொழுது அவர்களை உயிருடனேயே தாழிகளில் வைத்து அவர்களுக்கு வேண்டிய உணவையும், மற்ற தேவையான பொருட்களையும் வைத்து பண்டைய நாட்களில் புதைத்ததாக இங்குள்ள மக்கள் கூறுகின்றனர். இங்குள்ள மக்கள் இத்தாழி களை 'முதுமக்கா தாழி' என்றும், மதமதக்க தாழி' என்றும் அழைக்கின்றனர். பண்டைக்கால மக்கள் இறந்தவர்களைத் தாழியி லிட்டுப் புதைத்தனரென்பதை 'சுடுவோரிடுவோர் தொடுகுழிப் படுப்போர், தாழிவயினடைப்போர், தாழியிற் கவிப்போர்' என்று மணிமேகலையில் சக்கரவாளக் கோட்டமுரைத்த காதையில் உள்ள வரிகளின் மூலம் அறிகிறோம்.

அல்லூரிலுள்ள வண்ணான் மேட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ள முதுமக்கள் தாழி கையால் செய்யப்பட்டது. சிவப்பு நிறம் கொண்ட இத்தாழியில் வெளிப்பகுதி வழவழப்பின்றி மிருதுவாக தோற்ற மளிக்கிறது. இத்தாழி 52 செ.மீ. விட்டம் கொண்ட வாயினையும், 90 செ.மீ. உயரத்தினையும் 160 செ.மீ. சுற்றளவு கொண்ட கழுத்துப் பகுதியினையும் கொண்டு விளங்குகிறது. இத்தாழியின் கழுத்துப் பாகத்திற்குக் கீழ் அதாவது தோள் பகுதியில் குயவனின் பெருவிரல் பதிக்கப்பெற்ற அலங்கார வரி ஒன்று காணப்படுகிறது. இத்தாழியிலுள்ள சில கலயங்கள் சக்கரத்தால் வனையப் பெற்றவை.

இத்தாழியில் எலும்புக்கூட்டின் பகுதிகள் காணப்படுவதாலும், மண்டை ஓடு இல்லாமலிப்பதாலும், இறந்தவர் உடலை ஓரிடத்தில் புதைத்த பின்னர் பல நாட்கள் கழித்து, சதைப்பற்று நீங்கிய பின்னர் எலும்புகளை எடுத்துத் தாழியில் வைத்து புதைத் திருக்கலாமென கருத வேண்டியிருக்கிறது.

இத்தாழியினைப் போன்று, திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிச்சநல்லூர், கொற்கை, காயல், கழுகுமலை, வாசுதேவநல்லூர் கரிவலம்வந்தநல்லூரிலும், திருச்சி மாவட்டத்தில் கோட்டம்பட்டி யிலும், கோயம்புத்தூரில் கருமண்ட செல்லிபாளையத்திலும், தென்னாற்காட்டில், செங்கமேட்டிலும், வடாற்காட்டில், தக்கோலம் என்ற இடத்திலும், தஞ்சையில் கீழப்பெரும்பள்ளம், மணிக்கிராமம்

வாணகிரியிலும், சென்னைக்கு அருகே தாங்கலிலும், செங்கற்பட்டில் அமிர்தமங்கலத்திலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அல்லூரிலுள்ள 'பழையவூர் களத்தில்' கண்டெடுக்கப்பட்ட கருப்பு சிவப்பு நிறம் பொருந்திய மட்பாண்டங்களின் சிதைவுகளையும், சிவப்புநிறம் பொருந்திய மட்பாண்டங்களின் சிதைவுகளையும், வழவழப்பாயுள்ள கருப்பு நிறம் பொருந்திய பானை ஓடுகளையும், அல்லூரிலுள்ள முதுமக்கள் தாழியையும் கூர்ந்து நோக்கும்பொழுது கி.பி. முதலிரண்டு நூற்றாண்டிலேயே இப்பகுதியில் மக்கள் வாழத்தொடங்கிவிட்டனர் எனக் கருதலாம். இங்குள்ள 'பழையவூர் களப்பகுதியை' அறிவியல் முறைப்படி அகழாய்வு செய்வோமானால் வரலாற்றிற்குத் துணைபுரியும் அரிய பெரிய சான்றுகள் கிடைக்குமென்பதில் ஐயமில்லை.

அல்லூரில் பத்திற்கும் மேற்பட்ட ஆலயங்கள் உள்ளன. இவைகளில் வரலாற்றுச் சிறப்புடன் திகழ்வது இரண்டு ஆலயங்களாகும். ஒன்று பசுபதீஸ்வரர் ஆலயம், மற்றொன்று பஞ்சநதீஸ்வரர் ஆலயம். இவ்வாலயங்களில் மொத்தம் 21 கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் முதலாம் பராந்தகச் சோழன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், மூன்றாம் குலோத்துங்கன் போன்ற சோழப் பேரரசர்கள் காலத்திலும், பாண்டியப் பேரரசனான முதலாம் குலசேகரனுடைய காலத்திலும் பொறிக்கப்பட்டவை.

பசுபதீஸ்வரர் ஆலயத்திலுள்ள முதலாம் பராத்தகனின் (கி.பி. 907-955) 18-ம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு அல்லூர் உறையூர் கூற்றத்திலிருந்தாகக் குறிப்பிடுகிறது. உறையூர் சங்ககால சோழர்களின் தலைநகரமாக விளங்கியதை யாவரும் அறிவர். உறையூர் என்ற பழமையான பெயர் இன்றும் மாறாமலிருப்பது போற்றத் தக்கதாகும். மேலும் அல்லூர் உறையூருக்கு அண்மையில் உள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். கி. பி. 925-ஆம் ஆண்டு அல்லூர் எனக் குறிக்கப்பட்ட இவ்வூரின் பெயர் இன்றளவும் மாறாமல் இருப்பது வியப்பினை அளிக்கக்கூடியதாக உள்ளது. இவ்வாறு உறையூருக்கும், அல்லூருக்கும் பண்டையப் பெயரே தொடர்ந்து நிலைபெற்று, அவ்வூர்களின் தொன்மையைப் பறைசாற்றுகின்றன. இவ்வாலயத்தில் உறையும் இறைவன்

தற்பொழுது பசுபதீஸ்வரர் என அழைக்கப்படுகிறார். இம்மன்னனின் கல்வெட்டில் இவ்வாலயத்தில் உறையும் இறைவன் அல்லூர் நக்கர் கோயில் மஹாதேவர் எனக் குறிக்கப்பட்டுள்ளார்.[1]

பராந்தகனின் மூன்றாம் ஆட்சியாண்டு கல்வெட்டு, வீரசோழ இளங்கோவேளார் என்பவரின் துணைவி கங்கமாதேவியார் தன்னுடைய கணவனின் சிதையில் உடன்கட்டை ஏறுவதற்கு முன்னர் நக்கர்கோயில் மஹாதேவருக்கு ஒரு விளக்கெரிக்க ஒரு நிலத்தை நன்கொடையாக அளித்தாள் என்ற செய்தியை அறிவிக்கிறது.[2] வீரசோழ இளங்கோவேளார் என்பவர் கொடும்பாளூர் வேளிர் குலத்தைச் சேர்ந்தவர். இவ்வேளிர்கள் சோழர்களுக்குக் கீழ்ப்படிந்து கொடும்பாளூர் பகுதியில் குறுநில மன்னர்களாக விளங்கினார்கள். பராந்தகனுக்கும், பாண்டியருக்கும் நடந்த போரில் இவ்வேளிர்கள் பராந்தகனுக்கு மிகவும் துணைபுரிந்தனர். பராந்தகனின் மக்களுள் ஒருவனான அரிகுலகேசரி கொடும்பாளூர் பரம்பரையைச் சேர்ந்த தென்னவன் இளங்கோவேளார் என்பவரின் மகள் பூதி ஆதிச்சப்பிடாரியை மணம் புரிந்து கொண்டான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பராந்தகனின் 37-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஒரு முக்கியமான வரலாற்றுச் செய்தியைக் குறிப்பிடுகிறது. தற்போதைய பசுபதீஸ்வரர் கோயிலுக்கு அல்லூரைச் சேர்ந்த சிறியான்புல்லன் ஊர்மக்களிடம் நிலத்தை வாங்கி, அந்நிலத்தை கோயிலுக்கு நன்கொடையாக அளித்தார். இந்நிலம் காவிரியாற்றில் உண்டான பெரும்வெள்ளத்தால் மண்மேடானது. பின்னர் அம்மண்மேடு அகற்றப்பெற்றது. அதனால் ஆறு அல்லது ஏழு ஆண்டுகளாக அந்நிலம் பயிரிடப்படாமல் இருந்தது என்ற செய்தியை அளிக்கிறது. கல்வெட்டின் துணைகொண்டு பார்க்கும்பொழுது இந்நிகழ்ச்சி கி. பி. 943-ஆம் ஆண்டு நடைபெற்றிருக்கிறது.[3] இக்காலத்தில் காவிரியில் வெள்ளம் வந்தபொழுது இவ்வூர் முழுவதும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கலாம். இப்பொழுது

'பழைய ஊர்களம்' என்று அழைக்கப்படும் பகுதி வெள்ளத்தால் அழிக்கப்பட்டிருக்கலாம். இப்பகுதியில்தான் பண்டைய மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பதற்குச் சான்றாக கிடைக்கப்பட்டுள்ள பழம்பொருட்களைப் பற்றி முன்னர் கூறினோம். மேலும் தற்பொழுது நக்கர் கோவில் என்று கல்வெட்டில் குறிப்பிடப்படும் பசுபதீஸ்வரர் ஆலயம் இப்பழையவூர் களத்திலேயே இருப்பது, இங்கு பண்டைய அல்லூர் இருந்தது என்பதற்குப் போதியச் சான்றாக விளங்குகிறது. இன்றைக்கு 1033 ஆண்டுகளுக்கு முன்னர் காவிரியில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் பழைய அல்லூர் அழித்திருக்கவேண்டுமென்பதில் ஐயமில்லை. காலப் போக்கில் தற்பொழுது ஊராக உள்ள அல்லூரில், பழைய அல்லூரில் வாழ்ந்த மக்கள் குடியேறியிருக்க வேண்டுமென்று திட்டவட்டமாகக் கூறலாம். இப்பொழுதுள்ள அல்லூரைவிட்டு பண்டைய வரலாற்றுச் சிறப்புமிக்க பசுபதீஸ்வரர் ஆலயம் ஒதுங்கி இருப்பதே இதற்குத் தக்கச் சான்றாகும்.

அல்லூரிலுள்ள பஞ்சநதீஸ்வரர் ஆலயத்தில் முதலாம் இராசராசன் (கி.பி. 985-1014) கல்வெட்டுகளும், முதலாம் இராசேந்திரன் கி.பி. (1012-44) கல்வெட்டுகளும். மூன்றாம் குலோத்துங்கனின் (கி.பி. 1178-1216) கல்வெட்டுகளும் பொறிக்கப் பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் யாவும் பஞ்சநதீஸ்வரர் கோயி லுக்கு மேற்குறிப்பிட்ட மன்னர்களின் காலத்தில் அளிக்கப்பட்ட நன்கொடைகளை மட்டுமே அறிவிக்கின்றன. பாண்டிய மன்னன் முதலாம் குலசேகரவர்மனின் 29-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இக்கோயிலுக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்ட செய்தியைத் தருகிறது.[4]

மேற்குறிப்பிட்ட கல்வெட்டுகளிலிருந்து கி. பி. 907 - ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1216-ஆம் ஆண்டுவரை அல்லூர் தொடர்ந்து சோழருடைய ஆட்சியின் கீழ் இருந்துவந்தது தெரிகிறது.[5]

அல்லூரில் கண்டெடுத்த கருப்பு சிவப்பு நிறம் கொண்ட மட்பாண்டங்களின் சிதைவுகளும், முதுமக்கள் தாழியும் அங்கு

எழுந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களும், அவை கொண்டுள்ள கல்வெட்டுகளிலும் வரலாற்றில் 'அல்லூர்' பெற்றிருந்த சிறப்பினை பறைசாற்றுகின்றன. தொன்மையான வரலாற்றினை இந்நாட்டிற்கு பறைசாற்றும் முரசாக 'அல்லூர்' விளங்குகிறது.

வாழ்க அல்லூரின் தொன்மை.

அடிக்குறிப்புகள்

1. SII Vol. VIII. Ins. No. 696.
2. Ibid No. 690.
3. Ibid No. 689.
4. Ibid No. 693.
5. கல்வெட்டுகளில் குறிக்கப்படும் நிலங்களின் பெயர்களைக் கொண்டு 'நிலஉடைமை' பற்றிய விரிவான ஆய்வினை ஜப்பானியப் பேராசிரியர் கராஷிமாவும், தமிழக அறிஞர் திருமலையும் மேற்கொண்டு கட்டுரைகள் வெளியிட்டுள்ளனர்.

6

அருமைமிகு ஆலம்பாக்கம்

நம் நாட்டில் இருக்கும் கலைச் செல்வங்கள் எண்ணிலடங்கா. இச்செல்வங்களின் கலைப்பாணியும் அழகும் எந்நாட்டவரும் கண்டு களித்துப் போற்றிப் புகழும் சிறப்புடையன. கலைச் செல்வங்களின் உறைவிடமாக விளங்குபவை கோயில்கள். அங்குள்ள சிற்பங்கள், செப்புத் திருமேனிகள், கோபுரங்கள், மண்டபங்கள், ஓவியங்கள், கல்வெட்டுகள் ஆகியவற்றைக் கண்டு இன்புறுகிறோம். இவை கலை வரலாற்றில் போற்றற்கரிய இடத்தைப் பெற்றுள்ளன. சிறந்த கலைப்பாணியையும், எழிலையும் கொண்டு விளங்கும் இக்கலைக் கருவூலங்கள் இயற்கையின் கொடுமையாலும், மன்னர் களின் படையெடுப்பாலும், மக்களின் அறியாமையாலும் மண்ணில் புதைந்தும், சிதைந்தும் இருப்பதைக் காண்கிறோம். கலைச் செல்வங்கள் பண்டைய வரலாற்றின் நினைவுச் சின்னங்கள்.

அமைவு

கலைச் செல்வங்களின் இருப்பிடமாகவும் பண்டைய வரலாற்றை பின்னணியாகவும் கொண்டு திகழும் ஊர்களில் ஒன்று ஆலம்பாக்கம். இவ்வூர் திருச்சி மாவட்டத்தில், புள்ளம்பாடி யிலிருந்து திருமழபாடி செல்லும் சாலையில் ஐந்து கி.மீட்டர் தொலைவிலுள்ளது. பசுமையான தோற்றத்துடன் கூடிய இயற்கைச் சூழல்களுக்கிடையில் தோற்றுவிக்கப்பட்ட கலைச் செல்வங்களையும் அவை கூறும் வரலாற்றையும் காண்போம்.

புதையுண்ட கோயில்

இவ்வூரின் வடகிழக்கே மண்ணில் புதைந்தும், சிதைந்தும் காட்யளிக்கிறது ஒரு கற்கோயில். இக்கோயில் கிழக்கு நோக்கி யுள்ளது. இக்கோயிலின் கட்டட அமைப்பும், சிற்பங்களும்,

கல்வெட்டுகளும் ஆய்வாளர் உள்ளத்தை ஈர்ப்பன. சிவனுக்காக எடுப்பிக்கப் பெற்றது இக்கோயில். இங்கு கருவறையில் உறையும் இறைவன் லிங்க உருவில் உள்ளார்.

கோயில் சிற்பங்கள்

கருவறையை அடுத்தாற்போன்று அர்த்த மண்டபம் உள்ளது. இம்மண்டபம் ஆறு தூண்களைக் கொண்டு விளங்குகிறது. இம் மண்டபத்தின் நுழை வாயிலை இரண்டு துவாரபாலர்களின் சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. இச்சிற்பங்களின் தோற்றமும், அவை கொண்டுள்ள அலட்சியப் பார்வையும், இச்சிற்பங்களை வடித்த சிற்பியின் கலைத்திறனை வெளிப்படுத்துகின்றன. இச் சிற்பங்களைக் கண்டுதான் இப்படைப்பின் முழு இன்பத்தை நுகர முடியும்.

இக்கோயிலின் சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்கு பவை கருவறையின் மேற்கு தேவகோட்டத்திலுள்ள திருமாலின் சிற்பமும், வடக்கு தேவகோட்டத்திலுள்ள பிரம்மனின் சிற்பமு மாகும். சோழர்காலக் கலைப்பாணியைச் சேர்ந்த இச்சிற்பங்களின் உருவ அமைதியும், பொலிவும் காண்போர் நெஞ்சைவிட்டு அகலாத கலைப்படைப்புகள்.

கோயிலும் கொற்றவனும்

வரலாற்றுக்கு நிலைத் தூண்களாக இருப்பவை கல்வெட்டுகள் கல்வெட்டுகள் பொறிக்கப்படாத பகுதியே இக்கோயிலில் இல்லை யெனலாம். தந்திவர்மன் (கி.பி. 796-846) என்ற பல்லவ மன்னன் இக்கோயிலை எடுப்பித்திருக்கிறான். கோனைதக்குடியைச் சேர்ந்த உய்யவந்தாள் என்ற பெண்மணி இக்கோயிலுக்கு ஒரு மணி மண்டபத்தை கட்டுவித்திருக்கிறாள். கிரந்த எழுத்திலும், தமிழிலும் பொறிக்கப்பட்டுள்ள இரண்டு கல்வெட்டுகள் இதை தெளிவாக்குகின்றன.[1]

இக்கோயிலில் உறையும் இறைவனை அமரேசுவரப்பெருமாள் என்று கல்வெட்டு கூறுகிறது. அமரேசுவரப்பெருமாள் என்றழைக் கப்பட்ட இறைவனின் பெயர் கி.பி. 1034-ஆம் ஆண்டில் கைலாச முடைய மஹாதேவர் என மாறியது.

காலந்தோறும் ஊரும்பேரும்

இவ்வூர் தந்திவர்மனின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அவன் பெயரைக் கொண்டே இவ்வூர் 'தந்திவர்ம மங்கலம்' என்றாயிற்று. இப்பெயர் சோழர்களுடைய ஆட்சிக் காலத்திலும் சில காலம் நிலைத்திருந்தது. தந்திவர்ம மங்கலம் என்ற இவ்வூரின் முந்தைய பெயர், 'மதுராந்தகன்' என்ற பெயர் கொண்ட முதலாம் பராந்தகச் சோழன் (கி.பி. 907-955) காலத்தில் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலமாயிற்று என்பதை முதலாம் இராஜேந்திரனின் கல்வெட்டால் அறிகிறோம்.[2] இன்று 'சதுர்கரிமங்கலம்' என்றழைக்கப்படும் இவ்வூரின் ஒரு பகுதி மதுராந்தகச் சதுர்வேதிமங்கலம் என வழங்கியமைக்குச் சான்றாகிறது.

நெல்லும், நிலமும், விளக்கும் இக்கோயிலுக்குக் கொடையாக அளிக்கப் பெற்றன. ஒரு விளக்கு எரிப்பதற்கு மூன்று நாழி நெல் அல்லது அதற்குச் சமமான ஒரு ஆழாக்கு நெய் கொடையாக அளிக்கப் பெற்றது.

நாட்டின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதற்குச் சோழநாடு, வளநாடு, நாடு, ஊர் என பிரிக்கப்பட்டது. அப்பிரிவில் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலம் கி.பி. 1052-இல் இராஜேந்திர சிங்க வளநாட்டிலுள்ள பொய்கை நாட்டில் ஒரு ஊராக திகழ்ந்தது. இராஜாதிராஜனின் (கி.பி. 1018-54) கல்வெட்டுகள் இச்செய்திகளைக் கூறுகின்றன.[3] வீரராஜேந்திரன் காலத்தில் (கி.பி. 1068-69) இக்கோயிலுக்கு நிலமும் விற்கப்பட்டது.[4]

தியாகவல்லி

முதலாம் குலோத்துங்கச் சோழனுக்கு பல மனைவியர்கள் இருந்தனர். அவர்களின் முதன்மையாகத் திகழ்ந்தவள் புவன முழுதுடையாள். குலோத்துங்கனின் 30-ஆம் ஆட்சி ஆண்டில் இவள் இறந்துவிடவே தியாகவல்லி என்பவள் மனைவியர்களில் முதன்மை இடத்தைப் பெற்றாள். நாட்டில் அரசனுக்கிருந்த அதிகாரத்திற்குச் சமமான அதிகாரத்தைப் பெற்றுத் திகழ்ந்தவள் இவள். இவள் மேலுள்ள அன்பினாலும், பெருமதிப்பினாலும் சில நாட்டுப் பிரிவுகளுக்கு இவளுடைய பெயரை வைத்து மகிழ்ந்தான்

முதலாம் குலோத்துங்கன். இம்மன்னன் காலத்தில் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலம் வடகரை தியாகவல்லி வளநாட்டிலுள்ள பொய்கை நாட்டில் ஒரு ஊராக இருந்தது.

தந்தையாகிய குலோத்துங்கன் தன் மனைவியிடத்துக் காட்டிய அன்பிற்கு ஈடு இணையின்றி விக்கிரமசோழன் தன் மனைவி திருபுவனமுழுதுடையாளிடம் அன்பு கொண்டிருந்தான். அவன் வைத்திருந்த அன்பிற்கு எடுத்துக்காட்டாக நாட்டுப்பிரிவிற்கு அவளுடைய பெயரிட்டு மகிழ்ந்தான். இவன் காலத்தில் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலம் திருபுவனமுழுதுடைய வளநாட்டிலுள்ள பொய்கை நாட்டின்கண் ஒரு ஊராக இருந்தது. இவனுடைய ஆட்சிக் காலத்தில் ஆளுடைய பிள்ளையார் கோயிலுக்கு நிலம் கொடையாக அளிக்கப் பெற்றது. ஆளுடைய பிள்ளையார் என்றழைக்கப்பட்டவர் ஞானசம்பந்தரே. ஞானசம்பந்தருக்குரிய கோயில் தற்போது இங்கில்லை. இக்கொடையை அளிக்கும் பொழுது இவ்வூர்ச் சபை மதுராந்தகதேவன்மண்டபத்தில் கூடியது இம்மண்டபம் இக்கோயிலுள்ள ஒரு மண்டபமாக இருக்கலாம். மேற்கூறிய செய்திகளை விக்கிரம சோழனின் கல்வெட்டுகள் நமக்குத் தெரிவிக்கின்றன.[5]

சிவபிராமணர் பெற்ற கடன்

இரண்டாம் இராஜராஜன் ஆட்சிக் காலத்தில் தன் மனைவி உலகுடைமுக்கோக்கிழானடிகள் பெயரை தன் ஆட்சிக்குட்பட்டிருந்த வளநாட்டு பிரிவிற்கு வைத்தான். இவன் ஆட்சியில் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலம் உலகுடை முக்கோக்கிழானடி வளநாட்டிலுள்ள பொய்கை நாட்டில் இருந்ததாக அறிகிறோம். இவ்வூரைச் சேர்ந்த சிவப்பிராமணர்கள் இக்கோயிலின் கருவூலத்திலிருந்து சிறிது தொகையைக் கடனாகப் பெற்றனர். இப்பணத்திற்குரிய வட்டி தொகையைக் கொண்டு இக்கோயிலுக்கு ஒரு விளக்கெரிப்பதாக ஒப்புக் கொண்டனர்.

அவ்வாண்டில் சில சிவபிராமணர்கள் தங்களுடைய இல்லங்களைவிட்டு வேற்றிடம் புகுந்தனர். அவர்களுடைய நிலங்கள் பயிரிடப்பெறாமலிருந்தன. அவர்கள் செலுத்த வேண்டிய வட்டித் தொகையும் செலுத்தப்படாமலிருந்தன. ஆகவே, இவ்வூரைச்

சேர்ந்த மற்ற சிவப்பிராமணர்கள் ஒன்றுகூடி அவர்களுடைய நிலங்களை இக்கோயிலுக்கு விற்றுவிட முடிவெடுத்தனர். கி.பி. 1158-ஆம் ஆண்டில் நடந்த இந்நிகழ்ச்சியை இராண்டாம் இராஜராஜனின் ஒரு கல்வெட்டு சித்தரிக்கிறது.[6] கலையின் சிறப்பிற்கும், வரலாற்று செய்திகளுக்கும் உறைவிடமாக விளங்கும் இக்கோயில் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு கலைக் கருவூலம்.

வடக்கேயுள்ள கோயில்

இனி, கைலாசமுடைய மகாதேவர் கோயிலுக்கு வடக்கே செல்வோம். அங்கு தன் முந்தைய வடிவத்தினின்றும் மாற்றியமைக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்ட கோயிலொன்றுள்ளது. இக்கோயில் பிடாரிக்காக எடுப்பிக்கப் பெற்றது. இதை எடுப்பித்தவன் திருவெற்றியூரான் என்றழைக்கப்படும் இராயர் அலங்காரப் பிரியன். பல்லவர் காலத்தில் பிடாரிக்காக ஏற்படுத்தப்பட்ட இக்கோயில் சோழர் காலத்தில் சப்தமாதர்களின் கோயிலாக விளங்கியது. இக்கோயிலில் உள்ள சோழர் காலச் சப்தமாதர் சிற்பங்கள் இதற்குச் சான்றாக விளங்குகின்றன. இவ்வராலாற்று செய்திகளை ஆதித்தியனுடைய (கி.பி. 871 - 907) கல்வெட்டும் இராஜாதிராஜனின் கல்வெட்டும், கூறுகின்றன.[7] தற்போது இக்கோயில் செல்லியம்மன் கோயில் என்றழைக்கப்படுகிறது.

மேற்கேயுள்ள கோயில்

இவ்வூரின் மேற்கே சிதைந்த மண்டபத்துடன் இடிபாடுகளுடனும் உள்ளது ஒரு கோயில். கிழக்கு நோக்கியுள்ள இக்கோயில் திருமாலுக்காக எடுப்பிக்கப் பெற்றது. இது இரண்டு தளவரிசையைக் கொண்டுள்ளது. முதல் தளத்திலுள்ள கருவறையில் திருமால் தன் தேவியர்களுடன் அமர்ந்த நிலையிலுள்ளார். கருவறையை அடுத்து அர்த்தமண்டபம் உள்ளது. இம்மண்டபத்தை அடுத்துள்ள மண்டத்தின் கீழுள்ள படிகளின் வாயிலாக முதல் தளத்திலுள்ள கருவறையை அவடயலாம்.

இக்கோயில் கட்டட அமைப்பு மாடக்கோயில் கட்டட அமைப்பைச் சேர்ந்தது. சோழன் கோச்செங்கண்ணான் காலத்தில் இதுபோன்ற மாடக் கோயில்கள் எடுப்பிக்கப் பெற்றன. இவ்வமைப்பு கோயில் கட்டடக்கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாக

விளங்குகிறது. கருவறையின் சுவரிலுள்ள தேவகோட்டங்களில் இலக்குமியின் சிற்பமும் திருமாலின் சிற்பமும் உள்ளன. இச்சிற்பங்கள் பல்லவர் கலைப் பாணியில் அமைந்தவை. இங்குள்ள திருமாலின் சிற்பம்,

'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கணணி நிறமுங்கண்டேன் செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்கண்
என்னாழி வண்ணன் பாலின்று'

என்ற பேயாழ்வாரின் பாடலை நம் மனக்கண்முன் கொணர்வதாக உள்ளது.

மீண்டும் திருப்பணி

பல்லவர் காலத்தில் எடுப்பிக்கப் பெற்றது இக்கோயில். கயிலாயமுடைய மஹாதேவர் கோயிலைவிட இது பழமையானது. இக்கோயில் எடுப்பிக்கப் பெற்ற பல ஆண்டுகள் கழிந்த பின்னர் சிதைவுற்றது. சிதைவுற்ற இக்கோயிலைத் தொண்டை நாட்டிலுள்ள மதுராந்தகம் என்ற பகுதியில் வாழ்ந்த நரசிம்மதேவன் என்ற படைத்தலைவரின் மகன் விட்டப்ப தண்டநாயகன் புதுப்பித்தான். இச்செய்திகளைக் கூறுகிறது இக்கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டு.[8]

இக்கோயில் இறைவன் திருமேற்றளிப்பெருமாள் என அழைக்கப்பட்டான். இவ்விறைவனுக்கு ஒரு விளக்கெரிக்க இவ்வூரிலுள்ள மாரப்பிடுகேரியின் கீழுள்ள நிலம் கொடையாக அளிக்கப் பெற்றது.[9]

ஏரியும் கிணறும்

மார்ப்பிடுகேரி, குறுநில மன்னர்களாக விளங்கிய முத்தரையர் வரலாற்றுடன் தொடர்புடையது. முத்தரையர்கள் பல்லவப் பேரரசுக்கு உட்பட்டு தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, பழைய புதுக்கோட்டை சமஸ்தானம் ஆகிய நிலப்பகுதிகளை ஆண்டு வந்தனர். முத்தரைய மன்னன் மார்ப்பிடுகு பேரரையன் (கி.பி. 770-791) தந்திவர்ம பல்லவனின் சமகாலத்தவன். இவன் ஆலம் பாக்கத்திலுள்ள மார்ப்பிடுகு ஏரியைக் கட்டினான். மார்ப்பிடுகு பெருங்கிணறு ஒன்றை திருச்சி மாவட்டத்திலுள்ள திருவெள்ளறை

யில் அழகுற அமைத்தவனும் இவனேயாவான். ஆகவே இவ்வேரியும் கிணறும் இவன் பெயரைக் கொண்டுள்ளன. முதலாம் பராந்தகன் ஆட்சிக் காலத்தில் இவ்வேரியின் பெயர் இம்மன்னனின் பெயர் கொண்டு 'மதுராந்தகப்பேரேரி' என்றாயிற்று. இன்று இவ்வேரி சொக்காண்டி ஏரி, இராசநேரி, கவிச்சானேரி என்று மூன்று பெயர்களைக் கொண்டு தனித்தனியாக உள்ளது.

சொக்காண்டி ஏரி

சொக்காண்டி ஏரி தற்பொழுது கயிலாயமுடைய மஹாதேவர் கோயிலுக்கு வடகிழக்கிலும், செல்லியம்மன் கோயிலுக்கு மேற்கிலும் உள்ளது. இவ்வேரியின் கிழக்கேயுள்ள 60 ஏக்கர் நிலப்பரப்பில் பண்டைய மார்ப்பிடுகு ஏரி இருந்தது. தற்பொழுது இந்நிலப்பரப்பு விளை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளது. 50 ஆண்டுகளுக்கு முன்னர் சொக்காண்டி ஏரியிலிருந்து தண்ணீர் இராசனேரிக்குச் சென்று அங்கிருந்து தெற்கேயுள்ள கவிச்சா னேரிக்குச் சென்று கொண்டிருந்தது. தற்பொழுது இராசனேரி வாய்க்காலாக மாற்றப்பட்டுள்ளது. இராசனேரியிலிருந்து தண்ணீர் கவிச்சானேரியில் கவிழ்வதால் இவ்வேரி கவிச்சானேரி என்று பெயர் பெற்றது போலும் நீர்ப்பாசனத்தில் எடுக்கப்பட்ட புதிய வாய்க்கால்களும் நிலங்களாக்கப்பட்ட ஏரிப்பகுதியும் மார்ப்பிடுகு ஏரியின் அமைப்பைக் குலைத்தன. இவ்வேரியின் வரலாற்றை நமக்கு எடுத்துக் கூறுகிறது முதலாம் பராந்தகனின் கல்வெட்டு.

பழமைச் சின்னங்கள்

ஆலம்பாக்கத்திலுள்ள சிவன் கோயிலும், சப்தமாதர்களின் கோயிலும், திருமால் கோயிலும் வாஸ்து நூல்கள் கூறுவதற்கேற்ப ஊரின் வடகிழக்கிலும், வடக்கிலும், மேற்கிலும் எடுக்கப்பட்டி ருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். திசைக்கேற்ப ஏற்படுத்தப் பட்ட இக்கோயில்கள் இவ்வூரின் பழமையைச் சிறக்கக் காட்டு கின்றன.

இவ்வூரிலிருக்கும் 'கோட்டைக்கரை', 'அரண்மனையாட்சி' என்னும் பகுதிகள் ஆலம்பாக்கம் பண்டைய நாள்களில் ஒரு சிறு நகரமாக இருந்ததைத் தெளிவாக்குகின்றன. கலைச் செல்வங்களான

இக்கோயில்கள் இல்லையென்றால் தற்பொழுது சிறிய ஊராக விளங்கும் ஆலம்பாக்கத்தின் வரலாறு என்றோ மண்ணோடு மண்ணாக மறைந்து போயிருக்கும்.

அடிக்குறிப்புகள்

1. ARE 727 of 1909
2. ARE 719 of 1909
3. ARE 721 of 1909
4. ARE 733 of 1909
5. ARE 725 of 1909
6. ARE 726 of 1909
7. ARE 731 of 1909
8. ARE 704 of 1909
9. ARE 713 of 1909

நிழற் படங்கள்

இரண்டாம் வேலன்டைன் செப்புக் காசு
அழகன்குளம் கி.பி. 383-92 (பக்கம்-7)



முதலாம் இராஜேந்திர சோழன் மாளிகையின்
அழிந்த செங்கற் சுவர்ப் பகுதி - கங்கைகொண்ட சோழபுரம்
கி.பி. 11-ஆம் நூற்றாண்டு (பக்கம்-10)



கப்பல் உருவம் பொறித்த பானை ஓடு-அழகன்குளம்
கி.பி. முதலாம் நூற்றாண்டு (பக்கம்-16)

இடுப்பில் குழந்தையைத் தாங்கி நிற்கும் சுடுமண் பொம்மை
கி.பி. முதலாம் நூற்றாண்டு (பக்கம்-16)



பெண் உருவங்கள் கொண்ட பானை ஓடு–அழகன்குளம்
கி.மு. முதலாம் நூற்றாண்டு (பக்கம் 17)

TAMIL NADU STATE DEPARTMENT ★ MADRAS
LIBRARY
CC No.
Date

அச்சுக் குத்தப்பட்ட வெள்ளிக் காசு-அழகன்குளம்
கி.மு. 400 (பக்கம் 18)

குடிநீர் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்ட சுடுமண் குழாய்கள்
திருக்கோயிலூர் - கி.பி. 8-ஆம் நூற்றாண்டு (பக்கம்-24)



கைலாசநாதர் கோயில் நுழைவாயில்-ஆலம்பாக்கம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு (பக்கம் 48)



திருமால் சிற்பம்-திருமால் கோயில் - ஆலம்பாக்கம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு (பக்கம் 52)



ஜும்-ஆ-பள்ளி வாசல் தூண்கள்-கீழக்கரை
கி.பி. 17-ஆம் நூற்றாண்டு (பக்கம் 108)



சிற்ப வேலைப்பாடுகளமைந்த மரக் கதவு
சிவபுரீஸ்வரர் ஆலயம்-சிவாயம்
கி.பி. 15-ஆம் நூற்றாண்டு (பக்கம் 114)



செம்மறியாடுகள் சண்டையிடும் காட்சி - கதவு சிற்பம்
(பக்கம் 115)

பள்ளியறைச் சொக்கர் செப்புத்திருமேனி-திருவானைக்காவல்
கி.பி. 16-ஆம் நூற்றாண்டு (பக்கம் 127)



கல்செக்கு-வெள்ளியணை

கி.பி. 10-ஆம் நூற்றாண்டு (பக்கம் 135)



தூபி
(முடி)

சிகரம்
(தலை)

கிரீவம்
(கழுத்து)

பிரத்தரம்
(தோள்)

பித்தி
(உடல்/கால்)

அதிட்டானம்
(அடி-பாதம்)

உபானம்



ஊனுடம்பே ஆலயம்

7

பெருங்குடி அகத்தீசுவரர் ஆலயம்

ஊர் அமைப்பு

தமிழ் நாட்டில் எண்ணிலடங்கா சிற்றூர்கள் உள்ளன அவ்வூர்களில் பல ஊர்கள் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன. அத்தகைய ஊர்களில் ஒன்றுதான் பெருங்குடி. இவ்வூர், திருச்சியிலிருந்து வயலூர் செல்லும் சாலையில், சோமரசம்பேட்டை என்ற ஊரிலிருந்து வடக்கே சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இவ்வூரில் அமைந்துள்ள அகத்தீசுவரர் ஆலயமும், அதன் கல்வெட்டுகளும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகளை எடுத்துரைக்கின்றன.

ஊர்ப்பெயர் மாற்றங்கள்

பல்வேறு காலக் கட்டங்களில் இவ்வூர் 'பெருமுடி', 'திருப் பெருமுடி பெருங்குடி' என்ற பெயர்களைப் பெற்றிருந்ததாக இங்குள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன. அவற்றுள் பெருங்குடி என்ற பெயரையே இன்று இவ்வூர் பெற்று விளங்குகிறது.

கி.பி. 957-ஆம் ஆண்டிலிருந்து 1440-ஆம் ஆண்டு வரை இவ்வூர் தென்கரைபிரம்மதேயம் நந்திவர்ம மங்கலத்திலும், தென் கரை இராசகம்பீர வளநாட்டு உறையூர்க் கூற்றத்து ஸ்ரீஜெகதேக வீரச்சதிப்பேதி மங்கலத்தின் மேல்பிடாகையிலும் இருந்ததாகச் சுந்தர சோழன் கல்வெட்டுகளும், போசள மன்னன் வீரராம னாதன் கல்வெட்டுகளும் கூறுகின்றன. சுந்தரசோழனின் கல்வெட்டு 'நந்திவர்ம மங்கலத்துப் பெருங்குடி' என்று குறிப்பிடுவது இங்கு ஆராயத்தக்கதாகும். கி. பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் பல்லவர்களுடைய ஆட்சி திருச்சியிலும், அதன் சுற்றுப் பகுதியிலும், பரவத் தொடங்கியது. பிற்காலப் பல்லவ மன்னர்களுடைய ஆட்சி

யில் இப்பகுதிகள் இருந்தன என்பதற்குரிய கல்வெட்டுச் சான்றுகள் திருவெள்ளறையிலும், லால்குடியிலும் ஆலம்பாக்கத்திலும் உள்ளன. பல்லவ மன்னருள் நந்திவர்மன் என்று பெயர் கொண்ட மன்னர் மூவர் உள்ளனர். அவர்களில் இரண்டாம் அல்லது மூன்றாம் நந்திவர்மனின் பெயர் கொண்ட இப்பகுதி நந்திவர்ம மங்கலம் என வழங்கப்பட்டு வந்துள்ளது. பல்லவர் ஆட்சி முடிந்து சோழர் ஆட்சி இங்கு பரவத் தொடங்கிய பின்பும் பல்லவ மன்னனின் பெயரால் இவ்வூர் வழங்கப்பட்டுள்ளது.

இருபது சேரிகள்

இச்சதுர்வேதிமங்கலத்தில் 20 சேரிகள் (குடியிருப்புகள்) இருந்தன. மூன்று சேரிகள் கல்வெட்டுகளில் குறிப்பிடப் படுகின்றன. குண்டூரைச் சார்ந்த ஒருவன் 14-ஆம் சேரியில் இருந்திருக்கின்றான். முறிசெட்டு என்ற ஊரைச் சார்ந்தவன் 18-ஆம் சேரியில் இருந்திருக்கின்றான். ஒவ்வொரு சேரிக்கும் தலைவன் ஒருவன் இருந்துள்ளான். குறிப்பாக 20-ஆம் சேரிக்கு நந்திமாதவன் என்பவன் தலைவனாக இருந்திருக்கிறான்.

உழவுத் தொழில்

உய்யக்கொண்டான் ஆற்றின் தென்கரையில் இவ்வூர் இருந்தமையால் உழவுத் தொழில் சிறப்பாக இருந்து வந்துள்ளது. வாய்க்கால்கள் பல வெட்டப்பட்டன. அவை வயிரமேக வாய்க்கால், முதல் கண்ணாறு, நாலாங்கண்ணாறு, ஆறாங்கண்ணாறு, ஒன்பதாங் கண்ணாறு, வாமன வாய்க்கால் என்ற பெயர்களைக் கொண்டு விளங்கின. தற்பொழுது இவ்வூரில் வாய்க்கால்கள் பல இருந்தாலும், மேற்குறிப்பிடப்பட்ட பெயர்களையுடைய வாய்க்கால்கள் மற்றும் கண்ணாறுகள் எவையென்பதைக் கண்டு கொள்ள இயலவில்லை.

திருப்பெருமுடி பரமேசுவரர்

இங்கு கோயில் கொண்டிருக்கும் இறைவன் காலப்போக்கில் திருப்பெருமுடிபரமேஸ்வரர் என்றும், நந்திவர்ம மங்கலத்துப் பெருமுடி பரமேசுவரர் என்றும், திருஅகத்தீசுவரமுடைய மாதேவர் என்றும், பெருங்குடி உடையார் திருஅகத்தீசுவரமுடைய நாயனார் என்றும் அழைக்கப்பட்டார். தற்பொழுது அகத்தீசுவரர் என அழைக்கப்படுகிறார்.

இவ்வகத்தீசுவரர் ஆலயத்தை கி. பி. 969-ஆம் ஆண்டு உறத்தூர் நாட்டிலுள்ள உறத்தூர்க் கூற்றத்தைச் சேர்ந்த புதுக்குடியில் வாழ்ந்து வந்த செம்பியன் என்றழைக்கப்படும் மயிலைத்திண்டன் என்பான் திருக்கற்றளியாகத் தோற்றுவித்தான். சுந்தரசோழன் காலத்துக் கட்டடக்கலைக்குச் சான்றாக அமைந்து ஆயிரமாண்டுகள் நிமிர்ந்து நின்று இவ்வூரின் வரலாற்றை அறிய உறுதுணையாக இக்கோயில் விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

கோயிற் திருப்பணி

இக்கற்றளி எடுப்பித்து 295 ஆண்டுகள் சென்ற பின்னர் திருப்பணி செய்யும் நிலைக்குள்ளானது. திருப்பணி செய்ய கல்தச்சுக் கூலி கொடுக்க கோயிலில் போதுமான நிதியில்லை. அப்பொழுது, தட்டார் வகுப்பைச் சேர்ந்த மருதாண்டான் மகன் கூத்தன் என்பவன் மூன்று கழஞ்சு பொன் கொடுத்துத் திருப்பணி வேலைகளை கி.பி. 1264-ஆம் ஆண்டு முற்றுவித்தான். இச்செய்தி யினைப் போசள மன்னன் வீரராமனாதனின் கல்வெட்டு, 'பெருங்குடி உடையார் திருஅகத்தீசுவரமுடையார் கோயிலுக்குக் கல்தச்சுக் கூலி தாழ்வாய் திருப்பணி குறையாய் இருக்கையில் திருப்பணிக்கு தச்சுக் கூலிக்கு இவன் இட்ட பொன் முக்கழஞ்சு' எனக் குறிப்பதன் மூலம் அறிகின்றோம்.

கோயில் அமைப்பு

இவ்வாலயம் கிழக்கு நோக்கியுள்ளது. அர்த்தமண்டபம், முகமண்டபம், மகாமண்டபம், அம்மன் சந்நதி, நந்தி மண்டபம், பலிபீடம் கொடிமரம் ஆகிய பகுதிகளைக் கொண்டு கம்பீரமுடன் காட்சியளிக்கிறது. கருவறையில் இறைவன் லிங்க வடிவில் எழுந்தருளப் பெற்றுள்ளார். கருவறையின் மேல் ஏகதள விமானம் உள்ளது. விமானம் வேசர வடிவிலமைக்கப் பெற்றுள்ளது இவ்விமானம் சுதையினாலானது. விமானத்தின் கிரீவத்தில் இந்திரன், விஷ்ணு, பிரம்மா, தட்சிணாமூர்த்தி ஆகியோருடைய சிற்பங்கள் திசைகளுக்கேற்றாற்போல் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. கிரீவத்தின் கிழக்குத் திசையில் இந்திரன் அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறார். வலது மேல் கையில் சக்தி கொண்டும், வலது கீழ்க் கை அபய முத்திரையுடனும், இடது மேல் கை வஜ்ரம் தாங்கியும், இடது கீழ்க்கை இடது தொடைமீது

வைத்தும் காண்போர் உள்ளத்தைக் கவரும் வண்ணம் காட்சியளிக்கிறார். இவருடைய மார்பைச் சன்ன வீரமும், வயிற்றை உதரபந்தமும் அணிசெய்கின்றன. விமானத்தின் மேற்கு கிரீவ கோட்டத்தில் விஷ்ணு அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறார். அவரது வலது மேல் கை சக்கரத்தைத் தாங்கியும், இடது மேல் கை சங்கம் ஏந்தியும், வலது கீழ்க் கை அபய முத்திரையுடனும், இடது கீழ்க் கை இடது தொடை மீதும் உள்ளன. விமானத்தின் வடக்கு கிரீவத்தில் பிரம்மா அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடன் தோற்றுவிக்கப்பட்டுள்ளார். அமைதியே உருவாக அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடன் தட்சிணாமூர்த்தி விமானத்தின் தெற்கு கிரீவ கோட்டத்தில் உள்ளார். விமானத்தின் கழுத்துப் பகுதியின் கீழ் நான்கு நந்திகளின் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. விமானத்தில் சிகரப் பகுதி சுதையினால் எடுக்கப் பெற்றுள்ளது. விமானப் பகுதியிலுள்ள சிற்பங்கள் யாவும் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் நிலவிய சோழர் கலைப் பாணியை வெளிப்படுத்துகின்றன.

மண்டபங்கள்

கருவறையை அடுத்து தூண்களற்ற அர்த்தமண்டபம் உள்ளது. அர்த்தமண்டபத்தை அடுத்து முகமண்டபம் உள்ளது. இம் மண்டபம் நான்கு தூண்கள் கொண்டு விளங்குகிறது. இம்மண்டபத்தின் நுழைவாயிலை இரண்டு துவார பாலகர்கள் காவல் புரிகின்றனர். முகமண்டபத்தை அடுத்து மகாமண்டபம் உள்ளது. இம்மண்டபம் பதினைந்து தூண்களைக் கொண்டு விளங்குகிறது. முகமண்டபத்திற்கும், மகாமண்டபத்திற்கும் வடக்கே சண்டிகேசுவரரின் சிறிய ஆலயம் உள்ளது. முகமண்டபத்தை அடுத்து நந்தி மண்டபம், பலிபீடம், கொடிமரம் ஆகியவை உள்ளன.

அம்மன் ஆலயம்

மகாமண்டபத்தின் கட்டட அமைப்பும், அம்மன் ஆலயத்தின் அமைப்பும், இவ்வாலயத்தின் மற்ற பகுதிகளின் கட்டட அமைப்புகளினின்றும் வேறுபடுவதால், இம்மகாமண்டபமும், அம்மன் ஆலயமும், பிற்காலத்தில் தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ண இடமுண்டாகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில்

அம்மன் ஆலயத்தின் கிழக்குச் சுவரின் அடிப்பகுதியில் ஒரு கல்வெட்டு உள்ளது. அக்கல்வெட்டு, விஜயநகர மன்னன் விருப்பண்ணன் காலத்தைச் சேர்ந்தது. இறைவி சிவக்காமசுந்தரி நாச்சியாரின் திருமேனியை இவ்வூர்ச் சபையின் அங்கத்தினர்கள் [illegible] கி.பி. 1[illegible]-ஆம் ஆண்டு இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்தான் என்று கல்வெட்டு கூறுவதால், மகாமண்டபமும், தேவியின் ஆலயமும் விஜயநகர மன்னன் விருப்பண்ணன் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதென உறுதியாகக் கொள்ளலாம். நந்தி மண்டபத் தூணில் உள்ள கல்வெட்டு ஒன்று அத்தாணை கி.பி. 1263-இல் சாந்தன் நாடன் என்பவன் தோற்றுவித்ததைக் கூறுகிறது.

தேவகோட்டச் சிற்பங்கள்

இவ்வாலயத்தின் தேவக்கோட்டங்களிலும், சண்டிகேசுவரர் ஆலயத்திலும், தட்சிணாமூர்த்தி, அர்த்தநாரீசுவரர், பிரம்மன், சண்டிகேசுவரர் ஆகியோருடைய சிற்பங்கள் உள்ளன. இச்சிற்பங்கள் யாவும் இவ்வாலயம் தோற்றுவிக்கப்பட்ட பொழுதே எடுப்பிக்கப் பெற்றவையாக இருத்தல் வேண்டும். இச்சிற்பங்களில் சோழர்களின் கலைப்பாணி மிளிர்வதைக் காணலாம். தெற்கு தேவக்கோட்டச் சுவரில் தட்சிணாமூர்த்தி அமர்ந்த நிலையில் இடது காலை மடக்கி வலது காலின் மேல் வைத்துள்ளார். வலது காலின் பாதம் கீழேயுள்ள முயலகனின் மேலுள்ளது. நான்கு கைகளில் வலது மேல் கை அக்கமாலை கொண்டும் வலது கீழ்க் கை உபதேச முத்திரையுடனும், இடது மேல் கை தாமரை மலர் கொண்டும், இடது கீழ்க் கை புஸ்தக ஹஸ்தத்திலும் விளங்குகின்றன. தட்சிணாமூர்த்தி அமைதியே உருவாகத் தோற்றமளிக்கிறார். இத்தேவக்கோட்டத்தின் முன் இரண்டு தூண்கள் கொண்ட ஒரு சிறு மண்டபம் போன்ற அமைப்புள்ளது. இவ்வமைப்பு அண்மையில் கட்டப்பட்டதாகும்.

மேற்கு தேவக்கோட்டத்தில் உமையொரு பாகன் நின்ற நிலையிலுள்ளார். தலையின் வலது புறத்தில் ஜடாமகுடமும், இடப்புறத்தில் கரண்ட மகுடமும் காட்டப்பட்டுள்ளன. இடது புற காதில் பத்ர குண்டலமும், வலது புறக் காதில் மகர குண்டலமும் அணி செய்கின்றன. இடது கை குமுத மலரைத்

தாங்கியுள்ளது. வலது மேற்கை பரசு கொண்டும், வலது கீழ்க் கை கட்டிய வலம்பிதத்திலும் அமைந்துள்ளன. மார்பில் யக்ஞோபவீதமும், வயிற்றில் உதரபந்தமும் காணப்படுகின்றன. முகம் நீள் வட்ட வடிவில் சதைப்பற்றுள்ளதாகத் தோற்றுவிக்கப் பட்டுள்ளது. சோழர் கலைப் பாணியின் உயிரோட்டத்தை இச் சிற்பத்தில் காணலாம்.

வடக்கு தேவகோட்டத்தில் பிரம்மனின் உருவம் நான்கு கைகள் கொண்டு நின்ற நிலையில் இருப்பதைக் காணலாம். சிற்பத்தில் மூன்று தலைகள் காட்டப் பெற்றுள்ளன. தலை யினை ஜடாமகுடம் அணி செய்கின்றது. வலது மேற் கை அக்கமாலை கொண்டும், வலது கீழ்க் கை அபயமுத்திரையுடனும், இடது மேல் கை கெண்டி கொண்டும், இடது கீழ்க் கை கட்டிய வலம்பிதத்திலும் உள்ளன. கழுத்தில் அணிகலன்களும், மார்பில் யக்ஞோபவீதமும், வயிற்றில் உதரபந்தமும் காட்டப் பெற் றுள்ளன. காண்போரை வியக்க வைக்கிறது இவ்வுருவம். சண்டிகேசுவரர் ஆலயத்திலுள்ள சண்டிகேசுவரரின் சிற்பம் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கவிட்டு அமர்ந்த நிலையி லுள்ளது. வலது கையில் பரசும், இடது கை தொடைமீதும் வைக்கப் பெற்ற நிலையிலுள்ளன.

இவ்வாலயத்தில் திருநாள்களும், திருவிழாக்களும் கொண் டாடப்பட்டன. சித்திரைத் திங்கள் நடத்தப் பெற்ற சித்திரைத் திருவிழாவும், ஆனித் திங்களில் நடத்தப்பெற்ற ஆனித்திருவிழாவும் குறிப்பிடத்தக்கவை. இவ்விழாக்களை நடத்த நிலக் கொடைகள் அளிக்கப்பெற்றன.

அறக்கொடைகள்

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் இந்நூலாசிரியரால் நேரில் பார்த்தெழுதப்பட்டன. அவற்றிலிருந்து அறக்கொடைகள் பற்றிய செய்திகளை அறிய முடிகிறது. இவ்வாலயத்தின் நிர்வாகமும், வழிபாடும் செம்மையுடன் நடைபெறும் பொருட்டுப் பெரியோர்கள் பல அறக் கொடைகளைச் செய்துள்ளனர். இரண்டாம் ஆதித்த கரிகாலன் ஆட்சியில் (கி.பி. 969) இவ்வால யத்தை எடுப்பித்த மயிலைத் திண்டனின் மனைவி காமம்பெருமாள்

என்பவன் ஒரு நொந்தா விளக்கெரிக்க இருபத்தைந்து கழஞ்சு பொன்னிற்கு நிலம் கொடை அளித்துள்ளாள். சுந்தர சோழன் காலத்தில் (கி.பி. 965) உறையூர்க் கூற்றத்தைச் சார்ந்த வயலூருடையான் மணவாட்டி மஞ்சனசேந்தி இறைவனுக்கு ஒரு பகல் விளக்கெரிக்க 40 ஆடுகளைக் கொடையாக அளித்துள்ளாள். இன்று வயலூரும், உறையூரும், பெருங்குடிக்கு மேற்கிலும். கிழக்கிலும் உள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சுந்தரசோழன் காலத்தில் (கி.பி. 971) ஸ்ரீ மயிலைத் திண்டன் 386 கழஞ்சு பொன் கொடுத்து இறைவன் பெயரால் நிலங்களை வாங்கித் தேவையான நிவந்தங்களைக் கொடுத்து வழிபாட்டிற்கும் ஏற்பாடு செய்தான். முதலாம் இராஜராஜன் காலத்தில் (கி.பி. 985) இவ்வாலயத்தில் பூசை செய்து கொண்டிருந்த கண்ண திருநீலகண்டன், காமியன் என்னும் இரண்டு பிராமணர்களும் சேர்ந்து பெருங்குடியிலிருந்த கைக்கோளன் திரியன் மகனிடமிருந்து இரண்டு காசுகளைப் பெற்று ஒரு சந்தி திருவிளக்கு இறைவனுக்கு வைத்தனர்.

போசள மன்னன் வீரராமனாதன் ஆட்சியில் (கி.பி. 1273) தட்டார வகுப்பைச் சேர்ந்த கூத்தன் என்பவன் தன் மகன் நல்ல மங்கைக்குக் கண் தெரியாமலிருந்ததால், அவன் மீண்டும் கண் பார்வைப் பெற வேண்டி இறைவனுக்குப் பொன்னால் ஒரு பட்டம் செய்து சாத்தினான்.

சுந்தர சோழன் காலத்திலும், இரண்டாம் ஆதித்தன் காலத்திலும் தோற்றுவிக்கப்பட்ட கட்டடக் கலைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது இவ்வகத்தீசுவரர் ஆலயம்.

வரலாற்றுச் சின்னம்

பெருங்குடியின் வரலாற்றை எடுத்துரைப்பதற்கு ஆதாரமாக விளங்கும் இக்கோயில் இடிபாடுகளுடனும், முட்புதர் சூழ்ந்தும் அழியும் நிலையிலிருந்தது. இக்கோயிலின் பழமையும் வரலாற்று முக்கியத்துவத்தையும் நன்கு உணர்ந்த தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினர் இக்கோயிலைத் தம் பொறுப்பின் கீழ் வரலாற்றுச் சின்னமாக ஏற்று கோயிலின் பழமை கெடாது, முந்தைய வடிவமும் மாறாது பாதுகாக்கும் பணியை மேற் கொண்டுள்ளனர். ★

திருத்தியமலை
ஏகபுஷ்ப பிரியநாதசுவாமி கோயில்

திருச்சியிலிருந்து வடமேற்கே 45 கிலோ மீட்டர் தூரத்திலும், திருப்பைஞ்ஞீலியிலிருந்து மூவானூர் செல்லும் பாதையில் இருபது கிலோ மீட்டர் தூரத்திலும் திருத்தியமலை அமைந்துள்ளது. சிற்றூரான இவ்வூரில் நான்கு கோயில்கள் உள்ளன. அவை ஏகபுஷ்ப பிரியநாதசுவாமி என்னும் சிவன் கோயில், மாரியம்மன் கோயில், பிடாரிகோயில், ஐயனார் கோயில் என்பனவாகும். இக்கோயில்களில் காலத்தாற் முற்பட்டதும், வரலாற்றுச் சிறப்பினையுடையதுமாக விளங்குவது ஏகபுஷ்ப பிரியநாதசுவாமி என்றழைக்கப்படும் சிவன் கோயிலாகும்.

தற்பொழுதுள்ள ஊரின் தெற்கேயுள்ள குன்றின் மீது ஏகபுஷ்ப பிரியநாதசுவாமி கோயில் எழுப்பப்பட்டுள்ளது. இக்குன்றின் மேற்கிலும், வடமேற்கிலும் சிறு குன்றுகள் காணப்படுகின்றன. இக்கோயிலின் கிழக்கில் நிலமட்டத்திலிருந்து சிறிது மேனோக்கி எழுந்த ஒரு பாறை உள்ளது. இப்பாறை தற்பொழுது களமாகவும், சாணக்குழியாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கோயிலின் கட்டட அமைப்பு

கோயிலின் உண்ணாழி 4.30 மீட்டர் பக்க அளவுகொண்டு சதுர அமைப்பில் உள்ளது. உண்ணாழியினை அடுத்தாற்போன்று அர்த்தமண்டபமும், இவ்விரு பகுதியைச் சுற்றிலும் ஒரு உள் திருச்சுற்றும் காணப்படுகின்றன. திருச்சுற்று மாளிகை எட்டுத் தூண்களைக் கொண்டு விளங்குகிறது. இவ்வுட் பிரகாரத்தை அடுத்து பிரகாரமண்டபம் உள்ளது. இம்மண்டபம் 48 தூண்களைக் கொண்டு விளங்குகிறது. இப்பிரகாரத்தை அடுத்து ஏழு

மீட்டர் பக்க அளவினைக் கொண்ட சதுர அமைப்பிலுள்ள நிருத்த மண்டபமும், அதையடுத்து நந்தி மண்டபமும், பலிபீடமும் உள்ளன. பலிபீடத்திற்கு அடுத்தாற்போன்று அம்மன் சந்நதியும், அதன் முன் மண்டபமும் உள்ளன.

இக்கோயிலின் வெளிப்பிரகாரத்தில் மேற்கே பழுதடைந்த மண்டபமும், சுப்ரமண்யசுவாமி கோயில் ஒன்றும் உள்ளன. சிவன் கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. அம்மன் கோயில் தெற்கு நோக்கிக் காணப்படுகிறது. இக்கோயில்களைச் சுற்றி ஒரு மதிற்சுவர் உள்ளது. இம்மதிற்சுவர் வடக்குப் பக்கத்தில் ஏழு மீட்டர் நீளத்தில் அழிவுற்ற நிலையில் காணப்படுகிறது. குன்றின் மேல் உள்ள கோயிலை வடக்குத் திசையில் உள்ள நுழைவாயிலின் கண் அமைந்துள்ள படிகளின் மூலம் சென்றடையலாம். உண்ணாழியில் எழுந்தருளியுள்ள இறைவன் இலிங்க வடிவில் உள்ளார். இலிங்கம் சுயம்பு இலிங்கமாகும். அர்த்த மண்டபத்தின் தென் பகுதியில் ஒரு நிலவறை உள்ளது. இந் நிலவறை செப்புத் திருமேனிகளைப் பாதுகாப்பாக வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

உண்ணாழியின் வெளிப்புறச் சுவர்களிலுள்ள தேவகோட்டங் களில் தட்சணாமூர்த்தி, திருமால், பிரம்மா போன்ற கடவுளர்களின் சிற்பங்கள் உள்ளன. உண்ணாழியின் வெளிப்புறச் சுவர்களில் கல்வெட்டுகள் இல்லாமையாலும், தட்சணாமூர்த்தி, திருமால், பிரம்மா போன்ற கடவுளர்களின் கலைப்பாணியைக் கொண்டும், உண்ணாழி, அர்த்தமண்டபக் கட்டடக் கலையின் அமைப்பைக் கொண்டும், பார்க்கையில் இப்பகுதிகள் மட்டும் கி.பி. 14, 15-ஆம் நூற்றாண்டில், முன்பு இங்கிருந்த உண்ணாழி அர்த்தமண்டபப் பகுதிகள் சிதைவுற்றதால், அவற்றைத் திருத்தி அமைத்திருக்க லாம் என்று கருதமுடிகிறது.

நிருத்த மண்டபத்திலுள்ள உமாமஹேச்வரரின் சிற்பம்

சிவனும், உமையும் பத்ரபீடத்தின் மேல் அமர்ந்த நிலையில் உள்ளனர். சிவபெருமான் நான்கு கரங்களைக் கொண்டு விளங்குகிறார். வலது மேற்கரத்தில் மழு தாங்கியும், வலது கீழ்க்கரம் அபயமுத்திரையுடனும் இடது கரங்கள் இரண்டும் உமையைத் தழுவிய நிலையிலும் காட்சியளிக்கிறார். உமையின்

வலது கை மலர் தாங்கியும், இடது கை தொடையின் மீது வைக்கப் பெற்றும் காணப்படுகிறது. சிவபெருமானின் வலது காலும், உமையின் இடது காலும் பத்ரபீடத்தின் கீழ் தொங்கவிடப் பட்டுள்ளன. சிவபெருமானுடைய இடது காலும், உமையினுடைய வலது காலும் முறையே மடக்கியும், குத்திட்டும் பத்ரபீடத்தின்மேல் வைக்கப்பட்டுள்ளன.

சிவபெருமானின் காதுகளை மகர குண்டலமும், பத்ர குண்டலமும் அணி செய்கின்றன. தலையில் ஜடாமகுடம் காட்சியளிக்கிறது. உமை கரண்ட மகுடம் தரித்துள்ளாள். இச்சிற்பத்தின் கலைப்பாணி கி. பி. 11, 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இது நிருத்த மண்டபத்தின் வடபகுதியில் வைக்கப் பெற்றுள்ளது.

கல்வெட்டுகள் உள்ள இடங்கள்

கோயிலின் வெளித் திருச்சுற்றின் வடபுறம் உள்ள ஒரு சிறிய பாறையில் முதலாம் ஆதித்தன் கல்வெட்டு ஒன்றும், இதே இடத்தில் மற்றொரு பாறையில் பராந்தகச் சோழனின் கல்வெட்டு ஒன்றும், நிருத்த மண்டபத் தென்புறச் சுவரில் விக்கிரம சோழனின் கல்வெட்டு ஒன்றும், மதில் சுவரின் வடமேற்கு மூலையில் இரண்டாம் இராசேந்திரன் கல்வெட்டு ஒன்றும், கோயிலின் மேற்கில் உள்ள குன்றில் மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டு ஒன்றும், கோயிலின் கிழக்கில் நிலமட்டத்திலிருந்து சற்று உயர்ந் திருக்கும் பாறையில் போசள மன்னன் வீர இராமனாதன் கல்வெட்டு ஒன்றும், கோயிலின் நுழைவாயிலில் கல்வெட்டொன்றும் ஆக ஒன்பது கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளே யல்லாமல், பத்துக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள், திருச்சுற்றுச் சுவர்களிலும், இக்கோயிலைச் சுற்றியுள்ள பாறைகளிலும் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

கல்வெட்டுகள் கூறும் செய்திகள்

இவ்வூர் தற்பொழுது திருத்தியமலை என்று வழங்கப்படுகிறது. இங்குள்ள கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 19-ஆம் நூற்றாண்டு வரையுள்ள கல்வெட்டுகள் இவ்வூரைத் 'திருத்தயம்',

'திருத்தேயம்', 'திருத்தேசம்' 'திருத்தேசமலை' என்று குறிப்பிடுகின்றன. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் தற்பொழுது ஏகபுஷ்ப பிரியநாதசுவாமி என்று அழைக்கப்படுகிறார். கல்வெட்டுகள், இறைவனைத் 'திருத்தயத்துப் பெருமானடிகள்' என்றும், 'திருத்தேயத்துப் பெருமாள்' என்றும் 'திருத்தேசமுடையார்' என்றும், 'திருத்தேயமுடைய மஹாதேவர்' என்றும், 'திருத்தேச மலை உடையார்' என்றும் 'திருத்தேசம் உடைய நாயனார்' என்றும், 'திருத்தேசமலை உடைய நயினார்' என்றும் குறிப்பிடுகின்றன. இறைவியின் பெயர் கல்வெட்டுகளில் இடம்பெறவில்லை. மக்கள் இறைவியைத் 'தாயினும் நல்லவள்' என்றழைக்கின்றனர். 'திருத்தேசமலை' என்ற பெயர் நாளடைவில் வழக்கொழிந்து திருத்தியமலை என்ற பெயருடன் விளங்குகிறது.

ஆதித்த சோழனின் (கி.பி. 871-907) கல்வெட்டு, திருத்தயத்துப்பெருமானடிகளுக்கு நாட்போனகத்துக்கு ஆறு மாநிலம் கொடையாக அளிக்கப் பெற்றதைக் குறிப்பிடுகிறது. இந்நிலங்களை வயிரடி புகழுறை என்பவனும், நக்கனயதானி என்பவனும், இசக்கன் வயிரடி என்பவனும் கொடுத்துள்ளனர். முதலாம் பராந்தகனின் 39-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு, திருத்தலையூர் சபையார் திருத்தேசத்துப் பெருமானடிகளுக்குத் திருவெள்ளறைக் கல்லால் நிறுத்த துளைப்பொன் இருபது கழஞ்சைக் கொடையாக அளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது. விக்ரம சோழனின் (கி.பி. 118-1135) 15-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு, திருவெள்ளறை உடையான் திருநீலகண்டன் திருத்தேச முடையார்க்கு ஒரு நொந்தா விளக்கு எரிக்கக் கொடுத்த காசு பத்தினை சிவபிராமணர்களான காஸ்யபன் பஞ்சனான தில்லை மூவாயிரப்பட்டனும், காஸ்யபன் சங்கரன் திருத்தேயமுடையானான தேயவிடங்கபட்டனும், ஓமஞ்சன கூனன் உய்ய நின்றாடுவானான திருவானைக்கல்பட்டனும், அலம்பாயந் கூத்தன் கம்பனான திருத்தேசப்பட்டனும், காஸ்யபந் நாதன் திருப்பைஞ்ஞீலி உடையானான திருகற்குடிபட்டனும் பெற்று ஒரு நொந்தா விளக்கு வைத்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

பாதுகாக்கப்பட வேண்டிய கல்வெட்டு

இரண்டாம் இராஜேந்திரனின் மூன்றாம் ஆட்சியாண்டு கல்வெட்டொன்று இக்கோயிலின் வடமேற்கு மூலையில் உள்ளது. இக்கல்வெட்டு பாறையின் மேல் செதுக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு தொடக்கத்தின் கால் பகுதிக்கு மேல் தற்பொழுது இக்கோயிலைச் சுற்றி எடுக்கப்பெற்றுள்ள மதில் சுவரின் கீழ் உள்ளது. இக்கல்வெட்டு தரைப்பகுதியிலிருந்து சுமார் 25 அடி உயரத்தில் உள்ளது. கல்வெட்டின் நீளம் 40 அடி, அகலம் 7 அடி ஆகும். இக்கல்வெட்டு 196 வரிகளைக் கொண்டுள்ளது. கல்வெட்டின் வரிகள் அடிக்கோடிடப்பட்டு தெளிவான வகையில் பெரிய எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. கல்வெட்டின் வாசகம் இறுதியில் தரப்பட்டுள்ளது.

கல்வெட்டு, கால்பகுதிக்கு மேல் மதில் சுவரின் கீழ் உள்ளமையால் கல்வெட்டை முழுமையாகப் படிக்க இயலவில்லை. கல்வெட்டின் தொடக்க எழுத்துக்கள் சிதைந்துவிட்டமையாலும், தொடக்க எழுத்துக்களுக்கு அடுத்தாற்போல் உள்ள எழுத்துக்கள் 'ராஜ' என்று தொடங்குவதாலும், கல்வெட்டின் வரிகள் 68-லும் 69-லும் 'வீரஸிம்ஹாஸநத்து வீற்றிருந்தருளிந கோப்பரகேசரி பந்மராந உடையார் ஸ்ரீ . . . . . யாண்டு மூன்றாவது' என்று வாசகம் வருவதாலும், எழுத்துக்களின் அமைதியைக் கொண்டும், கோப்பரகேசரி என்ற பட்டத்தைக் கொண்டும் இக்கல்வெட்டு இரண்டாம் இராஜேந்திரன் காலத்தைச் சார்ந்தது என அறிய முடிகிறது.

இப்பகுதியின் வரலாற்றையும், சமூக இயலையும் அறிவதற்கு இக்கல்வெட்டு மிகவும் இன்றியமையாததாக உள்ளது. கல்வெட்டில் தேவதான இறையிலியாக விடப்பட்டிருக்கும் நிலத்தின் எல்லையைக் குறிப்பிடும் வாசகங்களும், எல்லையை வரையறுத்த செய்திகளைக் குறிப்பிடும் வாசகங்களும் நம்மை மிகவும் ஈர்க்கக்கூடிய சக்தி வாய்ந்தவையாக அமைந்துள்ளன. இக்கல்வெட்டில், மக்களுக்கு அளிக்கப்பட்ட உரிமைகளை நோக்கும்பொழுது வியப்பாக உள்ளது. உழுவதற்கும், நடுவதற்கும், அறுப்பதற்கும், குறுத்துக்குத்தவும், குற்றேத்தமிடவும், மடைநீர் இறைக்கவும், விலங்கணைக் கட்டவும், சுட்டோட்டால் மாடமாளிகை கட்டவும். உரிமைகள் வழங்கப் பெற்றுள்ளன. ஊரிலுள்ள சேரிகளான பறைச்சேரியும், கண்மாளச் சேரியும், கடைத்தெருவும் இக்கல்வெட்டில் குறிக்கப்படுகின்றன. இது அவர்களின் சமூக வாழ்க்கையை அறிந்துகொள்ள மிகவும் பயன்படுகிறது.

போசள மன்னன் வீரஇராமநாதனுடைய ஆறாம் ஆட்சி யாண்டு கல்வெட்டு (கி. பி. 1260) இவ்வூரிலுள்ள பெருமாள் திருவீதி நெடுங்காலமாய்க் குடியேறப்பெறாமலிருந்ததைக் குறிப் பிடுவதுடன், இவ்வீதியில் குடியேறுகிற ஐந்து நாட்டார்க்கு மூன்று கோல் தலையமலை அளந்து கொடுக்கப்பெற்றதையும் குறிப்பிடுகிறது. மேலும் எடுப்புக் கூலிக்கு மனை ஒன்றுக்கு நாற்கல நெல் கொடுக்கப் பெற்ற செய்தியும் தெரியவருகிறது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவனுக்குச் சொந்தமான புஞ்சை நிலத்தினை மனை ஒன்றுக்கு ஐந்து குறு குழி வீதம் இவ்வாண்டு முதல் கொடுத்து, 'காடுவெட்டி, உழுது பயிர் செய்துகொள்ளும் உரிமையை நல்கியதை மிகவும் அழகாகத் தெரிவிக்கிறது.

நிலங்களை அளக்கும்பொருட்டு பயன்பட்டு வந்த ஒரு அளவுகோலை இக்கோயிலிலுள்ள, சுப்ரமண்யர் கோயிலுக்கு முன்னர் ஒரு பாறையிலுள்ள பாடல் கல்வெட்டு குறிப்பிடுகிறது. கல்வெட்டு இக்கோலை 'திருத்தேசத்தெண் சிறந்த கோல்' என்று குறிப்பிடுகிறது. இக்கோல் 203-ஆல் 35 வேலி நிலம் சோழ மன்னன் ஒருவனால் கொடையளிக்கப் பெற்றதை பாடல் வடிவில் கூறுகிறது. எழுத்தமைதியைக் கொண்டு இக்கல்வெட்டின் காலத்தை கி. பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டாகக் கொள்ளலாம்.

நஞ்சை, புஞ்சை அளவு கோல்கள்

இக்கோயிலின் நுழைவு வாயிலின் கிழக்குச் சுவரில் இரண்டு கூட்டல் குறிகள் (+) இடப்பெற்று, அக்குறிகளுக்கு அருகில் நஞ்சை என்றும் புஞ்சை என்றும் எழுதப்பட்டுள்ளன. நஞ்சை என்று எழுதப்பட்டுள்ள கூட்டல் குறியின் நேராக 4.06 மீட்டர் தூரத்தில் மற்றொரு கூட்டல் குறி உள்ளது. இக்குறிகளைக் கொண்டும், நஞ்சை என்ற வார்த்தையைக் கொண்டும், நஞ்சை நிலங்களை அளப்பதற்கு 4.06 மீட்டர்(13 அடி, 25 அங்குலம்) அளவுள்ள கோல் இப்பகுதியில் பயன்படுத்தப்பட்டு வந்த தென்பதை அறியமுடிகிறது.

ஆனால் புஞ்சை என்று எழுதப்பட்டுள்ள கூட்டல் குறிக்கு நேராக இருந்த கூட்டல்குறி இயற்கையின் சீற்றத்தால் சிதைந்து விட்டது. இருந்தபோதிலும் புஞ்சை என்று எழுதப்பட்டுள்ள

கூட்டல் குறிக்கு நேராக 2.55மீ. தூரத்தில் செங்குத்தாக ஒரு குறி (1) உள்ளது. புஞ்சை என்ற வார்த்தையைக் கொண்டும், இச்செங்குத்துக் கோட்டைக் கொண்டும், இக்கோல் புஞ்சை அளவு கோலின் அரைக்கோல் என்ற முடிவுக்கு வர முடிகிறது. இச் செங்குத்து கோட்டுக்கு நேராக 2.55மீ. தூரத்தில் அங்கு முன் பிருந்து அழிந்த புஞ்சை அளவுகோலின் அளவைக் குறிக்கும் கூட்டல் குறியின் தடயம் தெரிகிறது. ஆகவே இவைகளைக் கொண்டு புஞ்சை நிலத்தை அளப்பதற்கு 5.10மீ. (அ) 16 அடி, 7 அங்குலம் கொண்ட அளவு கோலை இப்பகுதி மக்கள் பயன் படுத்தி வந்தனர் என அறிகிறோம். நஞ்சையென்றும், புஞ்சை யென்றும் எழுதப்பட்டுள்ள வார்த்தைகளின் எழுத்தமைதியைக் கொண்டு, இந்த அளவுகோல்களின் காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண் டெனக் கொள்ளலாம்.

நஞ்சை

+————————————+

4.06மீ (அ) 13அடி, 2.05அங்குலம்

புஞ்சை

+————————|————————+

2.55மீட்டர் 2.55மீட்டர்

5 - 10மீ (அ) 16அடி, 7அங்குலம்

திருவாசல் கட்டுவித்தவன்

இக்கோயில் நுழைவாயிலின் கிழக்குப் பக்கச் சுவரில் ஒரு கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு, மணலூர் கிழவன் தாயன் வென்று மாலையிட்ட சோழகோன் நிலவாணை வெட்டுவார் நாயன் என்பவன் இக்கோயிலின் திருவாசலையும் கருவறையையும் கட்டு வித்தான் என்று குறிப்பிடுகிறது. எழுத்தமைதியைக் கொண்டு, இக்கல்வெட்டின் காலம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டெனக் கொள்ளலாம்.

நிருத்த மண்டபம் திருப்பணி செய்தமை

இம்மண்டபம் பழுதுற்றிருந்தபொழுது (லயமாய் போன பொழுது) மஹாசாமந்தாதிபதியாக (சிற்றரசராக) விளங்கிய

சென்னப்ப நாயக்கர் காலத்தில் அவருடைய உபயமாக நாகண நாயக்கர் கட்டுவித்தார் என்ற செய்தியை கி. பி. 1883-ஆம் ஆண்டைச் சேர்ந்த இங்குள்ள கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது.

மேற்கூறிய கல்வெட்டுகளின் வாசகங்கள் கீழே தரப் பட்டுள்ளன.

கல்வெட்டு — 1

1. ஸ்வஸ்திஸ்ரீ கோ இராஜகேசரி பன் . . . . . .
2. திருத்தயத்துப் பெருமானடிகளுக்கு நாட்ப் போன கத்துக்கு
3. ப் பாச்சிற் கூற்றத்துக் கீழ் பிராற்பு பணை மங்கலவகள் தங்கள் காணி
4. பாகனூர் மிய் வாய்க்கால் வயிரடிபுகழுறை குடுத்த நிலம் மூன்று மாவும் நக்க
5. னயதானி குடுத்த நிலம் ஒரு மாவும் இசக்கன் வயிரடி குடுத்த நிலம் இரண்டு மா
6. வு மாக நிலம் ஆறு

கல்வெட்டு — 2

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட (கோ)பரகேசரி பன்மக்கு யாண்டு முப்பத்தொன்பதாவது
2. (தே)தவதா(நம்) திருத்தலையூர் ஸபையோம் திருத் தேயத்துப் பெருமாளிடை திருவெள்ளறைக் கல்லால்த் துளை (பொன்)
3. இரு(ப)தி(ன்) கழஞ்சு பொன் நிறுப்பித்துக் கைக் கொண்டு இப்பொன் இருபதின் கழஞ்சிக்கும் திருத் தேயப் பெரு

4. மானடிகளுக்கு தேவதானம் திருத்தலையூர் இவரு டைய நில இறையிலி . . . ரண்டு மா(ர)க்காணி நிலத்து . . . .
தச . .

5. றையு எச்சோறும் வெட்டியும் வேதினையும் மற்றும் மெ(ப்)பே(ற்)பட்ட . . . த்த . . . ண்டு மாக்காணி நிலத்துக் . . . . தூட்டு

6. கடவோமாகவும் இப்பரிசு காத்து குடுப்போமாய் இறைகாவல் . . . வை எழுதிக் குடுத்தோ(ம்) திருத் தேயத்து பெருமான்

7. அடிகளுக்கு திருத்தலையூர் ஸபையோம் பணிக்கத் தொட்டு வாவினாப் போக்க எழுதின ப்ரஹ்ம பெருந்திணையான குளமங்கலவங்

8. கிழாநான நிலன் நாநூற்றுவனெ இவை என் எழுத்து இப்படி அறிவேன் காச்சுவன் குமாரன் நீலகண்ட னேன் + இப்படி அறிவேன் காம

9. க்கா ஸ்ரீ சிரன் நாராயணன்னெ + இப்படி அறிவேன் கார்க்கியன் மாதவன் நீலகண்டனெ+

10. இப்படி அறிவேன் மாடிலன் நக்கன் நாராயணனேன்

11. இப்(ப)டி(அ)றிவே(ன்) கவிசியன் இரணிய கற்பப்பந் சுதனேன் +

12. இப்(ப)டி (அ)றிவே(ன்) காமக்காணி நீலகண்டன் துருக்கனேன்

13. இப்படி அறிவேன் காமக்காணி நீலகண்ட கிரனேன் +

14. இப்படி அறிவேன் மாடிலன் வடுகன்னேன்

15. சோலையெ+

கல்வெட்டு — 3

1. ஸ்வஸ்திஸ்ரீ சக்கரவத்திகள் ஸ்ரீ விக்கிரம சோழ தே(வ)
2. ற்கு யாண்டு ௨ரு வது திரிபுவந முழுதுடை வளநாட்
3. டு வடவழிநாட்டு திருத்தேசமுடையார் கோயிலில் சி
4. வப்ராமணர் காஸ்வன் பஞ்சனான தில்லை மூவா
5. யிர பட்டனும் காஸ்வன் சங்க(ர)ன் திருத்தேயமு
6. டையானான தேயவிடங்கபட்டனும் ஓமஞ்ச
7. ன கூநன் உய்ய நின்றாடுவானான திருவானைக் கல்ப்
8. பட்டநும் அலம்பாயந் கூத்தந் கம்பநாந திருத்தேச ப
9. ட்டனும் காஸ்வந் நாதன் திருப்பைஞிலி உடையா
10. நான திருக்கற்குடி பட்டநும் இவ்வறுவோம்
11. இந்நாட்டு திருவெள்ளறை விர . . . . ப
12. ஞிலி உடையாந் திருநீலகண்டந் வைத்த திரு னுன்தா
13. விளக்கு ஒன்றுக்கும் நாங்கள் கைக்கொண்ட காசு பத்து
14. இக்காசு பத்தும் கைக்கொண்டு திருனுன்தா விள(க்)
15. கொன்றும் சன்தராதித்தவல் செலுத்தக் கடவோம்
16. இவ்வநைவோம் பந்மாஹேஸ்வரரஷை

கல்வெட்டு — 4

1. . . . . ராஜ . . . ற்கு
2. மு . . . . . த

3. . . . . .
4. . . . . புரத்து நம் வி
5. . . . . மஹேந்திர வளநா
6. . . . இவ்வூர் திரு
7. . . . ளந்த இத்தேவர்
8. . . . . களப்பாறும் எறிநி
9. . . . . யம் . . . . ம் இவ்வூர் நிஸ்
10. . . . வழுது . . . . . வறு முதலா
11. . . . . காணியிலும்
12. . . . . ரமும் திருநந்தவ
13. . . . . ன நத்தம் நிலம்
14. . . . பத் தெட்டமாக
15. . . . . றை கட்டி இந்நெ
16. . . . . பொந் ஆறும்
17. . . . . ட்ட கிழிறைப் பாட்
18. . . . . க்கு யாண்டு மு
19. . . . . யுாரையும் பா . ம
20. . . . . யார் . . . . முந் இவத்
21. . . . . நாட் சொல்ல
22. . . . . ந் . . னாலும்
23. . . . . மும்மா
24. . . . . முக நதிரி
25. . . . . இயவ . . . யலடல இக்குடு
26. . . . . ள்ள வினவடியெ உடனா
27. . . . . ந்த வேளா . . . . ஜயங்கொ

28. . . . . வன் . . . . ங்கனும்கூம்

29. . . . . தயமாகாணி . . . . ந்த . . . நும் ராஜகேசரி

30. . . . . வெந்த . . . . அடி . . . மேறு மூவேந்த வேளா

31. . . . . ரையநும் . . . . தவநும் . . . வேந்தவேளாநும்

32. . . . . ப்ரஹ்மமா . . . ராயநும் சிறு ந யார் சக்கர பா . . ப்ரஹ்ம மாத்ரப

33. . . . . பல்லவரையநும், விடையில் கந்மி மும்முடி

34. . . . . ராஜராஜ சோழ ப்ரஹமமாரயநும் ராஜராஜ தமிழ் பெ

35. சாழ சேநாமுக மூவேந்த வேளாநும் உத்தம சோழ மூ

36. . . . ப ராஜேந்திர அனுக்கப்பல்லவரையநும் பரகேச

37. . . . ஸ்ரீயமூவேந்த வேளாநும், மீநவந் மூவேந்த வேளாநும்

38. . . . . பளநும் அதிராஜேந்த்ர மூவேந்த வேளாநும் உலகவி

39. . . . . ம நித்தவிநோத மூவேந்த வேளாநும் ராஜராஜ அணுக்

40. . . . . கை கொண்ட சோழ வேந்த வேளாநும் சோறுடை ெ

41. . . . . திருச்சிற்றம்பல மூவேந்த வேளாநும் கங்கை கொ

42. . . . . ராயநும் கடாரம் கொண்ட சோழ மூவேந்த வேளாநும் ப

43. . . . . ம ராஜராஜ செம்பியதரையநும், உத்தமச் சோழ திருவி

44. . . . . ளாநும் நரபாலதுங்க மூவேந்த வேளாநும் ராஜராஜ

45. . . . . யநும் அறிஞ்சிகை விழுப்பரையயநும், நிருப சூளாம

46. . . . . (ெ) சாழ சூளாமணி மூவேந்தவேளாநும், ஆதித்த பருமமூவேந்த

47. . . . . விழுப்பரையயநும், சிங்களாந்தக மூவேந்த வேளாநு

48. . . . . வந்த வேளாநும் சளுக்க குலகால மூவேந்த வேளானும்

49. . . . . தி ராசந் யுரவியும் கொற்றமங்கலத்து பர்பநாப பட்டஸொ

50. . . . . த்து இராடதேவ பட்டநும் பசலை பெரிய நம்பி பட்டநு சூ

51. . . . . நாராயண பட்டநும் புரவுவரி திணைக் களத்து கண்காணி கொ

52. . . . . ளாநும் அதிசய சோழ மூவேந்தவேளாநும் புரவுவரி தி

53. . . . . சோழ பாண்டிய மூவேந்த வேளாநும் பூமியுந் மூவேந்

54. . . . . பொத்தக நாயகம் விட்டங்களூர்ருடையாநும் முகவெட்டி மாந

55. . . . . மாதேவியுடையாநும் வல்லம் முடையாநும் வரிபொ

56. . . . . மங்கல முடையாநும் வரியில்லீடு நாவலூரு டையானும்

57. . . . . லி வரியில்லீடுவித்த புரவுவரி திணைக்களத்து நாயகம் விக்கிரம

58. . . . . வந்த வேளாநும் பூழியன் மூவேந்த வேளா நும் வாசி சக்ரந் வரி

59. . . . . விடங்கள்ளுருடையாநும் வரியில் லிட்டாந் வரியில்லி இநா

60. . . . . ம பட்டோலை எழுதிநாந் கீழ்முகவெட்டி சங்கரந் கணவதியும் இரு

61. . . . . நாள் முந்நூற்றிருபத்தஞ்சிநால் தேவநாத இறையிலியாக வரியி

62. . . . . மஹேந்திர வளநாட்டு, வடவழிநாட்டு, மும் முடி சோழ மங்கலம், பிடிசூழ

63. . . . . ாக புரவுவரி திணைக்களத்து கணக்கரையும் பட்ட(ர்)கள்ளையும் பொத்தநா

64. . . . . ா கள்ளோடும், நிந்ரு எல்லை தெரித்துக் காட்டி, பிடிசூழ்ந்து பிடாகை நட

65. . . . . யும் நாட்டி யறவோலை செய்து போதக வென்று திருவாய்மொழியா

66. ா இலக்கமும் கொண்டு இப்பாசாற்றும் கரை கொப்பத்து ஆகவமல்ல

67. . . . . ந ஆணையும் குருதையும் பெண்டிர் பண்டார முங் கை கொண்டு விஜையாபி

68. . . . . வீரஸிம்ஹாஸநத்து வீற்றிருந்தருளிந கோப் பர கேசரி பந்மராந உடையார் ஸ்ரீ

69. , ... யாண்டு மூன்றாவது நாள் முன்நூற்றையம் பத்தஞ்சிநால் திருமந்

70. . . . . மெரு பல்லவரையர் எழுத்தினால் நாடெ முக்கு [திரு முக்கு] திருமுகம் ப்ரஸ

71. . . . . நாட்டோம் எதிரெழுந்து செள்று ப்ராஸாதப் பட த்தொழுது வாங்கி நக்

72. த் எல்லை கொத்துக்காட்டி பிடிசூழ்ந்து பிடாகை நடத்த ராஜமஹேந்திரரெ

73, ... டஇ மும்முடிசோழ மங்களத்துக்கு கீழ்பார்க் கெல்லை இவ்வூர் வடகீழைமூலை

74. . . . தருவரங்கீஸ்வரமுடைய மஹாதேவர் தேவ் தானம் வேங்கை மன்றத்து நிலத்தில்

75. . . . ,டைக்கு மேலாசறுதியேய் வந்து இதிலே நின்றுன் தெற்கு நோக்கி இவ்வூர் அ

76. . . . . நறுபியருடையசெப்புலத்திந் மேல் சறுதி இட்டரேய் உற்று இவ்வீட்டேரே

77. . . . . இவ்வூர் பாலந் தொடியே நறுபியருடையச் செப்புலத்திந் மேல் சறுதி இட்டரை

78. . . . . டரேய் தெற்கு நோக்கி இவ்வேங்கை மன்ற மெய்யேர்ப் போந இட்டே ரேயுற்று

79. இவ்வூர் வறகணஞ் செய்யே நருபியருடை செப்புலத் திந் மேலாசறுதியிட்டு

80. . . . . விட்டேரில் நிந்றும் தெற்கு நோக்கி இச் செப்புலத்தின் தெந் மேலை மூலையுற்று இ

81. . . . . க்கு நோக்கி இவ்வூர் மொடியாந்குளச் செய் யெந் வ..யாருடை செப்புலத்தின்

82. . . , . ய்யுற்று இதில் நிந்று தெற்கு நோக்கி திரு வெள்ளறை நிந்றுந் திருத்தேய்யமு

83. . . . வா ஸ்ரீ கோயிலே யேறப்போந பெருவழி . . யுற்று இதில் நின்றும் தெற்கு ெ

84. . . . பாழியிந் கீழ்ழா சறுதியேயுற்று இதில் நின்று இவ்வூர் நொச்சிப்பாழிச் செய்யே

85. . . . . ச் செப்புலத்திந் மேலாசறுதி இட்டேரேயெற் உற்று இவ்விட இடரெய் தெற்குக்கு நோ

86. . . . . லந் இவ்வடைய வந்து இட்டொ முடிந்து இச் செப்புலத்திந் மேலாசறுதியே தெற்

87. . . . . ர சேதியரைக்கல்லொ சைய்யெ நறுபிய ருடைய செப்புலத்திந் மேலாசறு

88. . . . . செப்புலத்தின் மேலாசறுதியே தெற்கு நோக்கி இவ்விச்சிறுக் கரைக்கல்லேயுற்று இ

89. . . . . தெற்கு நோக்கிப் பாச்சில் குறுவிடத்து அதவத்தூர் ரெல்லைக்கு மெலாசறுதியெ தெ

90. . . . . று இதில் நின்றும் திருவெள்ளறை நிற்றுங் நெந்மலியே யெற்ப போநவழி

91. . . . . யியுற்றுத் தெந்பாற்கெல்லை இவ்வதவத்தூர் ரெல்லையில் வடவாசறுதி விரி

92. . . . . ர . . . ய மேற்கு நோக்கி வந்து சேனை யரையந் கிணற்றோடு செப்புலத்திந் தெந்

93. . . . . டை இட்டேரேயுற்று இவ்வதவத்தூர் ரெல்லை வடவாசறுதி வழிநடை இட்டேரே

94. . . . . ாக்கி செந்தாமரைக் கண்ணாழ்வார் தேவதா நம் கொமங்கலத்து கடற்றொடு செய்யெ

95. . . . . ட்ச் செப்பிலத்திந் வடகீழ்மூலையற்று செ செப்புலத்திந் வடவாசறுதி வழிநடை இட்

96. . . . . நோக்கி ஊமைக் கடற்றிந் தெந்நாச்சறுதி வழிநடையிட்டேரேய் மேற்கு நோக்கி

97. . . . . ந செய்யெ நறுபியருடை செப்புலத்திந் வடகீழ் மூலையுற்று இச்செப்புல

98. . . . . வதி வழிநடை இட்டேரேய மேற்கு நோக்கி நெல்மலி நிலம் கவிகேசி நாராயண

99. . . . . ண் உள்ளிட்டாரும் திருநாராயண விண்ணக ரத்தே வாரும் உள்ளிட்டாரும் உடைய செப்புலத்

100. . . . . யில் ஊருள்பட்ட புளியிந் வ்டவாசறுதி வழி நடை இட்டேரேய் மேற்குக்கு நோக்கி இவ்வூர்

101. . . . . ம் ஈஸ்வரந் நாராயணந் செப்புலத்திந் வட வாசறுதி யுற்று இவ்வடவாசறுதி வழி

102. . . . . ரய மேற்க்கு நோக்கி இவ்வூர் காஸ்யபந் ஆதித்தயந் நக்கந் செங்கரை செய்யெ

103. . . . . டச் செப்புலத்திந் வடவாசறுதி வழிநடை டெ இடரேய் மேற்கு நோக்கி இச்செப்

104. . . . . மாச்சறுதியில் நிந்ற இவ்வூர்க் கீழ்ழைக் குளத்திந் கீழ்ழைக் கடைபோக்கிந் கீழ்ழை

105. . . . . ய்யுற்று இதிந் வடவருகெய் மேற்க்கு நோக்கி இவ்வூர் கீழ்ழைக் குளத்தின் கீழ்ழை

106. . . . . க்கிந் வடவாசறுதிச் செப்புலத் தொண்டியிந் தெந்நாசறுதியெ மேற்க்கு நோக்கிய

107. . . . . ர்கெல்லை இவ்வூர் செப்புலத்திந் மெல்லாச் சறுதிப் பழவேலியெ வடக்கு நோ

108. . . . . நெல்மலிக் கீழைக்குளத்திந் ஏரியுள் வாய் நிந்ற நாரைக்கல்லை அற்று இதில் நி

109. . . . . நோக்கி எரியுள் வாய்நிந்ற பிளதல கல்லை யுறறு இவ்வேரி யிந் வடவாசறுதி சதுடுகா

110. . . . . றுதியெ மேற்க்கு நோக்கித் திருவெள்ளறை திருப்பஞ்ஞீலியூருடைய இலை

111. . . . . லத்திந் கீழ்மாசறுதியுற்று இதில நிந்றும் வடக்கு நோக்கி உற்று இவ்விதையெ

112. . . . . கி இந்நெல்மலிப் பாதகாரி நாராயணந் பள்ளி கொண்டாநும் இவந் தம்பிமாரும் மு

113. . . . . புலத்தின் வடகீழ்மூலைப்பாவங்கல்லையுற்று இச்செப்புலத்திந் கீழ்ழை ம்ல்

114. . . . . நோக்கமெந இங்கலமெலா மெதாறறுச் செப் புலத்திந் கீழ்ழாசறுதியுற்று இவ்வூர்க் கவி

115. . . . . திந் சிறுத்தேய முடையாந் செப்புலத்திந் தென்கீழ் மூலையுற்று இவ்விதையெ வட

116. . . . . செப்புலத்திந் கீழ்ழாசறுதி நிந்ற கருங்கல்லை யுற்று இச்செப்புலத்தின் வடவிை

117. . . . . நோக்கியுற்று இவ்விதையெ வடக்கு நொக்கி நெல்மலிந் நறு திருத்தலையுரெயை

118. . . . . நடை இட்டேரேயுற்று இவ்விட்டேரேய் வடக்கு நோக்கி திருவெள்ளறை பிடாகை புகு

119. . . . . ள் நாரி சேயெ நறுபியருடைய செப்புலத்திந் கீழ்ழாற்றுதி வழிநடை இட்டேரே

120. . . . . டெடேரேய வடக்கு நோக்கி வயிதா உள்ளிட்டார் இவ்வூர்ருடைய செப்புலம் வற கணஞ்செ

121. . . . . பியருடை செப்புலத்தின் தெந்மேலேய் மூலை இட்டேரேய்யுற்று இவ்விட்டேரேய் கிழக்

122. . . . . வந்பாழி வடவாசறுதி வழிநடை கெட்டே ரேய்யுற்று இவ்விட்டேரேய் கிழக்கு நோக்கி இவ

123. . . . . காஸ்யபன் நாராயணநை யுள்ளிட்டாருடைய புநகஞ்செய்யெந் நறுபியருடைய செப்புல

124. . . . . ந் நாசறுதி வழிநடையிட்டேரேய்யுற்று இவ் விட்டேரேய் கிழக்கு நோக்கி இப்புந் கஞ்செயிந் தெந்கி

125. . . . . யுற்று இச்செப்புலத்திந் கீழாசறுதியெ வடக்கு நோக்கி இப்புந் கஞ்செய் செப்புலத்தின் கீழ்மா

126. . . . . இச்செப்புலத்தின் வடவாசறுதியெ மேற்கு நோக்கியுற்று வடக்கு நோக்கி இவ்வூர் அ

127. . . . . பணந் செந்தாமரைக் கண்ணநை உள்ளிட் டாரிச்சி யொ செய்யெ நறுபியர்ருடைச் செ

128. . . . . தெந் நாசறுதியெயுற்று இதில் நிந்றும் கிழக்கு நோக்கி செந்தாமரைக் கண்ணாழ்வார் தெ

129. . . . ணலி யேரிக்கடை பொக்கையுற்று இதில் நிந்றும் கிழக்கு நோக்கி மணிலித்தென்மே

130. . . . . யல்லையுற்று இதில் நிந்றும் கிழக்கு நோக்கி இவ்வூர்க்கு இவந் தொண்டியெந்று யறு

131. . . . . புலத்தின் தெநநாசறுதி வேலியெ கிழக்கு நோக்கி வடபாற்க்கெல்லை இவ்வூர் பொ

132. . . . . நறுபியருடை செப்புலத்திந் தெந்நா சறுதி வேலியே கிழக்கு நோக்கி இச்செப்புல

133. . . . . ழழை மூலையுற்று இச்செப்புல்த்திந் கீழை வேலியே வடக்குநொ இம்மணலியூர்று

134. . . . . ழை செப்புலத்திந் தெந்மேலை பாவங்கல்லை யுற்று இச்செப்புலத்திந் நெந்நா

135. . . . . ப கிழக்கு நோக்கி இம்மணலியில் நிந்றும் திருத்தேயமுடைய மஹாதேவர் ஸ்ரீ கோயிலெய்

136. . . . . கிந வழிநடை இட்டேரெய்யுற்று இதில் நிந்றும் கிழக்கு நோக்கி இவ்வூர்ச் சோமமார்பட

137. . . . . யருடைய செப்புலத்திந் தெந்நாசறுதி வேலியெ கிழக்கு நோக்கியுற்று இதில் நிந்

138. , ... நோக்கியுற்று இதில் நிந்றும் கிழக்கு நோக்கி வண்ணாந் தொண்டிய நறுபியருடை

139. . . . . பத்திந் தெந்நாசறுதி வேலியே கிழக்கு இவ்வூர் சிறுமாவாக்க மெந்று யியருடை

140. . . . . திந் மேலாசறுதி உற்று இச்செப்புலத்தின் மேலா சறுதி வேலியெ தெற்கு நொக்கிச் சென்று தென்மே

141. . . . . தில் நிந்றும் கிழக்கு நோக்கி தென் கீழ் மூலையுற்று இச்செப்புலத்தின் கீழை விதையே வடக்கு

142. . . . . இச்செப்புலத்திந் கீழாசறுதி வேலியே வடக்கு நோக்கி இவ்வூர் சிறுநத்தச் செய்யே நறுபியருடைச்

143. . . . . தெந்மேலை மூலையுற்று இச்செப்புலத்திந் தெந்நாசறுதி வேலியே கிழக்கு நோக்கியுற்று இவ்வேலியே

144. . . . . யுற்று இவ்வேலியே கிழக்கு நோக்கியுற்று வடகிழக்கு நோக்கி இவ்வூர் திருநத்தச்செய் நறு பியருடை

145. . . . . லத்திந் கீழைச் செப்புலத்திந் தெந்நா சறுதியில் இம்மணலியில் நிந்றும் வேங்கை மாநற்கே

146. . . . . மேற்போந வழிநடை இட்டேரேய்யுற்று இவ்வழி நடை இட்டேரே கிழக்கு நோக்கி இவ்விட

147. . . . . நோக்கியுற்று இவ்விட்டேரேய் வடகிழக்கு நோக்கியுற்று இதிந்நிந்றுந் தெற்கு நோக்கி முந்பு துடங்கிந வடக்கீழ்ழை மூலையாந

148. . . . . டெக்கே வந்நுற்றது இந்நிலங்களுக்கு உழுவும் நடவும் அறுக்கவும் உள்ளிட்டு வேண்டு வதிக்கு இவ்வூர்களில் நிலங்கள்

149. . . . . போதவும், போதவும் பெறுவதாகவும் இவ்விசைந்த பெருநாற்கெல்லையுள்ளகப்பட்ட நீர் நிலத்தில நிலமும் புஞ்சை

150. . . . செ, பெருகையும், குளமும், கோட்டகமும், ஊர்ருணிகளும் ஓடையும் உடைப்பும், கிடங்கும் கேணியும் கோயில்களும், திருமு

151. . . . . ளை பயடப. யு கெடயும், கடைத்தெருவும், ப்றைச்சேரியும், கந்மானச் சேரியும், சுடுகாடும், பட்டிறையும், மன்றுமக்கு

152. . . . . றும் தெற்றியும், கானடிபீடிலிகையும், களறும், உவர்றும், மீன்பிடிப்பள்ளமும் தேன்படு பொதும்பு மேநோக்கியமரமும்

153. . . . . ணறும் உள்ளிட்டு, நீர்பூசி நெடும்பறம் தெரிந்து உடும்போடியாமை தவழ்ந்தெப்பேர் பட்டதும் உண்ணிலம் ஒழிவி

154. . . . . புடசி மிகுதிக்குறைமையும் உள்ளடங்கப் பெற்றதற்கு பெற்ற இல்வெல்லை இந்நிலத்துக்கு நீர்கீந்தவாறு வாய்க்கால் கல்

155. . . . . வும் பெறுவதாகவும், இந்நிலத்துக்கு நீர் பாயும் வாய்க்கால் களபமும் படியெ நீர் பாயவும், விடவும் பெறுவதாகவும் இவ்வாய்க்கா

156. . . . . குறுத்துக் குத்தவும், குற்றேத்தமிடவும், மடை நீரிறைக்கவும், விலங்கனைக்கட்டரும், பொதி தாகவும் செந்நீர் பொதுவ

157. . . . . சுட்டோட்டால் மாடமாளிகை எடுக்கப் பெறுவதாகவும் பெருஞ்செக் (கிடப்)

158. . . . . பெறுவதாகவும் தெங்கம் மாவும் க

159. . . . . மஞ்சளும் கா . . . . நயுங் கொடியும் முள

160. . . . . நிலத்துக்கு நிர்பாயும் வாய்க்கால் ப

161. . . . . கவும் இப்படி பெற்றமைக்கு பெற்றப்

162. . . . . மகு சவாகாணமும் நிர்கூலியும் இலை

163. . . . . லெருதும் நாடுகாவலும் ஊடு போக்கு

164. . . . . நதிகாலும், உள்ளிட்டு எவ்வகைப்பட்டது

165. . . . . தண்டம் எறியவும் குத்தவும் காள்ள

166. . . . . உறந்திர வளநாட்டு, வடவழிநாட்டு தேவ

167. . . . . இக்காட்டி கல்லும் கள்ளியும் நாட்டி . . . . அதி

168. . . . . ந்நாட்டு திருவெள்ளறைக் க

169. . . . . பந் இவ்வூர் காஸ்யபந் பட்டந் சங்

170. . . . . இப்பாற் தாயந் பற்பநாபந் திரைகாந்

171. . . . . வந் அறிவந் இப்படிக்கு இவ்வூ

172. . . . . ந் எழுத்து இப்படிக்கு கவிணியந்

173. . . . . இந்த இவையெந் எழுத்து இப்

174. . . . . படிக்கு இவை கவிணி நாராயணன் மாறன் எழுத்து இப்படிக்கு நாராயணந் எழுத்து இப்படிக்கு கா

175. . . . . ஸ்யபந் மருதந் சாந்த . . . இப்ப அவி சாதித்த அமைந்த மும்முடி சோழமங்

176. . . . . கலம் பிடிநடப்பி க . . . . . பெருமக்களில் கவிணியந் நாராயணந் நாராயண

177. . . . . நும் பார்த்தாய சார்த்த . க . . . . . ணியந் கூத்தணந் கெசவநும் சவிகேசி நீல

178. . . . . கந்டந் கேசவநும் பாதகார விந . . . . வாக ரேகை இவர்களுக்காக சமை

179. . . . . த்திட்டேந் இவ்வூர் (ம) த்யஸ்தந் சட ெ . . டந்நாந அலங்காகரப் பிரியந் மும்முடி சோழமங்கல

180. . . . . ம் பிடிநடப்பித்து அறவோலை எழு . . . . . ா ஊர் கரநத்தான் மத்யஸ்தந் நாயநேந் இவையெந் எ

181. . . . . ழுத்து இப்படி இவ்வூர் கவிநியன் வட்ட . . . ாஜ சாத்தந் நீலகண்டந் அறிவந் இப்படிக்கு காஸ் யபந் கேசவ சங்

182. . . . . கர நாராயணந் அறிவன் இப்படிக்கு இந் நாடாரகச் சமைந்துதி இழவார் தேவதாநம் கோ மங்கலத்து

183. . . . . வெள்ளாளந் கண்ணந்திருத்தநேந் இவை யெந் எழுத்து இவ்வூர் வெள்ளாளந் கம்பந் புலியநும் நக்

184. . . . . கந் நாகமங்கல உத்தமநெந் இவையெந் எழுத்து இப்படிக்கு இவ்வூர் மத்யஸ்தந் திருத் தேயந் வெங்காட

185. . . . . ண்ணாழ்வார் தேவதாநம் மணலி வெள் ளாளந் தூ இடி திருத்தத் திருவெள்ளறை செந்தாம

186. . . . . ல் இவர்களுக்குச் சமைந்து எழுத்திட்டேந் திருவெள்ளறை இப் . கம் மாட்டாமையில் இவர்க

187. . . . . ண் எழுத்து இந்நாட்டுக்குச் சமைந்து திருநெற்குந்றத்து ப்ரநாயந் ப்ரஹ்ம் பிரியநெந் இ

188. . . . . க்குச் சமைந்து திருநெற்குந்றத்து ப்ராஹ் மணந் பார்த்தாயநவ எந் எழுத்து இப்படிக்கு

189. . . . . நாகந் ஸ்ரீகண்டநும் கை மாட்டாமையில் இவர்கள் ப கூந்த பள்ளிகொண்டாந்

190. . . . . நு இந்நாட்டுக்குச் சமைந்து திருத்தலையூர் கௌசிகந் சகாட நாராயணநேந் இ

191. . . . . து எழுத்திட்டேந் திருத்தலையூர்க் கர்ணத் தாந் நாராயநந் நெழுத்து இந்நாட்டு

192. . . . . கல்லுங்கள்ளியு நாட்டி அறவோலை செய் வித்துக் குடுப் இப்படி பிடிசூழவித்து இ

193. . . . . வை எந் எழுத்து இப்படி பிடிசூழவித்துக் கல்லுங் கள் . . . . க்குக்குப்பை தில்லை

194. . . . . நாராயண பட்ட நேந் நாராயண பட்டஸ்ய இப்படி பிடி சூழவித்து குடுத்தேந் ஸெபாபட

195. . . . . த்தெந் ஸேகரபட்டகளில் உருத்ரர் ஸ்ரீபட்ட
நேந் உருத்ரர் ஸ்ரீபட்டக நாட்டி அறவோலை இ
196. . . . . ட பெருமாநாந ஐய்யாயிரத்தெழுநூற்றுவ
ஸாத்ய பிரிய எழுதிநெந் இவ்ஸூர் மத்ய

கல்வெட்டு — 5

1. ஸ்வஸ்திஸ்ரீ திண் சிறந்தெ கொ
2. னெடுத்த பாதந் திருத்தேசத்
3. தெண் சிறந்த கொற் கிருநூற்
4. றம் முன்றின் கண் சிறந்த ஏ
5. ழைந்து வெலி நிலஞ் செய்தா
6. ன் இறையிலியாச் சோழன்
7. றனின்னதளால் சூழ்ந்து

கல்வெட்டு -- 6

1. ஸ்வதிஸ்ரீ சார்வபௌம சக்கரவத்திகள் போசள
2. ஸ்ரீ வீர இராமனாத தேவற்கு யாண்டு (ஆ) றாவது இராஜ இராஜ வளநாட்டு வடவழி நாட்டு திருவெள் ளறை மேல் பிடாகையில்
3. உடையார் திருத்தேசம் உடைய நாயனார் கோயில் ஆதி
4. (ச)ண்டேஸ்வர தேவர் அருளால் கன்மிகளோம் இன்னாயனார்க்குப் பதியில் தெற்க்கு திருவீதி
5. . . ஒது அறியும் பெருமாள் திருவீதி நெடுங்காலம் குடி ஏறாதே(க்) கிடக்கையில் இத்திருவீதியில் கு(டி)

6. . . (யெ) ற ஐஞ்சு நாட்டார்க்கு முக்கோல் தறை மனை எடுத்து குடி ஏறுகிறவர்களுக்கு எடுப்புக் கூலிக்கு ஸ்ரீ பண்

7. . . . . மனை ஒன்றுக்கு நாற்கல நெல்லும் இன்னா யனார் திருநாமத்துக்காணி புன்செய் நிலத்து பாச்சினைக் கல்லுக்கு

8. இதற்குட்பட்ட புன்செய் நிலத்திலே இவ்வாண்டு முதல் காடுவெட்டிப் பயிர்செய்து மனை ஒன்றுக்கு ஐந்து குறுகுழி இறை

9. யிலியாக தாங்களே உழுது சந்திராதித்தவரை கொள்ளக் கடவர்களாகவும் ஆளவும் இத்தெவை வா என்று கொள்ள

10. க்கடவதல்லவாகவும் சொன்னோம் உடையார் திருத் தேச மலை உடைய நாயனார் கோயில்

11. ஆதி ச(ன்) டேஸ்வர தேவர் அருளால் கண்மிகளோம் இப்படிக்கு இவை கோயில் கணக்கு பணமதி

12. ப் பிரியன் எழுத்து இப்படிக்கு மையுசு வகுளம் திருமஞ்சனம் மதியட்டன் எழுத்து

கல்வெட்டு — 7

1. திரிபுவன சக்கிரவருத்திக(ள்) ஸ்ரீகொலோத்துங்க சோழ தேவற்கு யாண்டுயசாவது வடவழி நாட்டுந் முப்படை வலையர்க்கும் தரநிமார்க்கும் வள்ளுவப்படி நாட்டு நிலப்ப

2. டை வலையர்கும் குந்மர்க்கும் சி . . . உலகுடைய பிள்ளையான் அகளங்க நாட்ாழ்வானேன் இவ்வாண்

3. டு முதல் விளைநிலத்திலே பெரும்படி ஆளுக்கு ஒரு மாவும் ப . . . க்த ஒருமாவரையும் சீவிதமாக தந்தோம் ஊர்

4. களிலே பெறக்கடவதாகவும் அடைப்பு . . பார்க்கும் புறத்தாரே இவ்வூர்கள் மேவநா நிற்க கடவதா

5. கவும் இந்நிலத்துக்குமாக கலம் உள்ளி(ட்ட) . . . யம் கொள்ளக்கடவதல்லாது தார் அடி இப்படியே எந் வ

6. ங்குஷத்திலுள்ளாரும் நிலைநிறுத்திக் குடுக்க கடவ தாகவும் இப்படிக்கிசைந்து உடையார் திருத்தேச மலை உடையார் கோ

7. யிலிலே இன்னாடு கூறுசெய்கிற தெந்நவந் பிரம்[ம] மாராயரையும் தே

8. வ கந்மிகளையும் கோயிற் கணக்கு திருவெள்ளறை உடையாந் மலை சீரிளங்ககோவையுங் கூட கொண்டுத

9. வ இப்படிக்கு வெட்டிவித்து கொடுத்தேந் இது விலக்குவார் வல்லவரையந் சத்தியமே

கல்வெட்டு — 8

1. ஸ்வஸ்திஸ்ரீ இத் திருவாசலும் அரு
2. வரையும் மணலூர் கிழவன் தா
3. யன் வென்று மாலையிட்ட சோ
4. ழ கோன் நிலவானை வெட்டுவ
5. ார் நாயன் செய்தான்

கல்வெட்டு — 9

1. சுபமஸ்து பிலவ வருஷ
2. ம் ஆவணி (மீ) உ௰ரு ஸ்ரீமண்
3. மஹாசாமந்தாதிபதி

4. கொட்டகையில் செ(ன்)னப்
5. ப நாயக்கர் நம்முடைய நா
6. யக்கதன சீமை ஆமூர் நாட்டு வ
7. டவழி நாட்டுத் திருத்தேசமலை
8. உடைய நயினார் நிறுத்த ம
9. ண்டபம் லயமாய் போ
10. கையில் இந்த மண்டபம்
11. என்னுடைய உபையமா
12. க நாகண நாயக்கர் கட்டு
13. வித்தார் ஸுபமஸ்து

குறிப்பு: இக்கோயில் கல்வெட்டுகளை இந்நூலின் ஆசிரியர் தன்கள ஆய்வின் பொழுது படித்து எழுதியுள்ளார். இக்கல்வெட்டுகள் யாவும் இதுவரை அச்சிடப்படவில்லை.

ஆலக்கள்

ஐந்தாம் பகுதி

ஐ

9

கோயிற் கட்டடக் கலை

தமிழகத்திற்குப் பலவகைச் சிறப்புகளுண்டு. அவற்றுள் தலையாய ஒன்று, தமிழகத்தின் கண் அமைந்துள்ள எண்ணற்ற கோயில்களாகும். கோயில்கள் நமது தமிழகத்தின் பழம்பெரும் நாகரிகத்தையும், பண்பாட்டு நலங்களையும் விளக்கிக் கொண்டிருக்கும் வரலாற்றுச் சின்னங்கள்.

திருக்கோயி லில்லாத திருவிலூருந் திருவெண்ணீறணியாத
திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும் பாங்கினொடு பல
தளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்க மூதா வூரும் விதானமும் வெண்
கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர் பறித்திட் டுண்ணா வூரும் மவையெல்லா
மூரல்ல வடவிகாடே.[1]

என்னும் திருநாவுக்கரசு பெருமானின் தனித்திருத்தாண்டகத்தால் தமிழக மக்களின் வாழ்க்கையில் கோயில்கள் வகித்த உன்னத நிலையை அறிய முடிகிறது.

தமிழகம் வளர்த்த அழகுக் கலைகளில், இன்றைக்கும் உலகம் போற்றிப் பாராட்டி, வாழ்த்தி, வரவேற்கும் நிலையில் சில பல அழகுக் கலைகள் தமிழகத்திற்கு புகழையும் பெருமையையும், சேர்த்துக் கொண்டிருக்கின்றன. அவற்றில் மிகச்சிறப்பித்துச் சொல்லக்கூடியவைகள் இசைக்கலை, நாட்டியக்கலை சிற்பக்கலை கட்டடக் கலைகளாகும்.

கோயிற் கட்டடக்கலைக்கு தமிழகத்தில் எண்ணற்ற நேரிடைச் சான்றுகள் உள்ளன. மன்னர்க்காயினும், இறைவனுக்காயினும் அல்லது சாதாரண குடிமக்களுக்காயினும், மனை, கோயில், வீடு

ஆகியவற்றை அமைப்பதற்கு ஒரு பண்பட்ட இலக்கண முறையை மக்கள் மேற்கொண்டிருக்கவேண்டும். இம்முறை நாளாவட்டத்தில் வளர்ச்சியடைந்த ஒன்றாக இருந்திருக்க வேண்டும். தென்னகத்தில் மயன் மரபு என்றும் இந்திய நாட்டின் வடபகுதியில் விசுவகர்ம மரபு என்றும் பழங்காலத்தில் வேறுபட்ட மரபுகள் நிலவி வந்திருக்கின்றன.[2]

'மயன்விதித் தன்ன மணிக்கலா லமளிமிசை நெடுநிலை மாடத்திடை' சிலம்பின் கதாநாயகன் கோவலனும், கதாநாயகி கண்ணகியும் அமர்ந்திருந்ததாக இளங்கோவடிகள் குறிப்பிடு கிறார்.[3] இதிலிருத்து மயன் மரபு சங்க காலந்தொட்டே தமிழகத்தில் கையாளப்பட்டு வந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது. அந்நாள் தொட்டே பழக்கத்திலிருந்தாலும் மயன் மரபு எழுத்து வடிவம் பெற்றது கி.பி. 11, 12-ஆம் நூற்றாண் டளவில்தான் இருக்குமென்று கருதப்படுகிறது. இந்நூல் கிரந்தம், மலையாளம் ஆகிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருப்ப தால் இது தென்னகத்துக்கு உரிய நூல் என்று கொள்ளப் படுகிறது.

கோயில்கள் பலவகைகளாகக் கட்டப்பட்டன. கட்டட அமைப்பைக் கொண்டு இவை பலவாறு பெயர் பெற்றன. திருநாவுக்கரசு பெருமான் தன் பதிகத்தில் பலவகையான கோயில் களைப் பாடியிருக்கிறார்.

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதி னொடெட்டும் மற்றும்
கரக் கோயில் கடிபொழிற்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக் கோதி மறையவர்கள் வழிப்ட டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்தி றைஞ்சத் தீவினைகள் தீருமன்றே.[4]

இவ்வகைக் கோயில்களில் சில இன்றுமுள்ளன. இவையேயன்றி பூங்கோயில், தூங்கானைமாடம் போன்ற கோயில்களையும் திருநாவுக்கரசர் பாடியிருக்கிறார்.

இக்கோயில் வகைகள் தவிர மாடக்கோயில் என்றொரு வகையுண்டு. கி.பி. நான்காம் நூற்றாண்டளவில் கோச்செங்கண்ணான் என்னும் சோழ மன்னன் இத்தகைய பல கோயில்களைக் கட்டுவித்தான். கருவறை கீழ்தளத்தில் இல்லாது மேல்தளத்தில் இருக்கும் கோயில்களுக்கு மாடக்கோயில் என்று பெயர். இத்தகைய கோயில்கள் தமிழ்நாட்டில் பல உள்ளன.

கோயில்கள் அடி, கால், கூரை, கழுத்து, தலை, குடம் என்ற அங்கங்களைக் கொண்டு விளங்குகின்றன. இவ்வங்கங்கள் அடி, கால், தோள், கழுத்து, தலை, முடி என்று மனித அங்கங்களுக்கு ஒப்பிடப்படுகிறது. கோயிலின் அடிப்பகுதி (அதிட்டானம்) உபானம், ஜகதி, குமுதம், பத்மம், பட்டிகை என்ற பல பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. இவற்றை மாற்றி மாற்றி அமைப்பதால் பல்வேறு வகையான அடிப்பகுதிகளை உருவாக்கலாம். சில கோயில்களில் அடிப்பகுதியின் கீழ் உபபீடம் என்னும் பகுதி அமைக்கப்படும். கங்கைகொண்ட சோழீச்சுவரம், தஞ்சை பெருவுடையார் கோயில்களில் இதனைக் காணலாம். கட்டடத்தின் உயரத்தினை உயர்த்துவதற்கும், அழகுபடுத்துவதற்கும் உபபீடத்தை அமைப்பர். பல கோயில்களில் உபபீடமின்றி அடிப்பகுதி மட்டும் அமைக்கப்பட்டிருக்கும். அடிப்பகுதிதான் மேலுள்ள கட்டடம் முழுவதையும் தாங்குகிறது.

அடிப்பகுதியின் மேலுள்ள பகுதி 'கால்' அல்லது 'சுவர்' என்றழைக்கப்படும். இப்பகுதியை அழகுபடுத்தும் பொருட்டு அரைத் தூண்களும், கோட்டங்களும், மகரதோரணங்களும் அமைக்கப்படும். சுவற்றின் மேல் வரும் பகுதி கூரை (பிரஸ்தரம்) என்றழைக்கப்படும். இக்கூரை அறையை மூடும் அங்கமாகும். இது பூதவரி, கொடுங்கை, யாளிவரி என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டு விளங்கும். இதன்மேல் ஒன்று, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தளங்கள் அமைக்கப்படும்.

மேலே அமைக்கப்படும் சிகரத்(தலை)திற்கேற்ப அதன்கீழ் சதுரமாகவோ, வட்டமாகவோ, எண்பட்டையாகவோ அமைக்கப்படும் பகுதி கழுத்து (கிரீவம்) எனப்படும். இப்பகுதியின் நான்கு திசைகளிலும், நான்முகன், விஷ்ணு, சிவன் அல்லது இந்திரன் ஆகியோரின் உருவங்கள் திசைக்கொன்றாக இடம்பெறும்.

கழுத்திற்கு மேல் எழுப்பப்படும் பகுதி 'தலை' (சிகரம்) என்றழைக்கப்படும். இது எண்பட்டையாகவோ, சதுரமாகவோ, வட்டமாகவோ அமைக்கப்படும். தலைப்பகுதியின் அமைப்பைக் கொண்டு கோயிலை பலவகையாகப் பிரிக்கலாம். தலைப்பகுதி எண்பட்டை வடிவிலிருந்தால் 'திராவிட சிகரம்' என்றும் சதுரமாக இருந்தால் 'நாகர சிகரம்' என்றும், வட்டமாக இருந்தால் 'வேஸர சிகரம்' என்றும் அழைக்கப்படும். இவ்வமைப்புகள் அனைத்தும் தமிழகத்தில் காணப்படுகின்றன. இந்தியாவின் தென்பகுதியிலுள்ள கோயிலமைப்பை 'திராவிடம்' என்றும் வடபகுதியில் உள்ளதை 'நாகரம்' என்றும், இடையிலுள்ளதை 'வேஸரம்' என்றும் கூறலாம்.

தலைப்பகுதியின்மேல் குடம் போன்றும், அதன்மேல் குவிந்த தாமரை போன்றும் உள்ள பகுதியைக் கலசம் (ஸ்தூபி) என்பர். இது உலோகத்தாலோ, சுதையாலோ, கல்லாலோ செய்யப்பட்டிருக்கும்.

கூரைக்கு மேல் ஒன்று, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிலைகள் (தளங்கள்) அமைக்கப்படுவதுண்டு. ஒரு நிலையிலுள்ள கோயில் 'சிறு கோயில்' என்றழைக்கப்படும். நிலைகளின் எண்ணிக்கையைக் கொண்டு 'இருநிலை விமானம்' 'மூன்று நிலை விமானம்' என்று குறிப்பிடுவர். ஒவ்வொரு நிலையிலும் சாலைகளும், கூடங்களும் மாலை போல் சுற்றியமைக்கப்பட்டிருக்கும். நீண்ட சதுர அமைப்புடையது சாலை என்றும், சதுர அமைப்புடையது கூடமென்றும் அழைக்கப்படும். சில கோயில்களில் கருவறையின் மேல்நிலைகளில், ஒன்றின் மேல் ஒன்றாக இரண்டு கருவறைகள் அல்லது மூன்று கருவறைகள் அமைக்கப்படுவதுண்டு. உத்திரமேரூர் சுந்தரவரதர் கோயில், காஞ்சியிலுள்ள வைகுந்த நாதர் கோயில், மாமல்லபுரத்திலுள்ள தர்மராஜ ரதம் முதலியவற்றில் மூன்று கருவறைகளைக் காணலாம்.

கருவறையின்மேல் எழுப்பப்படும் கட்டடப்பகுதி 'விமானம்' என்றும் 'ஸ்ரீகோயில்' என்றும் அழைக்கப்படும். கோயிலின் நுழைவாயிலை அலங்கரிக்கும் கட்டடப்பகுதி கோபுரம் என்றழைக்கப்படும். இது பல நிலைகளை உடையதாய் இருக்கும்.[5] பொதுவாக கருவறையின் மேலுள்ள கட்டடப்பகுதியை மக்கள் கோபுரம்

என்றே அழைக்கின்றனர். அவ்வாறு அழைப்பது தவறு. கருவறையின் மேலுள்ள பகுதி விமானமென்றே அழைக்கப்பட வேண்டும்.

மண்டபங்களை எடுப்பிக்க அடி, கால், கூரை என்ற மூன்று அங்கங்கள் தேவைப்படும். மண்டபங்கள் கருவறையின் முன் இணைக்கப்பட்டிருந்தால் முன் மண்டபம் என்றும் கோயிலைச் சுற்றி எடுக்கப்பட்டிருக்கும் சுவருக்கு திருச்சுற்று மதில் என்றும், அதையொட்டி மாளிகை எடுக்கப்பட்டிருந்தால் திருச்சுற்று மாளிகை என்றும் வழங்கப்படும்.

கோயில்களில் தொன்மையானவை பல்லவர்களுடைய காலத்திலிருந்துதான் காணப்படுகிறது. பல்லவர்காலக் கோயில்களை குடைவரைக் கோயில்களென்றும், ஒற்றைக் கற்கோயில்களென்றும், கட்டடக் கோயில்களென்றும் மூன்று வகையாகப் பிரிக்கலாம். இவைகளைக் குடைவித்த கோயில்களென்றும், செதுக்குவித்த கோயில்களென்றும், கட்டுவித்த கோயில்களென்றும் கூறலாம்.[6]

பல்லவர் காலக் கோயில்களில் மிகவும் தொன்மையானவை முதலாம் மகேந்திரவர்மன் காலத்தைச் சார்ந்தவை. இவன் காலத்தில் மண்டகப்பட்டு என்ற ஊரில், திருமால், நான்முகன், சிவன் ஆகிய மூவருக்கும் குடைவரைக் கோயில் ஒன்று எடுக்கப் பெற்றது. அக்கோயிலை மரமின்றி, சுதையின்றி, உலோகமின்றி, செங்கலின்றி, தான் தோற்றுவித்ததாக அங்குள்ள கல்வெட்டொன்றில் மகேந்திரவர்மன் குறிப்பிடுகிறான்.[7] ஆதலின் இதற்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்ட கோயில்களில் மரம், சுதை, உலோகம் செங்கல் யாவும் பயன்பட்டதை அறிகிறோம். கல் மட்டும் கொண்டு அமைக்கப்படவில்லை என்றும் அறிகிறோம்.

மகேந்திரவர்மன் காலத்தில் குடைவரைக் கோயில்கள் நீண்ட சதுரமான மண்டபம் போல அமைக்கப்பட்டன. கல்வெட்டுகள் இவற்றை 'மண்டபக் கோயில்கள்' எனக் குறிப்பிடுகின்றன. பெரும்பாலான குடைவரைக் கோயில்களில் வாயில் காப்போர் சிற்பங்கள் மட்டும் உள்ளன. திருச்சியிலுள்ள மகேந்திரவர்மனின் குடைவரைக் கோயிலில் கங்காதரரின் அழகிய சிற்பம் உள்ளது. இவனுடைய குடைவரைக் கோயில்கள், திருச்சி, சிங்கவரம், பல்லாவரம், மாமண்டூர், மண்டகப்பட்டு, வல்லம் முதலிய ஊர்களிலுள்ளன.[8]

இராஜசிம்மன் என்றழைக்கப்படும் இரண்டாம் நரசிம்மவர்மன் மாமல்லபுரத்தில் குகைக் கோயில்களையும், ஒற்றைக் கற்கோயில்களையும், சில கட்டடக் கோயில்களையும் எடுப்பித்துள்ளான். இங்குள்ள குகைக் கோயில்களில் ஆதிவராகக்குகை மகிஷமர்த்தனி குகை, வராகக்குகை, மும்மூர்த்திக்குகை ஆகிய நான்கும் குறிப்பிடத் தக்கவை. இக்கோயில்களிலுள்ள சிற்பங்கள் உலகப்புகழ் பெற்றவை. மாமல்லபுரத்திற்கு அருகில் சாளுவன்குப்பத்தில் இரண்டு குகைக் கோயில்களுள்ளன. அவற்றில் ஒரு குகையின் முகப்பைச் சுற்றிலும் யாளியின் முகங்கள் செதுக்கப்பட்டுள்ளன. யாளியின் முகங்கள் காண்பதற்கு புலி முகங்கள் போல தோன்றுவதால் புலிக்குகை என்று இக்குகை அழைக்கப்படுகிறது. இக் குகைகோயிலின் அமைப்பு வியக்கும் வண்ணம் உள்ளது.[9]

பல்லவ மன்னர்கள் மலைகளைக் குடைவித்து குடைவரைக் கோயில்கள் எடுத்ததோடன்றி, குன்றுகளைச் செதுக்கியும், கோயில்கள் எடுத்துள்ளனர். ஒரு குன்றைச் செதுக்கி எடுக்கப் படும் கோயில் ஒற்றைக் கற்கோயில் எனப்படும். இவ்வகையைச் சார்ந்த கோயில்கள் மாமல்லபுரத்திலுள்ளன. மாமல்லபுரத்தில் பஞ்சபாண்டவ ரதங்கள் என்றழைக்கப்படும் ஐம்பெறும் தளி களும் இவ்வகையைச் சார்ந்தவையே. இவற்றில் சிவனுக்குரிய தர்மராஜரதம் மூன்று நிலைகளையும், எண்பட்டை சிகரத்தையும் கொண்டது. அடுத்து நீண்ட சாலைவடிவிலுள்ள கோயில் பீமரதம் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயில் திருமாலுக் குரியதாய் இருக்கலாம். இரண்டு நிலைகளையும், எண்பட்டை சிகரத்தையும் கொண்ட அர்ஜுன ரதம் சிவபெருமானுக்குரியது. இதற்கடுத்தாற்போல் குடிசை வடிவிலுள்ள கோயில் கொற்றவைக் காக எடுப்பிக்கப் பெற்றது. இந்நான்கு கோயில்களும் ஒரே குன்றிலிருந்து செதுக்கப்பட்டவை. இவற்றின் எதிரேயுள்ள கோயிலைச் சகாதேவ ரதம் என்பர். இதனமைப்பு யானையின் பின்புற (கஜபிருஷ்டம்) அமைப்பைப் போன்றுள்ளமையால் 'தூங்கானை' மாடமென்பர்.

கட்டடக் கோயில்களை எடுக்கும் பொழுது அடிப்பகுதி யிலிருந்து கற்களை ஒவ்வொன்றாக அடுக்கி மேலே எடுத்துச் செல்ல வேண்டும். ஆனால் ஒற்றைக் கற்கோயிலை எடுக்கும்

பொழுது குன்றின் மேலிருந்து படிப்படியாக கீழே செதுக்கி வர வேண்டும்.

பல்லவர்கால கட்டடக் கோயில்களில் மிகவும் பழமையானது கூரம் என்ற ஊரிலுள்ள கோயிலாகும். இது தூங்கானை மாட வடிவிலுள்ளது, இக்கோயிலை முதலாம் பரமேஸ்வரன் காலத்தில் (670-700) வித்யாவிநீதன் என்பவன் தோற்றுவித்தான். இதன் அடிப்பகுதி மட்டும் தற்பொழுது எஞ்சியுள்ளது.[10]

இராஜசிம்மன் காலத்தில்தான் சிறந்த கட்டடக் கோயில்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவன் எடுப்பித்த மாமல்லபுரத்து கடற்கரைக் கோயில், உயர்ந்த விமானத்தையும், பல நிலைகளையும் கொண்டு விளங்குகிறது. இக்கோயிலைச் சுற்றி திருச்சுற்றும் ஒரு பெருமண்டபமும் உள்ளன. பல்லவர்களுடைய கட்டடக் கோயில்களிலேயே மிகவும் சிறப்பும் அழகும் வாய்ந்தது காஞ்சி கைலாசநாதர் ஆலயமாகும். பல்லவர் காலத்தில் கட்டப் பெற்ற மிகவும் பெரிய கோயில் இதுதான். இதனால் இது 'பெரிய திருக்கற்றளி' என்றழைக்கப்பட்டது. இக்கோயிலின் விமானம் உயர்ந்ததாகவும், திருச்சுற்று சிறுசிறு ஆலயங்களைக் கொண்டும் விளங்குகிறது. பரிவார ஆலயங்களையும் பிற தெய்வங்களின் ஆலயங்களையும் முழுமையாகக் கொண்டு விளங்கும் பெருங்கோயில் இதுதான். இக்கோயிலின் நுழைவாயிலின் மேல் நிலை 'சாலை' வடிவிலுள்ளது. பெருங்கோபுரம் இங்கு இல்லை. திருச்சிக்கு அருகிலுள்ள திருப்பட்டூர் என்னும் ஊரில் காஞ்சியிலுள்ள கைலாசநாதர் ஆலயத்தைப் போன்று ஒரு ஆலயம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. கைலாசநாதர் ஆலயம் என்றழைக்கப் படும் இவ்வாலயமும் இராஜசிம்மன் காலத்ததாகக் கருதப்படுகிறது.

கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் நந்திவர்ம பல்லவ மன்னன் எடுப்பித்ததாகக் கருதப்படும் காஞ்சியிலுள்ள வைகுந்த பெருமாள் ஆலயம், ஒன்றின் மேல் ஒன்றாக மூன்று கருவறைகளைக் கொண்ட பெரிய விமானத்துடன் விளங்குகிறது. இவ்வாலயத்தின் திருச்சுற்றில் இவன் காலம் வரையிலான பல்லவர்களுடைய வரலாறு சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

திருவதிகை வீரட்டானீஸ்வரம் என்னும் கோயில் பல்லவ மன்னன் பரமேஸ்வரனால் தோற்றுவிக்கப்பட்டது. இது நிருபதுங்கன் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டது. இக் கோயிலின் அடிப்பகுதி மட்டும் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. மேல் பகுதி முழுவதும் செங்கல்லாலானது. சுவற்றைச் சுதை உருவங்கள் அலங்கரிக்கின்றன. இக்கோயிலின் அமைப்பில் ஒரு சிறப்பைக் காண்கிறோம். இக்கோயில் அமைப்பைப் பின்பற்றி தான் தஞ்சை பெருவுடையார் கோயில் கட்டப்பட்டதென்று கூறுமளவிற்கு இதனமைப்புள்ளது.[11] இக்கோயில் சுமார் 80 அடியிலிருந்து 100 அடி உயரமிருக்கும். பல்லவர்கால கோயில்களில் மிகவும் உயரமானது இக்கோயில்தான். உயர்ந்த கோபுரத்தை பல்லவர்கால கோயில்களில் காண முடியாது. பல்லவர் கால கோயில்களில் விமானம்தான் உயர்ந்து காணப்படும்.

பல்லவர்கால கோயில்கள், கருங்கற்களாலும் செங்கற்களாலும் கட்டப்பெற்றவை. கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முன் செங்கற்களால் கட்டப் பெற்ற கோயில்களைக் காண முடியவில்லை. கருங்கற் கோயில்களில் இன்று நிலைத்திருப்பது கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கூரம் கோயிலாகும். பல்லவரின் சிற்றரசரான முத்தரையரும், பல்லவர் கலைப் பாணியைப் பின்பற்றிப் பல திருக்கோயில்களை எடுத்துள்ளனர்.

பல்லவர்களுடைய சமகாலத்தவர்களான பாண்டியர்கள், தமிழகத்தின் தென்பகுதியை ஆண்டபொழுது, மலைகளைக் குடைவித்து மண்டபக் கோயில்களை எடுப்பித்துள்ளனர். இன்னும் சிறப்பாக கூறுவோமானால் பல்லவர்களைக் காட்டிலும் பாண்டியர்கள் குடைவரைக் கோயில்களை அதிகமாகவே எடுத்துள்ளனர். இவர்களுடைய கோயில்கள் மலையடிப்பட்டி, குடுமியான்மலை, திருமெய்யம், திருப்பரங்குன்றம், மலையடிக் குறிச்சி, ஆனைமலை, கழுகுமலை முதலிய இடங்களிலுள்ளன. பல்லவர்கள் மாமல்லபுரத்தில் அழகே உருவான ஒற்றைக் கற்கோயில்களைச் செதுக்கி அமைத்தனர். அதே போன்று பாண்டியர்கள் கழுகுமலையில் ஒரே ஒரு ஒற்றைக் கற்கோயில் எடுத்துள்ளனர். இக்கோயில் வெட்டுவான்கோயில் என்றழைக்கப் படுகிறது. இக்கோயில் முற்றுப்பெறாமல் உள்ளது. பல்லவர்கள்

ஒரு சிறு குன்றைச் செதுக்கி அதையே கோயிலாக எடுப்பித்தனர். ஆனால் பாண்டியர்கள் ஒரு மலையின் ஒரு பகுதியை மட்டும் செதுக்கி, அப்பகுதியைத் தனித்தாக்கி, அதில் கோயிலைத் தோற்றுவித்தனர். அவ்வாறு எழுந்ததுதான் கழுகுமலை வெட்டுவான் கோயில். இக்கோயிலில் கண்கவர் சிற்பங்கள் உள்ளன. எல்லோராவிலுள்ள கைலாசநாதர் ஆலயம் இதுபோன்று செதுக்கப்பட்டதுதான். இக்கோயிலின் அழகும், அமைப்பும், இதனைத் தென்னக எல்லோரா என அழைக்கும் அளவிற்கு அமைந்துள்ளது. பாண்டியர் கால கட்டடக் கோயில் என்று கூறுமளவிற்கு நம்மிடையே இன்று எக்கோயிலும் இல்லை.[12] பல்லவ பாண்டியர்களின் சமகாலத்தவர்களான அதியர்கள் காலத்தில் சோமன் என்னும் அதியேந்திரன் நாமக்கல்லில் நரசிம்ம பெருமானுக்கும், பள்ளிகொண்ட பெருமானுக்கும் இரு குகைக் கோயில்களை எடுத்துள்ளான். இரண்டு கோயில்களிலும் அழகிய சிற்பங்களுள்ளன.

சோழர்களுடைய ஆட்சிக் காலத்தைத் தமிழகக் கோயில் வரலாற்றில் ஒரு பொற்காலம் எனலாம். விஜயாலயன் ஆட்சி முதல் முதலாம் இராஜராஜன் ஆட்சிவரை கோயிற் கட்டடக் கலை வரலாறு குறிப்பிடத் தக்கதாகவுள்ளது. பல்லவர்கால இறுதியில் கோயில்கள் எந்த அமைப்பில் அமைக்கப்பட்டதோ அதே அமைப்பில் சோழர் காலத்திலும் பெரும்பாலான கோயில்கள் அமைக்கப்பட்டன. செங்கல்லால் அமைக்கப்பட்ட பல கோயில்கள் சோழர் காலத்தில் கற்றளிகளாக்கப்பட்டன. இக்காலக் கோயில்கள் அதிக உயரமின்றி 30 அடி உயரத்திற்குள்ளாகவே கட்டப் பெற்றன. கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் ஆலயம் ஒன்றுதான் கற்கோயில்களிலேயே பெரியதாக விளங்கியது.

கி. பி. 9, 10-ஆம் நூற்றாண்டளவில் கட்டப்பட்ட சோழர் கால கோயில்கள் அதிக உயரமில்லாவிட்டாலும், அவை யாவும், கலை அழகு மிகுந்தவை. இவற்றின் அடிப்பகுதியில், இராமாயண, சிவபுராண சிற்பங்கள் அழகுற செதுக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற சிற்பங்களைக் குடந்தைக் கீழ்கோட்டம், திருப்புறம்பியம் சிவன் கோயில், சடையார் கோயில், புஞ்சை முதலிய கோயில்களில் காணலாம்.

இக்காலக் கோயில்களின் விமானச் சுவர்களில் கோட்டங்கள் அமைக்கப்பட்டு சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. கோயில்களின் நுழைவாயில்களில் வாயில் காப்போர் சிற்பங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. அகத்தியரின் சிற்பம் ஏதாவதொரு கோட்டத்தில் இடம்பெறுவதைக் காணலாம். சில கோயில்களில் அரசன் தேவியர்களின் சிற்பங்கள் இடம்பெறும். எடுத்துக்காட்டாக குடந்தைக் கீழ்க் கோட்டம், சீனிவாசநல்லூர், திருவாரூர் முதலான கோயில்களைச் சுட்டலாம். தேவகோட்டங்களின் மேலே மகர தோரணங்கள் இடம்பெறுகின்றன. அழகே உருவான மகர தோரணங்களின் நடுவில் சிவனின் பல்வேறு உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இக்காலத்திய சிகரங்கள் சதுரம், எண் பட்டை, வட்டம் ஆகிய வடிவங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

தமிழகக் கோயிற் கலை வரலாற்றில் நார்த்தமலை குன்றின் மேல் அமைந்துள்ள விசயாலயச் சோழீச்சுவரம், அமைப்பில் தனித்தன்மை வாய்ந்தது. இரண்டு சுவர்களைக் கொண்டு விளங்கும் இக்கோயிலின் வெளிச்சுவர் சதுரமாகவும், உட்சுவர் வட்டமாகவும் அமைந்துள்ளது. விமானத்தின் மேல்தளங்கள் சதுரமும் வட்டமுமாக அமைந்துள்ளன.

இராஜராஜன் காலம் வரையில் கோயில்கள் மிகவும் சிறிய அளவிலேயே கட்டப்பட்டன. கூரைக்கு மேல் செங்கற்களால் கட்டப்பட்ட விமானங்கள் 30 அடி உயரத்தையே கொண்டிருந்தன. மேல் தளங்கள் செங்கற்களால் கட்டப்பட்ட கோயில்களும் 40 அடி உயரத்தை விஞ்சியதில்லை. இராஜராஜன் தஞ்சையில் எடுப்பித்த பெருவுடையார் கோயில் ஒரு உன்னத கலைப்படைப் பாகும். தமிழகக் கட்டடக் கலையின் மாண்பையும், இராஜராஜனின் கலை ஆர்வத்தையும் சிற்பச் சிறப்பையும் ஓவியக் கலையின் உயர்ச்சியையும் இக்கோயில் உலகிற்கு பறைசாற்றிக் கொண்டி ருக்கிறது. இதனைப் போன்றதோர் கலைநயம் வாய்ந்த மாபெரும் கோயில் அந்நாளில் இந்தியாவில் கட்டப்படவில்லை. இக்கோயிலின் விமானம் உட்சுவர், புறச்சுவர் என இரு சுவர்களின் மேல் வியக்கத்தக்க அளவிற்கு கட்டிமுடிக்கப் பெற்றுள்ளது. விமானத்தின் உயரத்திற்கும் அமைப்பிற்கும் ஏற்றாற்போல் பரந்த திருச்சுற்றும் திருச்சுற்றுமாளிகையும் அமைக்கப்பட்டுள்ளன.

இராஜராஜனின் மகனான முதலாம் இராஜேந்திரன் கங்கை கொண்ட சோழபுரத்தில் தஞ்சைப் பெருங்கோயிலைப் போன்ற தோர் கோயிலை எடுப்பித்துள்ளான். இது தஞ்சைக் கோயிலைக் காட்டிலும் உயரத்தில் சற்று தாழ்திருந்தபோதிலும் கட்டடக் கலை நுணுக்கத்தில் சிறப்பு வாய்ந்தது. இக்கோயில் பல்வேறு அங்கங்களை இணைத்து புதுமை மிக்கதாய் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் கட்டட நுணுக்கத்தைப் போல சிற்பங்களும் மிகச் சிறப்பாக விளங்குகின்றன. இக்கோயிலின் விமானம் தஞ்சை விமானத்தைக் காட்டிலும் சற்று மாறுபட்ட அமைப்பில் எடுக்கப் பெற்றுள்ளது. விமானத்தின் கீழ்நிலை சதுரமாகவும், மேல் நிலைகள் எண்பட்டையாகவும், சிகரம் வட்டமாகவும் அமைக்கப் பட்டு அழகே உருவாக விளங்குகிறது.

முதலாம் இராஜேந்திரனுக்கு பின்னர், முதலாம் குலோத்துங்கன் மேலக்கடம்பூர் என்னுமிடத்தில் குதிரைகள் இழுத்துச் செல்லும் தேர் போன்ற அமைப்புள்ள ஒரு கோயிலை எடுப்பித்துள்ளான். இரண்டாம் இராஜராஜன் தாராசுரத்தில் எடுத் துள்ள கோயில் சோழர் காலப் பெருங் கோயில்களில் ஒன்றாகும். இங்கும் விமானம் ஓங்கி உயர்ந்து காணப்படுகிறது. சோழர் கால கோயில்களில் உயர்ந்ததாகவும் சிறந்ததாகவும் கட்டப் பெற்ற கடைசி கோயில் மூன்றாம் குலோத்துங்கன் திரிபுவனத்தில் எடுப்பித்துள்ள திரிபுவன வீரேச்சுரம் ஆகும். இக்கோயில் தஞ்சைப் பெருங்கோயிலைப் போன்ற அமைப்புடையது.

பல்லவர்கள் சிறந்த சிற்பங்களை உண்டாக்கினர் என்றால் சோழர்கள் சிறந்த கட்டடக்கலையினை உருவாக்கினர் எனலாம். கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் விமானங்கள் உயரம் குறைவாக எடுக்கப் பெற்று கோபுரங்கள் மிக உயரமாக எடுக்கப் பெற்றன. இராஜசிம்மனால் மாமல்லையில் எடுக்கப் பெற்ற கடற்கரை கோயிலும் காஞ்சி கைலாசநாதர் ஆலயத்திலுமுள்ள கோபுரங்கள் மிகப்பழமையானவை. இவ்விரு ஆலயங்களிலும் விமானம் உயர மாகவும், கோபுரங்கள் சிறியதாகவும் எடுக்கப் பெற்றுள்ளன. பல்லவர் கால கோபுரங்கள் என்று குறிப்பிடுவதற்கு இவ்விரண்டு கோபுரங்களைத் தவிர வேறில்லை.

சோழர் காலத் தொடக்கத்தில கோபுரங்கள் விமானங்களை விட சிறியவையாகக் கட்டப்பட்டன. மேலப்பழுவூர், கீழப்பழுவூர் முதலிய ஊர்களில் இக்காலக் கோபுரங்களைக் காணலாம். இராஜராஜன் காலத்தில் உயரமான விமானத்தையும் அதன் முன்னர் வெளியே இரண்டு கோபுரங்களும் கட்டும் வழக்கம் ஏற்பட்டது. வெளியிலுள்ள கோபுரம் உயரமாகவும், உள்ளே உள்ள விமானம் உயரம் குறைவாகவும் கட்டப் பெற்றது. விமானத்தின் முன்னே இரண்டு கோபுரங்கள் எடுக்கும் வழக்கம் சோழர் கால இறுதிவரை தொடர்ந்து வந்தது.

இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலிருந்து கோயிலின் நான்கு புறங்களிலும் கோபுரங்கள் எடுக்கும் மரபு தொடங்கியது. கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டில் தில்லையில் நான்கு புறங்களிலும் கோபுரங்கள் கட்டப் பெற்றன. இக்கோபுரங்கள் ஏழு நிலைகளைக் கொண்டுள்ளமையால் 'திருநிலை ஏழு கோபுரம்' எனப் பெயர் பெற்றது.

சோழர்களுக்குப் பின்னர் விஜயநகர மன்னர்கள் கோயில்களில் உயர்ந்த கோபுரங்களை எழுப்பினர். இவர்களுடைய காலத்தை கோபுரக் காலம் என்றே கூறலாம். கோயில்களின் திருச்சுற்றுகளை அலங்கரிக்க இவர்கள் வானளாவும் கோபுரங்களை எடுத்தனர். காஞ்சி, தில்லை, திருவண்ணாமலை, திருவரங்கம், மதுரை ஆகிய இடங்களில் உயர்ந்த கோபுரங்களைக் காணலாம். இக்கோபுரங்கள் 150 அடி உயரத்திற்கு மேல் கட்டப்பட்டன. கிருஷ்ண தேவராயர் காலத்தில் கோபுரங்களைக் கட்டும் பணி உன்னத நிலையை அடைந்திருந்தது.

விஜயநகர மன்னர்களின் காலத்தில் கோயிலின் உட்கூரைப் பகுதிகள் மலர்ந்த தாமரை மலர் போல் செதுக்கப்பெற்று, தாமரை இதழ்களை கிளிகள் அலகினால் கொத்துவதுபோல் அலங்கரிக்கப்பட்டன. இவர்களுடைய காலத்தில் கோயில்களில் முன் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், கல்யாண மண்டபங்கள் முதலியன கட்டப் பெற்றன. காஞ்சியிலும், வேலூரிலும் தோற்றுவிக்கப்பட்ட மண்டபங்கள் மிக நுண்ணிய கலை நுணுக்கத்துடன் கூடிய தூண்களைக் கொண்டவை. சுருங்கக் கூறின் விஜயநகர

மன்னர்கள் கோபுரங்களையும் மண்டபங்களையும் எடுத்து தமிழகக் கோயிற் கட்டடக் கலைக்கு பெருந்தொண்டு புரிந்துள்ளன ரெனலாம்.

விஜயநகர மன்னர்களுக்குப் பின்னர் நாயக்கர்கள் கோபுரங் களையும் மண்டபங்களையும் கட்டினார்கள். திருமலை நாயக்கர் மதுரையில் பெரிய கோபுரங்களை எழுப்பி, வண்ண சுதை உருவங்களால் அவற்றை அலங்கரித்தார். மதுரை மீனாட்சி யம்மன் ஆலயத்திலுள்ள வசந்த மண்டபம் நாயக்கர் கால கட்டடக்கலையின் சிறப்பினை வெளிப்படுத்துகிறது. திருவட்டாறு மண்டபத்தில் பாவையர்கள் அகல் விளக்குகள் ஏந்தி நிற்கும் சிற்பங்கள் மண்டபத் தூண்களுடன் செதுக்கப்பட்டுள்ளன. இம் மண்டபம் நாயக்கர் கால அற்புதப் படைப்பாகும்.[13] நாயக்கர்கள் உயர்ந்த கோபுரங்களை கட்டுவதிலும் மண்டபங்கள் அமைப் பதிலும் ஈடுபட்டனர்.

தமிழகக் கோயில்களின் கட்டடக் கலைச் சிறப்பும் சிற்பக் கலை வளனும், ஜாவா, பாலி, போர்னியோ, பர்மா, மலேயா, இந்தோனேஷியா, சயாம், கம்போடியா முதலிய தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பரவி விளக்கமுற்றன. ஜாவாவிலுள்ள போரா புதூர் புத்தர் கோயிலும் (கி.பி. 750-850) கம்போடியா அங்கோர் தோம் சிவன் கோயிலும் (கி.பி. 802-820) அங்கோர்வாட் பெருமாள் கோயிலும் (கி.பி. 1110-1150) தமிழகக் கோயிற் கட்டடக்கலை, சிற்பக்கலைகளினுடைய வளர்ச்சியின் சிறப்பையும், வளத்தினையும், விளக்குவனவாக உள்ளன.

தமிழகத்தின் பழம்பெரும் நாகரிகக் கூறுகளையும், பண்பாட்டு நலங்களையும், கலை, மொழி, சமய உயர்வுகளையும் வெளிப் படுத்தும் வகையில் நம் நாட்டு கோயிற் கட்டடக்கலை அமைந் துள்ளமை பாராட்டிற்குரியதாகும்.

அடிக்குறிப்புகள்

1. பொது தனித் திருத்தாண்டகம், திருத்தொண்டர் புராணம், திருநின்ற சருக்கம் (மூன்றாம் பகுதி – முதற்பாகம்), பக்கம்: 655, 1266—1694, சிவக் கவிமணி – திரு. C.K. சுப்பிரமணிய முதலியார், B.A.; இரண்டாம் பதிப்பு, கோவைத் தமிழ்ச் சங்கம், கோயம்புத்தூர், 26-4-1965.

2. தமிழகக் கோயிற் கலைகள், இரா. நாகசாமி - மா. சந்திர மூர்த்தி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1976.

3. சிலப்பதிகாரம், மனையறம் படுத்த காதை - வரிகள் 12–13, டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1978.

4. ஆறாம் திருமுறை, திருஅடைவுத்தாண்டகம், பதிக எண் 765, பக்கம்-521 தருமையாதீனப் பதிப்பு–1963.

5. *The Art of Tamilnadu* by R. Nagaswamy, State Dept. of Archaeology, Govt. of Tamilnadu, 1972.

6. தமிழகக் கோயிற்கலைகள், இரா. நாகசாமி - மா. சந்திர மூர்த்தி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1976.

7. *Epigraphia Indica*, XVII pp. 14-17. See also South Indian Inscriptions, XII, No-12 and A.R.E. No. 56 of 1965.

8. Cave Temples of the Pallavas, K.R. Srinivasan, ASI, 1964.

9. மாமல்லை, இரா. நாகசாமி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1976.

10. தமிழகம், இரா. நாகசாமி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1970.

11. தமிழகக் கோயிற்கலைகள், இரா. நாகசாமி - மா. சந்திர மூர்த்தி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1976.

12. மேலது.

13. The Art of Tamilnadu, R. Nagaswamy, State Department of Archaeology, Govt. of Tamilnadu, 1972.

10

தமிழக கட்டடக் கலை மரபில் இசுலாமியப் பள்ளிவாசல்

இசுலாமிய கட்டடக் கலையின் தாக்கம் தமிழகத்தில் கி.பி. பதினாறாம் நூற்றாண்டளவில் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக நாயக்க மன்னர்களால் தமிழகத்தில் எடுக்கப்பெற்ற மாடங்களிலும் மண்டபங்களிலும், அவற்றிலுள்ள தூண்களிலும், அரண்மனைகளிலும் இத்தாக்கத்தினைக் காணலாம்.

இசுலாமிய கட்டடக் கலையில் வில்போல் வளைந்த அமைப்பினைக் கொண்ட (Arch) முகப்புத் தோற்றமுடைய நுழைவாயிலையும், குவிந்த குமிழ் வடிவமுள்ள கூரையையும் (Dome) வண்டிக்கூறை (Valuted roof) போன்ற கட்டட அமைப்புகளையும் காணலாம். கட்டடங்கள் கற்பனையில் உதித்த இலை, மலர், கொடி, காய்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இவையே வண்ண ஓவியங்களாகவும் தீட்டப்படும். சில நேரங்களில் அரேபிய எழுத்துக்கள் அலங்கரிப்பிற்கு பயன்படுத்தப்படும். எந்நிலையிலும் உருவங்கள் இடம்பெறா.

இசுலாமிய கட்டடக் கலையின் சில அமைப்புகளைத் தேவைக்கேற்றாற்போல் தமிழகத்தில் தாங்கள் எடுப்பித்துள்ள கட்டடங்களில் நாயக்க மன்னர்கள் பயன்படுத்தியுள்ளனர். கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தஞ்சையில் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்ட அரண்மனை, காவல் மாடம், திருச்சிராப்பள்ளியில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ராணி மங்கம்மாள் தோற்றுவித்த அவை கூடும் மண்டபம், அதனையொட்டி எடுக்கப்பெற்றுள்ள கட்டடம் ஆகியவை ஒரு சிறிய பள்ளிவாசலின் தோற்றத்தில் உள்ளன. நாயக்க மன்னர்களின் காலத்தில் தஞ்சை

பெரிய கோயில் நந்தி மண்டபத் தூண்களில் வில்போல் வளைந்த அமைப்பிற்குள் (Arch) செதுக்கப்பட்டுள்ள புடைப்புச் சிற்பங்களிலும், மதுரையில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் திருமலை நாயக்க மன்னரால் தோற்றுவிக்கப்பட்ட திருமலை நாயக்கர் அரண்மனையிலும் இசுலாமிய கட்டடக் கலையின் தாக்கத்தினைக் காணலாம்.

தமிழகத்தில் நாயக்க மன்னர்களுடைய ஆட்சி நடந்து கொண்டிருக்கும்பொழுது வடநாட்டில் முகலாய மன்னர்களுடைய ஆட்சி நடைபெற்று வந்தது. இவ்விரு மரபு மன்னர்களும் சமகாலத்தவர்கள். நாயக்க மன்னர்கள் இசுலாமியக் கட்டடக் கலையில் ஒரு அங்கமாக விளங்கும் முகலாய கட்டடக் கலையினை தாங்கள் எடுக்கும் அரண்மனையிலும், மண்டபங்களிலும் புகுத்த முயன்றனர்.

திருமலை நாயக்கர் (கி.பி. 1627-59) தான் எடுப்பித்துள்ள அரண்மனையில் வில்போல் வளைந்த முகப்பினையுடைய கட்டடப் பகுதிகளையும், குவிந்த குமிழ் வடிவமுள்ள கூரைகளையும் வண்டிக்கூரை போன்ற அமைப்புடைய கூரைகளையும், அமைத்துள்ளனர். உட்கூரைகளின் மேல் இலை, மலர், கொடி அமைப்புகளுடைய வண்ண ஓவியங்களையும் தீட்டியுள்ளனர். அதற்கும் மேலாக முகலாய மன்னர்கள் எடுப்பித்த கட்டடங்கள் போன்ற கட்டடங்களைக் கட்டியும், கட்டடங்களுக்கு முகலாய மன்னர்கள் அளித்த பெயர்களையும் மாற்றம் செய்யாமல் சூட்டியும் உள்ளனர். எடுத்துக்காட்டாக, திருமலை நாயக்கர் அரண்மனையின் பிரதான நுழைவாயில், முன்பு இவ்வரண்மனையின் வடக்குத் திசையில்தான் அமைந்திருந்தது (தற்பொழுது கிழக்கு திசையிலுள்ளது). அங்கு இரு மண்டபங்கள் இருந்தன. ஒரு மண்டபத்தில் பதினெட்டு வகையான இசைக் கருவிகள் வைக்கப்பெற்றிருந்தன. இம்மண்டபம் அரச குடும்பத்தினர் நடமாடும் பகுதிக்குட்பட்டிருந்தது. திருமலை நாயக்கர் அரண்மனைக்கு வருகை தரும் முக்கிய விருந்தினர்களை வரவேற்கும்பொழுது இங்குள்ள பதினெட்டு வகையான இசைக் கருவிகளும் இசைக்கப்படும். இம்மண்டபத்திற்கு 'நவ்பத்கானா என்று பெயர். இம்மண்டபம் தற்பொழுது அழிந்து விட்டது. இம்மண்டபம் இருந்த இடத்தில் இப்பொழுது ஓர் ஆரம்பப்பள்ளி உள்ளது. அப்பள்ளியிருக்கும் தெருவிற்கு 'நவ்பத்கானாம் தெரு'

என்று பெயர். ஆக்ராவிற்கு மேற்கே 26 கல் தொலைவில் முகலாய மன்னர் அக்பர் (கி.பி. 1556 - 1605) பதேபூர்சிக்ரி என்னும் புதிய தலைநகரத்தில் நவ்பத்கானா என்னும் வட்ட வடிவ சுவர் கொண்ட குவிந்த கூரையையுடைய மண்டபத்தை ஏற்படுத்தியுள்ளார்.[1] இத்தலைநகருக்கு வருகை தரும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் இம்மண்டபப்பகுதியை அடைந்ததும் அவர்களைப் பற்றி அறிவிப்பும் அவர்களுக்குரிய வரவேற்பும் அளிக்கப்படும். வடநாட்டில் முகலாய மன்னர் அக்பரது ஆட்சிக்குப் பின்னர் தமிழகத்தில் ஆட்சி செலுத்திய நாயக்க மன்னர் திருமலை, தான் எடுப்பித்த அரண் மனையில் பதேபூர்சிக்ரியில் அக்பர் எடுப்பித்த 'நவ்பத்கானா என்ற கட்டடப்பகுதியைப் போன்று எடுப்பித்துள்ளார். மேற்கூறிய எடுத்துக்காட்டிலிருந்து இசுலாமிய கட்டடக் கலையின் தாக்கம் தமிழகக் கட்டடக் கலையில் ஏற்பட்டுள்ளதை அறியலாம்,

இசுலாமியக் கட்டடக் கலையின் தாக்கம் தமிழகக் கட்டடக் கலையில் ஏற்பட்டுள்ளதுபோன்று, இசுலாமியக் கட்டடக் கலையில் தமிழகக் கட்டடக் கலையின் (திராவிடக் கலையின்) தாக்கம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ளது. இத்தாக்கத்தினை கி.பி. 17-ம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளல் பெருந்தகை சீதக்காதி மரக்காயர் கீழக்கரையில் தோற்றுவித்துள்ள ஜும்ஆப் பள்ளி வாசலில் காணலாம். இப்பள்ளிவாசல், இசுலாமிய கட்டடக் கலையையும், தமிழகக் கட்டடக் கலையையும் இணைத்து எடுக்கப் பட்டதாகும்.

கீழக்கரையில் வள்ளல் பெருந்தகை சீதக்காதி மரக்காயரால் எடுக்கப்பெற்றுள்ள ஜும்ஆப் பள்ளி இசுலாமிய வழிபாட்டிற் கேற்றாற்போல் எடுக்கப்பட்டுள்ளது. இப்பள்ளியில் தமிழகக் கட்டடக் கலையின் தாக்கம் இருப்பினும், அக்கலை மரபில் இடம் பெறும் தெய்வ மற்றும் மனித உருவங்களோ, விலங்கு மற்றும் பறவைகளின் சிற்பங்களோ இன்றி இசுலாமிய வழிபாட்டிற் கேற்றார்போல், பள்ளிவாசலுக்குரிய அங்கங்களான ஹவுள்*, நுழைவாயில், மினார்*, மிம்பர்* மிஹ்ராப்* போன்ற கட்டடப் பகுதிகள் இசுலாமியக் கட்டடக் கலையுடன் எடுக்கப்பெற்றுள்ளன.

---

*ஹவுல் - சிறியகுளம், மினார் - ஓங்கி நிற்கும் தூண் போன்ற மாடம், மிம்பர் - சமயச் சொற்பொழிவு நிகழ்த்தும் மேடை, மிஹ்ராப் - தொழுகையை நடத்தும் இமாம் வழிபடும் இடம்.

இப்பள்ளியில் தமிழகக் கட்டடக் கலையின் தாக்கத்தினை இப்பள்ளியைச் சுற்றியுள்ள திருச்சுற்று மண்டபத்திலுள்ள தூண்களிலும், பள்ளியின் உட்பகுதியிலுள்ள தூண்களிலும் உட்கூரையிலும் பள்ளியின் மேற்குப் பக்கத்திலுள்ள தேவகோட்ட வடிவ மாடக் குழிகளிலும், சுவர்களின் மேற்பக்கங்களிலும், பள்ளியின் வெளிப்புறச் சுவரில் மேற்குப் பக்கத்திலுள்ள தேவகோட்டங்களிலும், கிழக்கில் எண்கோண வடிவில் எடுக்கப்பெற்றுள்ள மண்டபத்திலும் காணலாம்.

இப்பள்ளிவாசல் மூன்று நுழைவாயில்களைக் கொண்டு விளங்குகிறது. அவை வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலுமுள்ளன. வடக்கிலுள்ள நுழைவாயில் பிரதான நுழைவாயிலாகும். இந்நுழைவாயில் வண்டிக்கூரை அமைப்பிலுள்ளது. இவ்வனைத்து நுழைவாயில்களையும் பள்ளியைச் சுற்றியுள்ள திருச்சுற்று மண்டபத்தின் வழியாக அடையலாம்.

இப்பள்ளி சதுர வடிவில் அமைந்துள்ளது. 68 அடி பக்க அளவினைக் கொண்டது. பள்ளியினுள் தொழுகை நடத்தும் இடம் 45 அடி பக்க அளவினைக் கொண்டது. இப்பள்ளி முழுவதும் கருங்கற்களால் எடுக்கப்பெற்றதாகும். இப்பள்ளியின் உட்புறம் 36 தூண்கள் உள்ளன. அத்தூண்கள் நான்காக இணைந்து அமைந்து பள்ளியின் மேற்கூரையைத் தாங்குகின்றன. இத்தூண்கள் கால், கலசம், கும்பம், கமலம், பலகை, போதிகை போன்ற அங்கங்களைக் கொண்டு விளங்குகின்றன.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டளவில் திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் கல்யாண மண்டபத் தூண்களிலும், அதற்குப் பின்னர் இராமேஸ்வரம் கோயிலில் எடுக்கப்பெற்ற தூண்களிலும் பலகைக்கும் போதிகைக்கு மிடையில் சிம்மத்தின் உருவத்தினையும், தூண்களின் கால் பகுதியில் யாளியின் உருவத்தையோ, கொடையாளர் உருவத்தையோ காணலாம். இப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள தூண்களில் எவ்வித உருவத்தையும் காண முடியாது. இசுலாம் உருவ வழிபாட்டிற்கு இடமளிக்காமையே இதற்குக் காரணமாகும். இங்குள்ள தூண்களில் உருவத்திற்கு மாறாக தூண்களின் அடிப்பகுதியில் வில்போல் வளைந்த குவிந்த கூரையின் அமைப்பு பல்வேறு விதமாக செதுக்கப்பட்டுள்ளது. அக்கூரையின்

மேற்பகுதி கற்பனையில் உதித்த மலர்களால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. சில தூண்களில் தொடர்ந்து வரும் மலர் அலங்காரங் களைக் காணலாம்.

இப்பள்ளியின் உட்கூரையில் நடுப்பகுதியில் எண்கோண வடிவில் ஓர் அலங்கார அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவ் வமைப்பிற்குள் மலர்ந்த தாமரை மலர்கள் செதுக்கப்பட்டு அணி செய்யப்பட்டுள்ளன. இது போன்ற அலங்கார அமைப்புகள் கோயிலின் உட்கூரைப் பகுதிகளில் அமைப்பது வழக்கம். ஸ்ரீமுஷ்ணம் பூவராகர் கோயிலின் உட்கூரைப் பகுதியில், சதுர வடிவமுள்ள அமைப்பிற்குள் மலர்ந்த தாமரையின் இதழ்கள் செதுக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன. அவ்விதழ்களை கிளிகள் அலகினால் கொத்துவது போல் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வணி வேலைப்பாடு கி.பி. 16-ஆம் நூற்றாண்டு நாயக்கர் காலத்தைச் சேர்ந்தது. இது போன்ற அணி வேலைப்பாடுகளை திருவட்டாறு ஆதிகேசுவரர் கோயிலிலும், பொள்ளாச்சி சுப்ரமணியர் கோயிலிலும் காணலாம். திருவட்டாறு கோயிலின் உட்கூரையில் நவகிரகங் களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. பொள்ளாச்சி கோயிலில் சதுர வடிவிற்குள் பன்னிரெண்டு இராசிகளின் உருவங்கள் செதுக்கப்பெற்று அணிசெய்யப்பட்டுள்ளன. இவ்வுருவங்கள் கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இப்பள்ளியில் இவ்வித அலங்கரிப்பில் உருவங்களோ, விலங்குகளோ, புள்ளினங் களோ இடம்பெறவில்லை.

இப்பள்ளியின் உட்கூரையிலுள்ள உத்திரங்களின் மேல் கற்பனையில் உதிந்த இலை, கொடி, மலர் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து செல்வது போல் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளியின் உட்புறச் சுவர்களின் மேல்பகுதியில் 'சாலை', 'கர்ண கூடு' ஆகியன செதுக்கப்பட்டு அணி செய்யப் பட்டுள்ளன.

இப்பள்ளியிலுள்ள மிம்பர் நான்கு படிகளைக் கொண்டு விளங்குகிறது. இது மரத்தினால் செய்யப்பட்டுள்ளது. பள்ளியின் மேற்குப் பக்கத்தில் 'மிஹ்ராப்' உள்ளது. அதன் முகப்புத் தோற்றம் நெளிநெளிவான வண்டிக்கூரையின் அமைப்பு

போலுள்ளது. மிஹ்ராபின் இரு பக்கங்களிலும். தேவகோட்ட வடிவ மாடக்குழிகள் உள்ளன. இம்மாடக் குழிகளின் முகப்புத் தோற்றம் வில்போல் வளைந்து குவிந்து காணப்படுகிறது. இவ்வமைப்பு ''சாலை' வகை விமானத்திற்குள் இருப்பது போல் செதுக்கப்பட்டுள்ளது. இம்மாடக் குழிகளில் தமிழகக் கட்டடக் கலையின் தாக்கத்தைக் காண முடிகிறது.

இப்பள்ளியில் எண்பட்டை வடிவமுள்ள ஆறு மினார்கள் உள்ளன. அவை மேல்நோக்கிக் குவிந்த கூரைகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளன.

இப்பள்ளியில் மேற்குப்புற வெளிச்சுவற்றில் இரண்டு தேவ கோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தேவகோட்டங்களை அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. தேவகோட்டத்திலுள்ள தூண்களின் இடைவெளி வெற்றிடமாக உள்ளது. தமிழகக் கோயில்களில் வெளிப்புறச் சுவற்றிலுள்ள தேவகோட்டங்களில் தெய்வங்களின் உருவங்கள் இடம்பெறும். இப்பள்ளியில் தேவ கோட்டம் என்னும் கட்டடக் கலையின் அங்கம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. ஆனால் உருவமில்லை.

இப்பள்ளியின் திருச்சுற்று மண்டபத்தில் 72 தூண்கள் உள்ளன. அத்தூண்களின் அடிப்பகுதியில் நாகபந்தத்திற்கு கீழ் வில் போல் வளைந்த குவிந்த கூரை செதுக்கப்பெற்றுள்ளது. இப்பள்ளியின் கிழக்குத் திசையில் நுழைவாயிலுக்கு முன் எண் கோண வடிவில் ஒரு மண்டபமுள்ளது. அம்மண்டபத்தை உருளை யான வழவழப்புள்ள எட்டுத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. அத்தூண்களுக்கு மேல் எண்பட்டை சிகரமுள்ளது. இம்மண்ட பத்தில் மூன்று கபர்கள் (அடக்கவிடங்கள்) தற்பொழுதுள்ளன. இம்மண்டபத்தில் மூன்று கபர்கள் எடுக்க சாத்தியமில்லை. ஒரு கபர் எடுக்கலாம். இம்மண்டபத்தில் அவ்வாக்கார் மறக்காயர் என்ற அப்துல்காதிர் மரக்காயர் கபர் உள்ளதாக குறிப்பிடப் படுவதுடன் இவர்கள்தான் இப்பள்ளியை கட்டி முடித்தார்களெனக் கூறப்படுகிறது.[2] இம்மண்டத்தில் தற்பொழுது மூன்று கபர்கள் இருப்பதால் எவ்வித முடிவிற்கும் வர இயலவில்லை. இது ஆய்விற் குரியதாகும். கட்டடக் கலையின் அமைப்பினைக் கொண்டு ஜும்ஆப் பள்ளி வாசலுக்குப் பின்னர்தான் இம்மண்டபம் எடுத் திருக்கலாமென எண்ணத் தோன்றுகிறது.

இம்மண்டபத்தின் வடக்கே ஞானகுரு சதக்கத்துல்லா அப்பா அவர்களின் அடக்கவிடமும், தெற்கே வள்ளல் பெருந்தகை சீதக்காதி மரக்காயர் அவர்களின் அடக்கவிடமும் உள்ளன.

இப்பள்ளிவாசலின் தென்புற வெளிச்சுவரில் 30 கட்டங்கள் இட்டு அவற்றில் தமிழ் மாதங்களின் பெயர்களையும், தமிழ் எண்களையும் பொறித்துள்ளனர். மாதங்களின் தொடக்கம் தை யிலிருந்து தொடங்கி மார்கழியில் முடிவடைகிறது. இதில் பொறிக்கப்பட்டுள்ள எண்கள் ஐவேளை தொழுகை நேரங்களை குறிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதா என்று நினைத்தால் எண்கள் குறிப்பிடும் நேரங்கள் ஒத்துவரவில்லை. ஆனால் மேலே உள்ள கட்டங்களில் தை முதல் ஆனி மாதம் வரை பொறிக்கப்பட்டிருப்பதால் அம்மாதங்களை உத்தராயணம் என்று கொள்ளலாம். உத்தராயணத்தில் சூரியன் வடக்கு நோக்கி செல்வதால் இரவு நேரம் அதிகமாக இருக்கும். எனவே, தொழுகைக்கு சூரியன் உதயத்தை குறிக்க இக்கல்வெட்டு வெட்டப்பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. ஆனால் இதைப்பற்றி திட்டவட்டமாக எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. இதை ஒரு காலச்சக்கரம் எனக் கொள்ளலாம். இது மேலும் ஆய்விற்குரியது. கல்வெட்டின் பாடம் கீழே தரப்பட்டுள்ளது.

தையி	மாசி	பங்குனி	சித்திரை	வைகாசி	ஆனி
௩௧	௩	கூ	அ	எ	அ
௩இ	கூஇ	அஇ	எஇ	எஇ	அஇ
௩	கூ	அ	எ	அ	கூ
மார்களி	கார்த்திகை	அற்பிசி	புரட்டாசி	ஆவணி	ஆடி

வள்ளல் பெருந்தகை சீதக்காதி எடுப்பித்துள்ள பள்ளியின் கட்டடக்கலை போன்று பெரிய பட்டினத்தில் பிலால் பள்ளி ஒன்றுள்ளது. அப்பள்ளிவாசல் காலத்தால் முந்தையது. அப்பள்ளி பற்றி குறிப்பு இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டில் காணப்படுகிறது. இப்பள்ளி கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. திருப்புல்லாணி கல்வெட்டில் இப்பள்ளி கீழ்செம்பி நாட்டிலுள்ள பவித்திரமாணிக்க பட்டினத்தில் உள்ளதாக குறிப்பிடப்பெற்றுள்ளது. இப்பள்ளி கல்வெட்டில் சோனகச் சாமந்த பள்ளியான பிழார்ப்பள்ளி' எனக் குறிப்பிடப்படுகிறது.[3] 'பிழார்' என்பது 'பிலால்' என்பதின் மரூஉ ஆகும். இப்பள்ளியின் வழிபாட்டுச் செலவிற்கு நிலம் கொடையாக அளித்தமையை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டின் காலம் கி.பி. 1246 ஆகும்.

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இசுலாமிய கட்டடக் கலையின் தாக்கம் தமிழகக் கட்டடக் கலையில் ஏற்பட்டு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இசுலாமியக் கட்டடக் கலையுடன் தமிழகக் கட்டடக் கலை (திராவிடக் கலை) இணைந்து செயல்பட்டுள்ளது. இதற்கு வள்ளல் பெருந்தகை சீதக்காதி மரக்காயர் அவர்களால் எடுக்கப்பெற்றுள்ள ஜும்ஆப் பள்ளிவாசலே சிறந்த சான்றாக அமைந்துள்ளது.

அடிக்குறிப்புகள்

1. Islamic Architecture - Percy Brown
2. வள்ளல் சீதக்காதி வரலாறு-கலைமாமணி கவி. கா.மு.ஷெரிப்
3. South Indian Inscriptions - Vol. VIII 1937

STATE DEPARTMENT OF ... LIBRARY

தட்டப்படாத கதவு

அரசன் வாழும் அரண்மனையும், இறைவன் உறையும் இடமும் 'கோயில்' என வழங்கப்பட்டது. அரண்மனையிலும், மதிலிலும், கோட்டைவாயிலிலும், கோயிலின் நுழைவாயிலிலும் கதவுகள் பொருத்தப்பட்டன. இக்கதவுகள் 'துணைமான் கதவம்'[1] 'திண் போர்க் கதவு'[2] 'புலிப்பொறிப் போர்க்கதவு'[3] 'பொறியமைபுதவு'[4] 'பொறிநிலையமைந்த போர்ப்பெருங்கதவு'[5] 'ஏழெயிற்கதவம்'[6] என்று இலக்கியங்களில் குறிக்கப்படுகின்றன. இக்கதவுகள் தொழில்நுணுக்கம் பொருந்திய இரட்டைக் கதவுகளாக அரசனுடைய இலச்சினைப் பொறித்தும், புலி இலச்சினைப் பொறித்தும், சிற்பங்கள் செதுக்கப்பெற்றும் விளங்கின. மரங்களில் சிறந்தவையாகக் கருதப்படும் ஆச்சா, கருங்காலி, கணையமரம் போன்ற மரங்களைக் கொண்டு கதவுகள் செய்யப்பெற்றன. இம்மரங்களை 'விழுமரமென' நெடுநெல்வாடை குறிக்கும்.

கால வெள்ளத்தாலும், பகை மன்னர்களின் படையெடுப்பினாலும், போற்றிப் பாதுகாப்போர் இல்லாமையாலும், கதவுகள் பொருத்தப்பட்ட பண்டைய அரண்மனைகளும், கோட்டைகளும், மதில்களும், கோயில்களும், மண்ணில் புதைந்தும், சிதைந்தும் போயின. மண்ணில் புதைந்தவை சில அகழாய்வின் மூலம் வெளிக்கொணரப்பட்டு, வரலாற்றிற்குச் சான்றாக அமைகின்றன. சில அழியாமல், தம் வரலாற்றை எடுத்தியம்புகின்றன. அவைகளில் ஒன்றுதான் சிவாயம் சிவபுரீஸ்வரர் ஆலய கோபுர நுழைவாயிலில் பொருத்தப்பட்டுள்ள கலை நுணுக்கம் மிகுந்த சிற்ப வேலைப்பாடுகளமைந்த கதவு.

கதவுகள்

சிவாயம் எனும் இவ்வூர் திருச்சியிலிருந்து கருவூர் செல்லும் சாலையில் குளித்தலையிலிருந்து ஒன்பது கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. சிவபுரீஸ்வரர் ஆலயக் கோபுர நுழைவாயிலில் வலப்புறமும், இடப்புறமும் 5.80மீ உயரமும், 1.70மீ அகலமுமுள்ள இரண்டு கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு கதவிற்கும் 5.80மீ நீளமும், 12 செ.மீ. அகலமுள்ள மூன்று மரப்பலகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அம்மரப்பலகைகளுக்கு மேல் இரும்புத் தகடு பதிக்கப்பட்டுள்ளது. இவ்விரும்புத் தகட்டின் மேல் செங்குத்தாகவும், குறுக்காகவும், மரச்சட்டங்கள் பொருத்திச் சதுரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இம்மரச் சட்டங்களில் மேல் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன, பலகைகளையும், இரும்புத் தகட்டினையும், மரச் சட்டங்களையும் இணைப்பதற்குக் குவளை மலர் போன்றத் தலைப் பகுதியினையுடைய ஆணிகள் சதுரங்களின் நான்கு பக்கங்களின் மூலைகளிலும், நடுவிலும் பயன் படுத்தப்பட்டுள்ளன. இவ்வமைப்பு, கதவின் அழகிற்கு மெருகூட்டுகிறது. வலப்புறமுள்ள கதவில் 87 செ.மீ. நீளமும், 54 செ.மீ. அகலமுமுள்ள கிட்டி வாசல் எனப்படும் ஒரு சிறு கதவு பொருத்தப் பட்டுள்ளது. கோபுர வாயிலிலுள்ள இரு கதவுகளும் மூடப் படுமேயானால், இச்சிறு கதவின் மூலம் ஆலயத்தினுள் செல்லலாம்.

கதவின் அமைப்பும் அழகும்

இக்கதவின் அமைப்பு ஆணிகளையும், இரும்புப் பட்டைகளையும் கொண்டு செய்யப்பட்ட இரண்டாயுள்ள மரக்கதவு உத்தரத்தில் பொருத்தப்பட்டுக் குவளைமலர் உருக்களும், புதிய பிடிகளும், தாழ்க்கோலும் போடப்பட்டு, சாதிலிங்கம் பூசி, இடைவெளி சிறிதுமில்லாமல், மூடுவதற்கேற்றாற்போல் அமைந்துள்ளது. இது நெடுநெல்வாடை காட்டும் தொழில்வல்லத் தச்சனால் செய்யப் பெற்ற அரண்மனை நெடுநிலையிலுள்ள கதவு போலுள்ளது.[7]

எந்த இறைவனுக்காகக் கோயில் எடுக்கப்படுகிறதோ, அவ்விறைவனுடைய சிற்பம் கோயிலின் கோபுர நுழைவாயிலிலோ. நுழைவாயிலிலுள்ள கதவுகளிலோ செதுக்கப்படுவது வழக்கம். கோயிலில் உறையும் இறைவன் நுழைவாயிலைத் தலைமை தாங்குவதாகவும், இறைவனே நுழைவாயிலில் உறைவதாகவும்

கருதப்படுகிறது.[8] கம்பராமாயணம் அயோத்தி நகர் மதிற்கோபுர வாயிலின் சிறப்பைக் கூறும்பொழுது, மக்கள் அறிவினால் அளந்து அறிய முடியாத தன்மையுடைமையால், கோபுரம் வேதத்தை ஒக்கும், வானுலகிற் புகுதலால் அது தேவரை ஒக்கும், யாவரும் அடைதற்கரிய காவலையுடையன்மையால், கலைமானை வாகனமாகக் கொண்ட துர்க்கையை ஒக்கும். உச்சியில் சூலம் நட்டிருப்பதால், காளியை ஒக்கும். எவரும் தன்னை அடைய முடியாத தன்மையால் கடவுளையும் ஒக்கும் என்று புகழ்ந்து சொல்கிறது.[9]

தெய்வச் சிற்பங்கள்

இறைவனின் உருவத்தைக் கதவில் செதுக்கும்பொழுது, கதவின் மேல் பகுதியின் நடுவில் சிறிய அளவில் செதுக்கப்பட வேண்டும். இதற்கேற்றாற்போல் சிவபுரீஸ்வரர் ஆலய வலது கதவின் மேல்புறம் நடுபகுதியில் இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் திருக்கோலங்களுள் ஒன்றான ஊர்த்துவ தாண்டவம் சிற்பமாகச் செதுக்கப்பெற்றுள்ளது.

இக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் திருக் கோலங்களான பிச்சாடனர், தட்சினாமூர்த்தி, ஊர்த்துவ தாண்டவர், ரிஷபாந்திகர், இராவண அனுக்கிரகமூர்த்தி, காலாரி மூர்த்தி போன்றவையும், கணபதி, ஆறுமுகன், கொற்றவை, காமதேனு, இரதி மன்மதன், மகிடாசுரமர்த்தினி, ஞானசம்பந்தர் ஆகியோரின் உருவங்களும், உன்னதமான கலை நுணுக்கத்துடன் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. மேலும் திருமால், ஹிரண்யகசிபு, வேணுகோபாலன் போன்ற வைணவச் சிற்பங்களும் செதுக்கப் பட்டுள்ளன.

பல்வேறு சமுதாயக் காட்சிகள்

இவையேயன்றி செம்மறியாடுகள் சண்டையிடுதல், விளையாட்டு வீரர்கள் நெற்றியின் மேல் கம்பையும், குறுவாளையும் நிறுத்துதல், தலைகீழாக நிற்கும் ஆடவனின் மடக்கிய கால் மீதேறிப் பெண் ஒருத்தி நடனமாடுதல், பாம்பாட்டி மகுடி வாசித்தல் போன்ற காட்சிகளும் கதவுகளில் இடம் பெற்றுள்ளன. வீணை வாசிக்கும் பெண், கொடிமகளிர், நாட்டியமகளிர், ஆடையணியாத ஆண், பெண்; ஆணும், பெண்ணும் தழுவுதல், பள்ளியறை காட்சிகள்

ஆகியவையும் செதுக்கப்பட்டுள்ளன. விலங்கினங்களும் பறவையினங்களுமாகிய ஆவினங்களும், குதிரைகளும், யானைகளும், குரங்கினங்களும், யாளிகளும், மான்களும், மயில்களும், அன்னங்களும், கிளிகளும் இக்கதவுகளில் செதுக்கப்பட்டுள்ளமை பாராட்டிற்குரியதாகும்.

காவல் தெய்வங்கள்

இறைவனின் காவல் தெய்வங்களான துவாரபாலகர்கள் இறைவனின் வலப்புறமும், இடப்புறமும் செதுக்கப்பட வேண்டும். துவாரபாலகரின் சிற்பங்கள் கதவின் அடிப்பகுதியில் கதவினுடைய உயரத்தின் நான்கின் ஒரு பகுதி உயரத்தில் செதுக்கப்பட வேண்டும்.[10] துவாரபாலகர் வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களையும், உலகத் தூய்மையை மாசுபடுத்தும் செயல்களையும் தடுத்து நிறுத்தும் சக்தி பெற்றவர்கள். என்வே இவர்கள் இறைவனின் பிரதிநிதிகளாக விளங்குவதுடன், அவர்களுக்குரிய இறைவனின் ஆயுதங்களையும், தோற்றக் கூறுகளையும் பெற்று அச்சுறுத்தும் தோற்றத்தினை வெளிப்படுத்துபவர்களாக சித்தரிக்கப்படுகின்றனர். சிவபுரீஸ்வரர் ஆலயக் கதவில் துவாரபாலகர்களின் உருவங்கள் வலப்புற, இடப்புற கதவுகளின் அடிப்பகுதியில் கதவுகளின் உயரத்தில் கால் பகுதி உயரத்தில் செதுக்கப்பட்டுள்ளன.

நதி தெய்வங்கள்

கதவுகளில் நதி தெய்வங்களாகிய பெண் தெய்வங்களின் உருவங்கள் அவர்களுடைய பரிவாரங்களுடன் செதுக்கப்பட வேண்டும். நீரால் தான் இவ்வுலகம் வாழும், வளம் பெறும் என்ற கருத்தினை நிலைநாட்ட இத்தெய்வங்களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்களுக்கு மேல் வாழ்க்கை இளமையானதென்றும், அது விரைவில் அழியக் கூடியத் தன்மை வாய்ந்ததென்றும் உணர்த்தும் சிற்பங்கள் பலவகையில் திரும்பத் திரும்ப செதுக்கப்படும். கதவின் செங்குத்தாக அமைக்கப்பெற்றுள்ள மரச்சட்டங்களில் மனிதப் பிறப்பிற்கு உறுதுணையாக விளங்கும் தம்பதிகளின் உருவங்கள் செதுக்கப்படும். கதவுகளைச் சுற்றிலும் படர்ந்த இலை கொடிகளுடன் மலர்கள் செதுக்கப்படும்.[11] இதுபோன்ற சிற்பங்கள் சிவபுரீஸ்வரர் ஆலயக் கதவுகளில் செதுக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள இடப்புற கதவின் அடிப்பகுதியில் நதி தெய்வமாகிய கங்கையின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. கங்கை தம் இடது காலை மகரத்தின்மீது ஊன்றி வலது காலை மகரத்தின் தலைமீது வைத்து நின்ற நிலையிலுள்ளாள். கங்கையின் வலதுகை வலது தொடைமீது வைக்கப்பட்டுள்ளது. இடது கை ஒரு இலைக் கொடியைப் பற்றி கங்கை அக்கொடியைக் காண்பதுபோல் செதுக்கப்பட்டுள்ளது.

கதவுகளில் செதுக்கியிருக்கும் நதி தெய்வங்கள் பக்தர்கள் செய்யும் பாவங்களை நீக்கி பரிசுத்தப்படுத்துவதாகக் கருதப்படுகிறது. கங்கையைச் செதுக்கியிருக்கும் கதவுகளின் வழியே செல்பவன் கங்கையின் புனித நீராடியமைக்கு ஒப்பாகுமென பிரம்மவைவர்த்த புராணம் பகர்கிறது. முற்கால ஆலயங்களில் கதவின் மேல் பகுதியில் நதி தெய்வங்கள் செதுக்கப்பட்டன.

சிற்பங்களின் கங்கை

சில ஆலயங்களில் கோபுர நுழைவாயில் நிலையின் பக்கங்களில் கங்கையின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இலுப்பூர் பொன்வாசிநாதர் ஆலயத்தின் நுழைவாயில் நிலையின் வலப்புறத்திலும், இடப்புறத்திலும் கங்கையின் சிற்பங்கள் உள்ளன. வலப்புறத்திலுள்ள கங்கை மகரத்தின் மீது நின்று தன் வலக்கையில் ஒரு வாளை தலைகீழாகப் பிடித்துள்ளாள். இடது கையில் மலர் தாங்கியுள்ளாள். அவளது தலைக்கு மேல் கொடிகள் செதுக்கப்பட்டுள்ளன. இடப்புறத்திலுள்ள கங்கை மகரத்தின் மீது நின்ற நிலையிலுள்ளாள். இவள் தலைக்குமேல் இலைகொடிகள் வட்டவட்டமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இலைகொடியில் கிளிகள் செதுக்கப்பட்டுள்ளன.

பிற்காலத்தில் எடுக்கப்பட்டுள்ள கோபுர நுழைவாயில் நிலையின் பக்கங்களில் கங்கையின் சிற்பம் செதுக்கப்படாமல், கங்கையின் வாகனமாகிய மகரம் மட்டுமே செதுக்கப்பட்டுள்ளது. மகரத்தின் வாயிலிருந்து கொடி செல்வதுபோல் செதுக்கப்பட்டுள்ளன. இதனைக் குளித்தலை கடம்பவனேஸ்வரர் ஆலய நுழைவாயில் நிலையில் காணலாம்.

கஜலட்சுமியின் உருவம்

நுழைவாயிலிலுள்ள கதவில் கஜலட்சுமியின் உருவம் செதுக்கப் படுவது வழக்கம். கஜலட்சுமியை ரிக்வேதம் நீர்வளத்திற்கும் சக்திக்கும் உரியவளாகச் சித்தரிக்கிறது.[12] விஷ்ணுபுராணம் இவளை மதுவிற்கும் போதைக்குமுரிய பெண் தெய்வமெனப் போற்றுகிறது. இவள் வருணனுடைய மனைவியாகையால் 'வாருணி' என்றழைக்கப்படுகிறாள். சிவபுரீஸ்வரர் ஆலய இடப் புறக் கதவில் இவள் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. கஜலட்சுமி இரண்டு கால்களையும் மடக்கிப் பத்ரபீடத்தில் அமர்ந்த நிலையி லுள்ளாள். நான்கு கைகளுடன் விளங்குகிறாள். மேலிருகைகள் தாமரை மலரைத் தாங்கியுள்ளன. கஜலட்சுமியின் இருமருங்கிலும் இரண்டு யானைகள் தாமரை மலர்மேல் நீர் சொரிவது போல் செதுக்கப்பட்டுள்ளன.

கஜலட்சுமியின் உருவம் பெரும்பாலான ஆலயங்களில் கோபுர நுழைவாயிலில் இடம்பெற்றுள்ளது. இலுப்பூர் பொன்வாசிநாதர் ஆலய நுழைவாயில் நிலையில் கஜலட்சுமியின் உருவம் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. வளத்திற்கும், சக்திக்கும் உரிய தெய்வ மாதலால் பெரும்பாலான வீடுகளின் நுழைவாயில் நிலையில் கஜலட்சுமியினுடைய உருவம் செதுக்கப்படுவது இன்றும் வழக்கத்தி லிருந்து வருகிறது,

கதவில் கீர்த்தி முகங்கள்

சிவன் கோயிலிலுள்ள நுழைவாயில் நிலையிலோ, கதவிலோ கீர்த்தி முகம் செதுக்கப்படுவது வழக்கம் இக்கீர்த்தி முகம் சிவபெருமானது கோபத்தால் உண்டான கொடியமுகம். இம் முகத்தினுடைய கொடிய பார்வை சமயப் பற்றும் கடவுள் பற்றும் இல்லாதவர்களை விரட்டிச் சிவனுடைய பாதுகாக்கும் திறனை உறுதி செய்யும் பொருட்டும், கோயில் வாயிலைப் பாதுகாக்கும் பொருட்டும் நுழைவாயிலிலோ, கதவிலோ செதுக்கப்படும். இதனை வணங்காது கோயிலினுள் செல்பவருக்கு இறைவனது அருள் கிட்டாதென நம்பப்படுகிறது.[13] சிவபுரீஸ்வர் ஆலய வலப்புற கதவிலுள்ள சிறிய கதவின் மேல் பாகத்தில் கீர்த்திமுகம் இரும்பினால் செய்யப்பட்டுப் பொருத்தப்பட்டுள்ளது. இம்முகம்

சிம்மமுகம் கொண்டு விளங்குகிறது. பொன்வாசிநாதர் மற்றும் கடம்பவனேஸ்வர் கோயிலின் நுழைவாயிலின் நிலைகளின் நடுவே இம்முகம் கொடூரப் பார்வையுடன் செதுக்கப்பட்டுள்ளது.

இறைவனும் அவனுடைய பரிவார தெய்வங்களும் கோயிலின் நுழைவாயில் நிலையில் உறைவதால் இறையடியார்கள் கோயிலினுள் நுழையும்பொழுது நிலைப்படியை மிதிக்காமல் வலதுகாலை முன்வைத்து நுழைவார்களென விஷ்ணுதர்மோத்திரம் கூறகிறது. இன்றும் இவ்வழக்கம் நம்மிடையே நடைமுறையில் இருந்து வருகிறது. வீட்டினுள் நாம் நுழையும்பொழுது நிலைப்படியை மிதிக்காமல் வலது காலை முன்வைத்துச் செல்கிறோம். நிலையில் இறைவன் உறைகிறான் என்ற கருத்தினை மனதில் கொண்டு தான் பெரியவர்கள் வீட்டின் நுழைவாயில் நிலையில் நிற்கவோ, அமரவோ கூடாதெனக் கூறுகின்றனர்.

கம்பராமாயணக் காட்சிகள்

எல்லாவற்றிற்கும் மேலாக இலக்கியநயம் தரும் கம்பராமாயணக் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளமை, இக்கதவின் சிறப்பை மேம்படுத்துகிறது. கம்பராமாயணத்தில் இடம்பெற்றுள்ள இடைச்சியர் தயிர்கடைதல், தசரதன். சீதையை இராமனுக்கு மணமுடிக்க மிதிலைக்குச் செல்லும்பொழுது சந்திரசைலம் என்னுமிடத்தில் தன் சேனையைச் சேர்ந்த யானைகளைச் சோலையில்கட்டுதல், இராமன் மராமரங்களை வீழ்த்துதல், அனுமன் இலக்கையைக் காணுதல், அனுமன் கடலைத் தாண்டுதல், இராவணன் பள்ளியறையில் உறங்குவதை அனுமன் காணல், அனுமன் சீதையிடம் கணையாழியைக் காண்பித்தல், சம்புமாலி அனுமன்மேல் அம்பைவிடல், அனுமன் இராவணன் அவையில் தூதுவன் என்றுரைத்தல் அனுமன் இலங்கையை எரியூட்டல், இரணியன் வதை, இராமன் கடல் கடந்து ஒரு மலையில் தங்குதல், பளிங்குமாடத்தில் இராமன் சீதையுடன் வீற்றிருத்தல், இராமன் முடிசூட்டுவிழா போன்ற காட்சிகள் செதுக்கப்பெற்று நம் நெஞ்சத்தை விட்டகலா வண்ணம் உள்ளன.

சிற்பங்களைப் பார்க்கும்போது கம்பராமாயணப்பாடல் வரிகள் நம் கண்முன் வந்து விளக்கம் தருகிறாற் போல் அமைந்துள்ளன. கம்பராமாயணத்தைப் படித்தபின் அந்த பாடல்களை மனதில்

கொண்டு தான் இவை செதுக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் உருவாக்குகின்றன. அம்மரச் சிற்பங்களைச் செதுக்கிய சிற்பியை மனதில் வாழ்த்தி, ஒரு சில இராமாயணக் காட்சிகளை மட்டும் கூர்ந்து நோக்குவோம்.

தசரதன் இராமனுக்குச் சீதையை மணமுடிக்க மிதிலை செல்லும் வழியில் சந்திரசைலம் என்னுமிடத்தில் தன் சேனைகளைச் சேர்ந்த யானைகளைக் கட்டுவித்த செய்தியினை,

நீர்திரை நிரைத்தென நீள்திரை நிரைத்தார்
ஆர்கலி நிரைத்தென ஆவணம் நிரைத்தார்
கார்நிலை எனக்களிறு காவிடை நிரைத்தார்
மாருதம் நிரைத்தவென வாசிகள் நிறைத்தார்

(பாட்டு - 80, பாலகாண்டம், சந்திரசைலப்படலம்.)

என்று கம்பராமாயணம் விவரிக்கிறது. இதே இயற்கை எழில் மிகு காட்சியினைச் சிற்பமாக இங்கு காண்கிறோம். யானைகளும் யானைப் படைவீரனும் அழகுற மரத்தில் வடிக்கப்பட்டுள்ளனர். யானைகளின் முன்னங்கால்கள் கல்லில் கட்டப்பட்டுள்ளதையும் காண்கிறோம்.

அசோகவனத்தில் சீதையை அனுமன் காட்சி வலப்புறக் கதவில் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் அனுமன் மரத்தின் மீதிருந்து சீதையைக் காண்கிறான். ஐந்து அரக்கியர்களின் நடுவில் சீதை அமர்ந்திருக்கிறாள். அரக்கியர்கள் சீதையை அச்சுறுத்துவது போல் தோன்றுகிறது. இக்காட்சியைக் கம்பர்,

வன்மருங்குல்வாள் அரக்கியர் நெருக்க அங்(கு) இருந்தாள்
கல்மருங்(கு) எழுந்(து) என்றும் ஓர் துளி வரக்காணா
நல்மருந்துபோல், நலன் அற உணங்கிய நங்கை,
மெல்ம ருங்குல்போல் வே(லு) உள அங்கமும் மெலிந்தாள்

(பாட்டு 472, சுந்தரகாண்டம் காட்சிப் படலம்)

எனச் சித்தரிக்கிறார்.

அனுமன் சீதையிடம் கணையாழியைக் காண்பிக்கும் சிற்பம் வலப்புறக் கதவில் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் அனுமன் மரத்திலிருந்து கணையாழியை ஒரு கயிற்றின் மூலம் சீதையிருக்கும்

இடத்தில் தொங்கவிடுகிறான். இச்சிற்பத்தில் கொடூரப் பார்வையுடன் இரண்டு அரக்கியர்கள் சித்தரிக்கப்பட்டுள்ளனர். இச்சிற்பம் கம்பர் கூறுவதற்கு முரணாக உள்ளது. அனுமன் தன் கையால் கணையாழியை காட்டினான் என்று கம்பர் கூறுவார்.

ஆயவன் தன்னை. மாயன்
அந்தியின், அவன் பொன்கோயில்
வாயிலின் மாணிக்கவான் மேல்
வயிரவாள் உகிரின் வாயின்
மீயெழு குறுதி பொங்க
வெயில்விரி வயிர மார்பு
தீ எழப் பிளந்து நீக்கித்
தேவர்தம் இடுக்கண் தீர்த்தான்
(பாட்டு 610 சுந்தரகாண்டம், இரணியன் வதைப்படலம்)

எனக் கம்பர் வருணிக்கும் காட்சி மிக அழகாக வலப்புறக் கதவில் செதுக்கப்பட்டுள்ளது. இக்காட்சியில் திருமால் இரணியனைத் தன் தொடையில் மேல் கிடத்தித் தன் நகத்தினால் அவன் மார்பைப் பிளந்து கொல்கிறான்.

மாணிக்கப் பலகை தைத்து
வயிரத்தின் கால்கள் சேர்த்த
ஆணிப்பொன் சுற்றி முற்றி,
அழகுறச் சமைத்த பீடம்
ஏன் உற்ற பளிங்குமாடத்(து)
இட்டனர், அதனின் மீது
சேன் உற்ற திரள் தோள் வீரன்
திருவோடும் பொலிந்தான் மன்னோ
(பாட்டு 931 யுத்தகாண்டம், திருமுடிசூட்டுப்படலம்)

என அழகுற சித்தரிக்கும் கம்பரது பாடல் வரிகளை நம் கண்முன் நிறுத்தும் சிற்பம் வலப்புறக் கதவில் செதுக்கப்பட்டுள்ளது. இக்காட்சியில் இராமனும் சீதையும் பீடத்தில் அமர்ந்துள்ளனர்.

அந்தணர், வணிகர், வேளாளர்
மரபினோர், ஆலிநாட்டுச்
சந்தணி புயத்து வள்ளல்
சடையனே அணைய சான்றோர்
உய்ந்தனம் அடியும் என்னும்
உவகையாம் உவரி காண
வந்தன) இராமன் கோயில்
மங்கலத்(து) உரிமை மாக்கள்

(பாட்டு 932, யுத்தகாண்டம் திருமுடிசூட்டுப்படலம்)

எனக் கவிஞனது கற்பனையில் உதித்த விழாக்கோலம் கலைஞனது சிற்றுளியில்பட்டுச் சிறப்புற மிளிர்வதை வலப்புறக்கதவில் செதுக்கப்பட்டுள்ள இராமனின் முடிசூட்டு விழாவினைக் காண வந்த அந்தணர்களும், வணிகர்களும், வேளாளர்களும், சான்றோர் களும் இக்காட்சியில் இடம் பெறுகின்றனர்.

கம்பனது பாடல்களை மரத்தில் வடித்த சிவபுரீஸ்வரர் கோபுர நுழைவாயில் கதவின் அமைப்பினையும், அதன் நுண்ணிய கலைத்திறனையும் காண்போர் அதனை உருவாக்கியத் தச்சனைப் பற்றியும், அவன் கைவண்ணம் பற்றியும் ஆழ்ந்து சிந்திக்காம லிருக்க முடியாது. இத்தகையத் தொழில் சிறப்பு வாய்ந்த தச்சர்கள் நம் தமிழகத்தில் வாழ்ந்து வந்தனர். ஒரு நாளில் எட்டுத் தேரைச் செய்யக்கூடிய வலிமையும், தொழில் திறமை யுள்ள தச்சர்கள் இருந்தனர். அவர்களை நம் இலக்கியங்கள், 'கைவல் கம்மியன்'[14] என்றும் 'தச்சன்'[15] என்றும் குறிப்பிடுகின்றன.

தச்சர்

தச்சர் என்ற சொல் தற்காலத்தில் மரத்தைக் கொண்டு தொழில் புரிபவர் என்ற பொருளில் வழங்கப்படுகிறது. பண்டைக் காலத்தில் செதுக்கும் தொழிலில் வல்லுநர் தச்சர் என்றழைக்கப் பட்டனர். வேதத்தில் சிவபெருமான் தச்சர்களின் தலைசிறந்த வராகக் கருதப்படுகிறார். சிவபெருமானிடமிருந்தே வாஸ்து சாஸ்த்திரங்கள் தோன்றியதாக வேத நூல்கள் குறிப்பிடுகின்றன.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருவாரூர் கல்வெட்டு, தச்சர்களை ரதகாரர் என்று குறிப்பிடுகிறது. இவர்களின் அனுலோமர், பிரதிலோமர் என்ற இருகுடிகள் இருந்தனர். நன்னிலம் வட்டம் ஆலங்குடியிலுள்ள ஆபத்சகாயீசுவரர் கோயிலிலுள்ள கி.பி. 1264-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு தச்சர்களைப் பற்றி சிறப்பாகக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டில் தச்சர்களின் மெய்க்கீர்த்தியுள்ளது. இம்மெய்க்கீர்த்தி இவர்களின் தோற்றம் பற்றியும், கொடி பற்றியும், தன்மைப் பற்றியும் குறிப்பிடுகிறது. தச்சர்கள் பல்வேறு நாடுகளில் இருந்தபோதிலும், தாங்கள் ஒரே இனத்தை சேர்ந்தவர்களென்று கொள்ளும் ஒரு சமுதாய அமைப்பைக் கொண்டிருந்தனர். இவர்கள் அவ்வப்போது கூடித் தங்கள் இனத்தின் நன்மை தீமைகளைப் பற்றிய முடிவுகளை எடுத்தனர். அம்முடிவுகள் அவ்வினம் முழுவவதயும் கட்டுப்படுத்தியது.

இவர்களுடைய மெய்க்கீர்த்தி, இவர்களை உத்தராபதியைச் சேர்ந்தவர்களென்றும், மகரக் கொடியை உடையவர்களென்றும், இவர்கள் பதினெட்டு நாட்டில் வாழ்ந்து வருவதாகவும் குறிப்பிடுகிறது. அண்மையில் திருவரங்கத்திலுள்ள வெள்ளித் திருமுற்றம் என்ற இடத்தில் இத்துறையால் கண்டு பிடிக்கப்பட்டுள்ள கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டும் இவர்கள் பதினெட்டு நாட்டில் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிடுகிறது. இக்வெட்டு வாசகத்தின் மேல் பகுதியில் தச்சர்களுக்குரிய மகரக் கொடியும் அவர்தம் தொழிலுக்குரிய சுத்தி, உளி, கொறட்டு போன்ற ஒன்பது ஆயுதங்களின் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. வெள்ளித் திருமுற்றத்தில் எழுந்தருளியுள்ள இறைவனின் பெயர் இரதக் கார விண்ணகர் நாயனார் என்று கல்வெட்டு கூறுகிறது. இரதக்காரர் பெயரிலேயே இறைவன் பெயர் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இங்குள்ள மண்டபம் ஒன்றை முழுதும் வல்லவன் தம்பிரான் என்ற இரதக்காரன் எடுத்துள்ளான்.

சிவபுரீஸ்வரர் ஆலய கோபுர நுழைவாயிலிலும், கதவிலும் கல்வெட்டுக்கள் இல்லாமையால், கதவின் அமைப்பையும், அதில்

செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களின் கலை அமைதியையும், நுணுக்கத்தையும் கொண்டு இக்கதவின் காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக்கொள்ளலாம்.

இக்கதவின் அமைப்பினையும், அழகினையும் இதில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களின் கலைத்திறனையும் பலர் கண்டிருக்கலாம். ஆனால் அக்கதவு பற்றியும், அதிலுள்ள சிற்பங்களில் பொதிந்துள்ள கலைநயம், இலக்கிய நயம், வரலாற்று உண்மைகளைப் பற்றி அறிந்துகொள்ள எவரும் முன்வரவில்லை. எனவே இதனைக் கருத்திற்கொண்டு, தட்டப்படாத கதவு என்று தலைப்பு அளித்துள்ளேன்.

அடிக்குறிப்புகள்

1. பருவிரும்பு பிணித்துச் கசவ்வர குரீஇத்
துணைமான் கதவம் பொருத்தி இணைமாண்டு
நெடுநெல்வாடை. வரி 80-81

2. தொல் வலி நிலை இய வணங்குடை நெடுநிலை
நெய்ப்படக் கலிந்த திண் போர்க் கதவின்
-மதுரைக்காஞ்சி, வரிகள் 353–354

3. புலிப்பொறிப் போர்கதவின்
திருத்துஞ்சுந் திண் காப்பிற்
பட்டிப்பாலை, வரிகள் 40-41

4. .....பொறியமை புதவிற்
கடைமுதல் வாயிற் கடுங்காப் பிளையரை
–பெருங்கதை, மகதகாண்டம்,
பதுமாபதியைக் கண்டது வரிகள்-145-146

5. பொறிநிலையமைந்த போர் பெருங்கதவிற்
செறிநிலையமைந்த சித்திரப் புதவின்
–பெருங்கதை 3, மகத காண்டம்,
இராசகிரியம் புக்கது, வரிகள் 25-26

6. ஏழெயிற் கதவமெறிந்து கைக்கொண்டு நின்
பேழ்வா யுழுவை பொறிக்கும் மாற்றலை
–புறம்-33, வரிகள்–8-9

7. பருவிரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇத்
துணைமான் கதவம் பொருத்தி இணைமாண்டு
நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்
தாளொடு குயின்ற போராமை, புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடக்கவிற் புரைதீர்ந்து
ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை
–நெடுநெல்வாடை, வரிகள்-80-87

8. *The Hindu Temple* - Stella Kramrisch

9. மேவரும் உணர்வின் முடி(வு) இலாமையினால்
வேதமும் ஒன்கும் விண்பைகுலால்
தேவரும் ஒக்கும் முனிவரும் ஒக்கும்
திண்பொறிய் அடக்கிய செயலால்
காவலில் கலைவளர் கன்னியை ஒக்கும்
சூலத்தால் காளியை ஒக்கும்
யாவரும் தன்னை எய்குவதற்(கு) அரிய
தன்மையால் ஈசனை ஒக்கும்
-கம்பராமாயணம், பாலகாண்டம்
நகரப்படலம், பாட்டு -19

10. *Thc Hindu Temple* - Stella Kramrisch

11. *Ibid*

12. Rig Veda. VIII. 42. I

13. A dictionary of Hinduism - Margarct and James Stutley - See also Skandapuranam.

14. கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து
ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை
- நெல்நெடுவாடை, வரிகள் 85–86

15. .....கைவல்
எண்டேர் செய்யுந் தச்சன்
–புறநானூறு-87, வரிகள் 2-3

12

திருவானைக்கா பள்ளியறைச் சொக்கர்

தமிழகத்தின் வரலாற்றுக்குப் புகழ் சேர்ப்பவை கோயில்கள். இக்கோயில்கள், சிற்றூர் முதல் பேரூர் வரை வானளாவ எழும்பி நின்று தமிழகத்தின் கடந்தகாலக் கலை, வரலாற்றை எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றன. மிகச் சிறப்பு வாய்ந்த அத்தகைய கோயில்களுள் ஒன்றுதான் திருச்சி மாவட்டத்திலுள்ள திருவானைக்கா ஜம்புகேசுவரர் கோயிலாகும்.

சங்ககாலச் சோழர்களின் தலைநகரமாய் விளங்கிய உறையூரின் ஒரு பகுதியாக விளங்கியது திருவானைக்கா. உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட புகழ்மிகு மன்னன் கரிகாற் பெருவளத்தான். அவனது வழித்தோன்றலாகக் கருதப்படுபவன் கோச்செங்கணான். இம்மன்னனது வாழ்க்கை திருவானைக்கா ஜம்புகேசுவரத்தோடு தொடர்புறுத்திக் கூறப்படுகிறது. திருமங்கையாழ்வார் தம்முடைய பாசுரங்களில்,

'எண் தோளீசர்க்கு எழில் மாடம் எழுபது செய்
துல காண்ட செங்க ணான் கோச் சோழன'

என்று செங்கணானைப் புகழ்ந்துரைக்கின்றார்.

சங்ககாலந்தொட்டே திருவானைக்கா பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன. சங்க காலத்தே இக்கோயில் அழியக் கூடிய பொருட்களான மரம், சுதை, செங்கல் போன்ற பொருட்களால் கட்டப்படடிருத்தல் வேண்டும். இலக்கிய, புராணங்களின் அடிப்படையில் நோக்கும்போது இக்கோயில் கோச்செங்கணான் காலத்தில் புகழ்பெற்று விளங்கியதாகக் கருதலாம்.

இக்கோயில் முற்காலச் சோழர் காலத்தில் கற்றளியாக எழுப்பப்பட்டிருக்க வேண்டும். மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மனான முதற் பராந்தகன் காலத்தைச் சார்ந்த துண்டு

கல்வெட்டொன்று கோயிலின் உட்பிரகாரத்தில் பாவு கல்லாகக் கிடக்கிறது. மேலும் முற்காலச் சோழர் காலத்தை அதாவது கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிரம்மா, அர்த்த நாரீசுவரர், தட்சிணாமூர்த்தி சிற்பங்கள் காணப்படுகின்றன. மண்டபத்தில் உதிரிச் சிற்பங்களாக வைக்கப்பட்டுள்ள இவை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் நகரத்தாரின் திருப்பணியின் காரணமாக இடம் மாற்றப்பட்டுவிட்டது என்று கூறப்படுகிறது. திருச்சி மாவட்டத்தி லுள்ள பழூர், அல்லூர், திருச்செந்துறை, லால்குடி ஆகிய ஊர்க் கோயில்களிலுள்ள சிற்பங்களோடு இச்சிற்பங்கள் ஒப்பு நோக்கத் தக்க வகையில் சிறப்பாக உள்ளன.

திருவானைக்கா கோயிலில் ஏராளமான செப்புத் திருமேனிகள் உள்ளன. அவற்றுள் ஒன்று தனிச் சிறப்புடையது. பள்ளியறைச் சொக்கர் என்றழைக்கப்படும் இத்திருமேனியின் பத்ம பீடத்தில் கிரந்த எழுத்துக்களின் பொறிப்பு உள்ளது.

யீஸ்வர வருஷம் கார்த்திகை
மாதம் ருஉ கிருஷ்ண தேவ
மஹா ராயர் தம்மத்திலே
கோவிந்த அண்ணக
தம்பி கணபதி சதாஸேவை

என்று எழுதப்பட்டுள்ளது.

விஜயநகர மன்னன் கிருஷ்ண தேவராயர் காலத்தில் கி. பி. 1517-ல் (ஈஸ்வர வருஷம் கார்த்திகை மாதம் ஐந்தாம் தேதி) இத்திருமேனி எழுந்தருள்விக்கப்பட்டுள்ளது. துளுவ வமிசத்தைச் சார்ந்த இப்பெருமன்னன் கி. பி. 1509 முதல் கி.பி. 1529 வரை தமிழகத்தைத் தன்னாதிக்கத்தில் வைத்திருந்தான். காடவரை வென்று காஞ்சியைக் கைப்பற்றினான். காஞ்சி, சிதம்பரம், திருவண்ணாமலை ஆகிய ஊர்களில் வானுயர்ந்த கோபுரங்களை எழுப்பினான். தன்னுடைய உருவத்தையும், தன் மனைவியரது உருவங்களையும் செப்புத் திருமேனிகளாக வார்த்து திருப்பதிக் கோயிலுக்கு அளித்துள்ளான்.

வைணவத்தில் பற்றுக் கொண்டிருந்தாலும், சைவத்திற்கும் ஏராளமான கொடைகளை அளித்துள்ளான். அதை மெய்ப்பிக்கும்

வகையில்தான் மேற்கூறிய ஜம்புகேசுவரர் கோயிலிலும் இம் மன்னனின் ஆதரவில் பள்ளியறைச் சொக்கர் திருமேனி செய்தளிக்கப்பட்டுள்ளது. ஈசுவர வருஷம் கார்த்திகை மாதத்தில் கோவிந்தன் என்பானுடைய தம்பி கணபதி இச்செப்புத் திருமேனியைச் செய்தளித்துள்ளான் என்பது மேற்கூறிய வாசகத் தால் அறியப்படுகிறது.

பள்ளியறைச் சொக்கர் பத்மாசனத்தில் இடக்காலை மடக்கி, வலக்காலைத் தொங்கவிட்டு அமர்ந்துள்ளார். நான்கு கரங்களுடன் விளங்கும் இவருடைய மேலிரு கரங்களும் மான் மழுவேந்தி யுள்ளன. கீழிரு கரங்கள் அபய வரதத்தில் அமைந்துள்ளன. தலையில் அழகிய ஜடாமகுடம் தாங்கிக் காதுகளில் மகர குண்டலங்களணிந்து காணப்படுகிறார். மலர்ந்த, அருள் ஒளி வழங்கும் கண்களையும் நீண்ட நாசியையும் காண்கிறோம். 41 செ.மீ. உயரமும் 20 செ.மீ. அகலமும் கொண்டு விளங்கும் இச்செப்புத் திருமேனி கிருஷ்ணதேவராயர் காலத்துப் படிமக் கலைக்கோர் உன்னதச் சான்று எனில் அது மிகையாகாது.

கல்வெட்டாய்வு

13

பெரிய குறுக்கை அகரச் சுருதியின் கல்வெட்டு

பெரிய குறுக்கை அகரம்

இவ்வூர் பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர் வட்டத்தில் திருச்சியிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இங்கு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம், லஷ்மி நாராயணப்பெருமாள் ஆலயம், ஐயனார் ஆலயம் ஆகியன உள்ளன. மீனாட்சி சுந்த ரேஸ்வரர் ஆலயமும், ஐயனார் ஆலயமும் வழிபாட்டிலுள்ளன. லஷ்மி நாராயணப் பெருமாள் ஆலயம் மிகவும் சிதைந்த நிலையில் மண் மேடிட்டுக் காட்சி தருகிறது. அம்மண்மேட்டில் புதைந்து கிடந்த ஒரு செவ்வக வடிவமுள்ள கல்லில் கீழே தரப்பட்டுள்ள கல்வெட்டு வாசகம் காணப்படுகிறது. கல்வெட்டு வாசகத்தின் கீழ் குறுவாளின் உருவமும், பிறையின் உருவமும் பொறிக்கப் பட்டுள்ளன.

கல்வெட்டு

1) ஸ்ரீ
2) குறுக்கைத்
3) திருச்சிற்றம்ப
4) லச் சதுவே
5) தி மங்கலத்
6) துத் திருமுற்ற
7) ங்களும் இந்
8) த அகரமும் ஐ
9) ஞ்சு நாட்டு

10) ச் சுருதி மா
11) ந்கள் கா
12) வல்

கல்வெட்டில், இவ்வூர் குறுக்கைத் திருச்சிற்றம்பலத்துச் சதுர் வேதிமங்கலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூரிலிருந்த அகரமும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

'அகரம்' என்பது அக்ரஹாரம் என்பதின் திரிபு. இவ்வூரி லுள்ள கோயில்களையும் (திருமுற்றங்கள்) அகரத்தையும், ஐஞ்சு நாட்டு சுருதிமான்கள் காவல் புரிந்ததாக இக்கல்வெட்டு கூறுகிறது. இங்குள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திலுள்ள மூன்றாம் இராஜராஜனின் 24-ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1240), கல்வெட்டு இவ்வூரைக் குறுக்கைத் திருச்சிற்றம்பலத்து சதுர்வேதிமங்கலமென குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் சுருதிமான் களைப் பற்றி மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஊற்றத்தூர் கல்வெட்டும் குறிப்பிடுகிறது. இவர்களை இடங்கைப் பிரிவைச் சேர்ந்தவர்களாகவும், உழு தொழிலைச் செய்பவர்களாகவும் கல்வெட்டு கூறுகிறது.

'சுருதிமான்கள்' என்ற சொல்லுக்கு ஒரு குலத்திலுள்ள மூத்தவர்கள் அக்குலத்துத் தொடர்பான முக்கிய நடைமுறை களைக் கண்காணிப்போர் என்றும், இச்சொல் தமிழிலுள்ள 'கேள்வி' என்ற சொல்லிலிருந்து பின்பற்றப்பட்டதென்றும் பொருள் காணப்படுகிறது. இக்கல்வெட்டிலுள்ள எழுத்துக்களின் வரிவடிவங்கள் கி. பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகத் தோற்றமளிக்கின்றன.

இவ்வூரில் இன்றும் சற்றேறக்குறைய நூற்றுக்கும் மேற்பட்ட சுருதிமான்களின் வழிவந்தோர் வாழ்கின்றனர். அவர்கள் தங்களை 'சுருதிமான்கள்' என அழைத்துக் கொள்கின்றனர். சுருதிமான்கள் என்ற பெயர் நாளாவட்டத்தில் மாறி சுதர்மான்கள் என்று வழக்கில் வந்துள்ளது போலும். இவர்கள் தற்பொழுது இங்குள்ள கிராம தேவதைகளுக்குரிய ஆலயங்களில் பூசாரிகளாகப் பணி புரிந்து வருகின்றனர். இவர்களையணுகித் தாங்கள் எந்த இனப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று வினவியபொழுது, தாங்கள்

'மூப்பனார்' வகுப்பில் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களெனக் கூறுகின்றனர். இ.தர்ஸ்ட்டன், 'மூப்பனார்' வகுப்பைக் குறிப்பிடும் பொழுது, அவ்வகுப்பில் அளவன், அம்பலக்காரன், குடுமி, பள்ளன், பறையன், தண்டன், சேனைக் குடையன், சாலியன், சாணான், 'சுதர்மான்', வலையன் என்ற பிரிவினர்களுள்ளனரென்று தம்முடைய 'தென்னிந்திய குலங்களும் பழங்குடி மக்களும்' என்ற நூலில் தெரிவித்துள்ளார்.

பெரிய குறுக்கைக் கல்வெட்டின் கீழ் பொறிக்கப்பட்டுள்ள 'குறுவாள்' சுருதிமான்களின் வீரத்தினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என எண்ணத் தோன்றுகிறது. வாளின் அருகே பொறிக்கப்பட்டுள்ள 'பிறை' அவர்கள் சந்திர குலத்தில் தோன்றியவர்கள் என்பதை வெளிப்படுத்தலாமெனக் கருதவும் வாய்ப்பேற்படுகிறது.

குறிப்பு: இக்கல்வெட்டை இந்நூலாசிரியர் தன் கள ஆய்வின் பொழுது படித்தெழுதியுள்ளார்.

14

ஐந்நூற்றுவர் செக்கு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, கரூர் மாவட்டம் வெள்ளியணை நந்தமேட்டில் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட எண்ணெய் ஆட்டும் செக்கு ஒன்றினைக் கண்டறிந்துள்ளது. இச்செக்கு ஐந்நூற்றுவர் என்ற வணிகக் குழுவினரால் சோமூர் இறைவனது பயன்பாட்டிற்காகக் கல்லால் அமைக்கப்பட்டதாகும். இதன் வாய்ப்பகுதியில் வட்டமாக வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு இத்தகவலைத் தருகிறது. அக்கல்வெட்டின் செய்தி பின்வருமாறு:-

''ஸ்வஸ்திஸ்ரீ சோமூர் மகர்தேவர்க்கு அஞ்ஞூற்றுவர்
இடுவிச்ச செக்கு''

பண்டையத் தமிழ்நாட்டில் ஐந்நூற்றுவர், திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர், மணிக்கிராமத்தார், வளஞ்சியர், சித்திரமேழிப் பெரியநாட்டார், பதினென்விசயத்தார், அய்யப்பொழில் ஐந்நூற்றுவர் என்ற பெயர்களில் வணிகக் குழுக்கள் இருந்தன. இக்குழுக்கள் தமிழகம் மற்றும் தென்னிந்தியப் பகுதிகளில் தரை மார்க்கமாகவும், இலங்கை, பர்மா (மியான்மர்), தாய்லாந்து, சீனா போன்ற கடல் கடந்த நாடுகளில் கடல் மார்க்கமாகவும் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டன. கூட்டம் கூட்டமாக வண்டிகளில் சரக்கேற்றிக் கொண்டு அன்றையப் பெருவழிகளில் சென்ற இவர்கள் இடையிடையே பாதுகாப்பான இடங்களில் தங்கிச் சென்றனர். இவ்விடங்கள் வீரத்தூவனம், அடிக்கீழ்த்தளம், மடிகை என்ற பெயர்களில் விளங்கின. இவர்களுக்கென்று தனிப்பாதுகாப்புப் படைகளும் இருந்தன. இவை முன்றுகை மகா சேனை, வீரக் கொடியார், எறிவீரர் என்று பல்வேறு பெயர்களில் விளங்கின. நெடுந்தொலைவு செல்லும் இவர்களுக்கு கொள்ளையர் பயம் தொடர்ந்திருந்ததால் வழிநெடுகப் பல கோயில்களைத் தோற்றுவித்து வழிபட்டனர். இக்கோயில்கள் சிவன், திருமால், காளி

(பிடாரி), சாத்தன் (ஐயனார்) மற்றும் சமண பௌத்தக் கடவுளர் களுக்காகவும் அமைந்தன. இக்கோயில்களுக்காகப் பல்வேறு கொடைகளை நல்கிய இவ்வணிகக் குழுக்கள் குளங்கள், மண்டபங்கள் ஆகியவற்றையும் தர்மமாக அமைத்துக் கொடுத்தன. இச்செய்திகள் தொடர்பான கல்வெட்டுகள் பல இடங்களிலும் கண்டறியப்பட்டுள்ளன.

பண்டைய கோயில்களில் விளக்கெரிப்பதற்காகப் பொன், கால்நடைகள், நிலங்கள் வழங்கப்பட்டன. விளக்கெரிப்பது ஒரு சிறந்த கொடையாகக் கருதப்பட்டது. விளக்கெரிப்பதற்கும் உணவிற்கும் எண்ணெய் இன்றியமையாததாக இருந்தது. எனவே எண்ணெய் ஆட்டக் கல்லால் ஆன செக்குகளைச் செய்தளிப்பது முக்கியக் கொடையாகக் கருதப்பட்டுச் செக்குகள் கொடையாக நல்கப்பட்டது. எண்ணெய் ஆட்டும் தொழில் பண்டையத் தமிழகத்தில் அரசிற்கு வரி வருவாய் ஈட்டித் தந்த தொழிலாகும். செக்கிறை, செக்குக் கடமை, செக்குப் பாட்டம் என்ற பெயர்களில் வரிகள் வசூலிக்கப்பட்டன. புதிதாக அமைக்கப்படும் ஊர்களில் செக்குகள் அமைக்கும் உரிமை அரசால் மட்டுமே வழங்கப்பட்டது. செக்காட்டுபவர்கள் சங்கரப்பாடியார் என்றும், செக்கார் என்றும் அழைக்கப்பட்டனர். பல கோயில்களையொட்டி இவர்களுக்குக் குடியிருப்புகளும் இருந்தன.

தமிழகத்தில் பல இடங்களில் கல் செக்குகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுகளுடனும் கல்வெட்டுகள் இல்லாமலும் கிடைத்துள்ளன. செக்குகளின் கீழ்ப்பகுதி மட்டுமே கிடைப்பதால் உலக்கைப் பகுதி மற்றும் மாடுகள் கட்டி இழுக்கும் அமைப்பு எப்படி இருந்தது என்பது இவற்றின் மூலம் அறிய இயலாதுள்ளது. எனினும் தாராசுரத்தில் உள்ள 63 நாயன்மார் களின் கதைகளை விளக்கும் சிறு சிற்பத் தொகுதிகளில் கலிய நாயனார் கதையை விளக்கும் சிற்பத்தில் கி.பி. 12-ஆம் நூற்றாண் டளவினதான செக்கின் அமைப்பு நன்கு காட்டப்பட்டுள்ளது. செக்கின் உலக்கை மற்றும் எருதுகள் நன்கு தெளிவான அளவில் தெரிகின்றன.

வெள்ளியணையில் ஐந்நூற்றுவ வணிகர்கள் சோமூர் மகாதேவர் கோயிலின் பயன்பாட்டிற்காகச் செக்கு அமைத்து

கொடுத்துள்ளனர். செக்கில் உள்ள கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு இச்செக்கு கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம். இச்செக்குள்ள இடம் புஞ்சை நிலம் அருகில் அமைந்த குடியிருப்பான நத்தமேடு ஆகும். இங்கு கல்வெட்டில்லாமல் மேலும் இரண்டு செக்குகள் உள்ளன. இங்கு கோயில் சார்ந்த ஒரு எண்ணெய்த் தொழிற்சாலை, செக்காலை இருந்திருக்க வேண்டும். அருகிலமைந்த புஞ்சை நிலத்தில் விளையும் எள், ஆமணக்கு, நிலக்கடலை போன்றவை இங்கு பெரிய அளவில் ஆட்டப்பட்டிருக்க வேண்டுமென்று கருதலாம்.

வெள்ளியணை, கரூர்-திண்டுக்கல் பழைய சாலையில் அமைந்துள்ள ஊராகும். இச்சாலை வடமொழி இலக்கியங்களில் குறிப்பிடப்படும் தக்ஷிணபதம் என்ற பெருவழிச் சாலையாகும். கரூர் பண்டைய நாட்களில் ஒரு பெரும் வணிக நகரமாக விளங்கியது. இங்கு மேற்சொன்ன தக்ஷிணபதம் என்ற பெருவழியும் கொங்கப் பெருவழி என்ற மற்றொரு பெருவழிச்சாலையும் சந்தித்தன. கொங்கப் பெருவழி கேரள மேலைக் கடற்கரையில் தொடங்கி கோவை, கரூர், திருச்சி ஆகியவற்றை இணைத்துப் பூம்புகார் சென்று முடிந்த பெருவழியாகும்.

மேற்கண்ட செய்திகளைக் கருத்தில் கொண்டால் தமிழகத் தொல்லியல் துறை அண்மையில் வெள்ளியணையில் கண்டறிந்த செக்கு மற்றும் அதனில் உள்ள கல்வெட்டில் பண்டையத் தமிழக வணிகக் குழுக்கள், கோயில் சார்ந்த தொழில்கள், பண்டைய நெடுஞ்சாலைகள் ஆகிய பொருளாதாரச் செய்திகள் எவ்வகையில் விளக்கம் பெறுகின்றன என்பதை நன்கு உணர முடியும்.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
Acc No.
Date
MADRAS-8.

சமூக ஆய்வு

15

நெசவியல்

மரப்பட்டைகளையும் தழைகளையும் ஆடையாக அணிந்து வந்த மனிதன் தன்னுடைய ஆடையை எளிதாக நல்ல முறையில் அணிந்து கொள்வதற்கு எடுத்துக்கொண்ட ஒரு புதிய முயற்சி அவனது வரலாற்றில் ஒரு புதிய திருப்பு முனையாகும். அப்புதிய முயற்சியின் பலன்தான் நம்மால் பெருமையுடன் புகழ்ந்து பேசப்படும் நெசவுத் தொழிலாகும். இந்நெசவுத் தொழில் புதிய கற்காலத்தில் ஆரம்பமாயிற்றென்று தொல்பொருள் வரலாற்றறிஞர் எச். டி. ஸங்காலியா கூறுகின்றார்.[1] ஆடையைப் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் காணப்படுவதால் இந்நெசவுத் தொழிலின் தொன்மையை நாம் நன்கு அறிய முடிகிறது[2], நெசவுத்தொழில் செய்வதற்கு பருத்தி மிகவும் இன்றியமையாத ஒரு மூலப்பொருளாக விளங்கியது. பருத்தியை நம் பண்டைய தமிழ் மக்கள் நன்கு அறிந்திருந்தனர். தமிழகத்தில் பருத்தி மிகுதியாக இருந்தது என்பதற்கு 'பருத்தி வேலிச்சீறூர்'[3] என்ற புறநானூற்றடி சான்று பகருகிறது. இப்பருத்தியேயன்றி இலவமரம்,[4] கோங்குமரம்[5] முதலிய மரங்களிலிருந்து பஞ்சு சேகரிக்கப்பட்டு நெசவுத் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டது. இலவமரம் கோங்குமரம் முதலிய மரங்களைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. பஞ்சைப் பயன்படுத்தி நெய்த ஆடைகளே யல்லாமல் மரப்பட்டையிலுள்ள நாரினை எடுத்து பின்னி மலை வாழ் குறவர் ஆடையாகப் பயன்படுத்தினர் என்பதை 'மரனாருடுக்கை மலையுறை குறவர்' என்ற நற்றினை அடியால் நன்கு அறியலாம்.[6] இவையேயன்றி பட்டு நூலைப் பயன் படுத்திப் பட்டாடை நெய்தனர் என்பதையும், எலியினுடைய மயிரைப் பயன்படுத்தி ஆடை நெய்தனர் என்பதையும், 'நூலினும் மயிரினும் நுழைநூற் பட்டினும்' என்ற சிலப்பதிகார அடியால் அறியலாம்.[7].

பருத்திப் பஞ்சை அதனுடைய கொட்டையிலிருந்து பிரித்தெடுக்க வில்லினைப் பயன்படுத்தினர் என்பதை அகநானூற்று[8] வரியாலும், நற்றினை[9] வரியாலும் நன்கு அறியலாம். இவ்வாறு பிரித்தெடுத்த பஞ்சை மகளிர் இராட்டையால் நூற்றனர் என்று புறநானூறு[10] கூறுகிறது. இராட்டையால் நூற்ற நூல் மிகவும் நுண்மையாக இருந்தது என்பதை 'நுணங்கு நுண்பனுவல்' என்ற நற்றினை அடி, நன்கு உணர்த்தும்[11]. இத்தகைய நுண்மையான நூலைக் கொண்டு நெய்யப்பட்ட ஆடையினுடைய இழைகளின் வரிசை காண்பதற்கு இயலாத வகையில் அமைந்திருந்தது என்று புறம்[12] கூறும். இவ்வாறு திறமையுடன் நெய்யப்பட்ட ஆடைகள் அரும்பி மலர்ந்த பகன்றைப் பூப்போன்றும்,[13] பாம்பு உரித்த தோல் போன்றும்,[14] மூங்கிலின் உட்புறத்தேயுள்ள தோல் போன்றும்,[15] புகையை விரித்தாற் போன்றும்,[16] பாலாவியைப் போன்றும்,[17] விளங்கின.

ஆடைகள் நேரிய கரையை (Border)[18] உடையனவாகவும், ஒள்ளிய பூ வேலை செய்யப்பட்டவையாகவும்[19] (Embroidered) இருந்தன. ஆடைகள் தைப்பதற்கு தையற்காரர்கள் இருந்தனர். அவர்கள் துன்னகாரர்[20] துன்னவினைஞர்[21] என்று அழைக்கப்பட்டனர் என்று இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம். ஆடைகள் வெளுத்து[22] உடுத்தப்பட்டன என்றும், மக்கள் தூய்மையான[23] உடையை அணிந்தனர் என்றும், ஆடைகளுக்கு மணங்கமழும் அகிற்புகையை[24] ஊட்டினர் என்றும், அது புட்டகம்[25] என்றழைக்கப்பட்ட தென்றும் செந்நிற ஆடையை[26] ஆறலைகள்வர்கள் அணிந்தனரென்றும், துணைப்புணர்ந்த மடமங்கையர் பட்டு நீக்கித் துகிலுரித்தனரென்றும்,[27] நீல நிறத்துணி[28] படுக்கையில் விரிக்கப் பெற்றதென்றும் இலக்கியங்கள் வாயிலாக மேலும் அறிகின்றோம்.

தமிழ் நாட்டில் நெய்யப்பட்ட ஆடைகள் 36 வகைகள் என்றும் அவை கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம் வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக் கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர் காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு பொன்னெழுத்து,

குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி பணிப்பொருத்தி என்று அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார்[29].

நீலநிறத் துணிகளும், செந்நிறத் துணிகளும் இருந்தன வென்று இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். இத்துணிகளுக்கு நிறம் (Colour) எவ்வாறு ஊட்டப்பெற்றதென்று அறிய வேண்டும். பண்டைக் காலத்தில் வண்ணம் தயாரிக்க காடுகளில் முளைத் திருக்கும் செடிகளின் தழைகளும், மரப்பட்டைகளும், அவுரிச் செடிகளும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.[30]

அவுரிச் செடிகள் நம் நாட்டிலிருந்து மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. வண்ணம் தயாரிக்கப் பயன்படுவதால் தான் இச்செடிகள் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன எனக் கருத இடமுண்டு. துணிகளுக்கு நிறம் ஊட்டியதற்குச் சான்றாக தமிழகத்தில் அரிக்கமேடு என்ற இடத்தில் நடந்த அகழாய்வின் மூலம் மஸ்லின் துணிகளுக்குச் சாயம் தோய்க்கப் பயன் படும் இரண்டு செங்கற்களாலான தொட்டிகள் கண்டுபிடிக்கப் பட்டன. அவற்றின் காலம் சற்றேறக்குறைய கி.பி. முதல் நூற்றாண்டு என்று கணக்கிடப் பெற்றுள்ளது.[31] சென்னைப் பல்கலைக் கழகத்தினரால் நடத்தப்பெற்ற உறையூர் அகழாய்வில் ஏறக்குறைய கி.பி. இரண்டு-ஐந்து நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தைச் சார்ந்த செங்கற்களால் கட்டப் பெற்ற துணிக்கு சாயம் தோய்க்கும் இரண்டு தொட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன.[32]

உறையூர் நெசவுத் தொழிலுக்கும், பருத்தி ஆடைகளுக்கும் பெயர்பெற்ற நகரம் என்று பெரிபுளூஸ் குறிப்பிடுகிறார்.[33] மேலும் தமிழகத்திலிருந்து ரோம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பெற்ற மஸ்லின் துணிகளை மக்கள் அதிக விலை கொடுத்து வாங்கினர். தமிழகத்திலிருந்து திருச்சிராப்பள்ளி மாவட்டமும், தஞ்சை மாவட்டமும், மஸ்லின் துணிகளை ரோம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்தன.[34] ஹெரடோடஸ் (Herodotus), பிளைனி (Pliny) போன்றவர்கள் நம் நாட்டு நெசவுத் தொழிலைப் புகழ்ந்து போற்றியுள்ளனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கிரேக்க, அரேபிய வணிகர்கள் இந்தியத் துணிகளை வாங்கிச் சென்று எகிப்திலும், ரோமிலும், பிற நகரங்களிலும் விற்றனர் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இந்நெசவுத் தொழிலைச் செய்தவர்கள் கம்மியர்[35] என்றும் காருகர்[36] என்றும் தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்நெசவுத்தொழில் செய்தவர்களிடையே பல்வேறு பிரிவினர் இருந்தனரென்பதை தமிழகத்தில் காணப்படும் கல்வெட்டுகள் மூலம் அறிகின்றோம். கல்வெட்டுகள் இவர்களைக் கைக்கோளர்[37] என்றும், சாலியர்[38] என்றும், சோழிய சாலியர்[39] என்றும், பட்டசாலியர்[40] என்றும், சேனியர்[41] என்றும் குறிப்பிடுகின்றன. இவர்கள் ஒவ்வொருவரும் நெசவுத் தொழிலைச் செய்யும் பல்வேறு பிரிவினைச் சேர்ந்தவர்கள்.

நெசவுத் தொழில் செய்பவர்களின் மீதும், அவர்கள் தொழிலுக்குப் பயன்பட்ட பஞ்சின் மீதும், பட்டு நூலின் மீதும், பட்டாடையின் மீதும், தறியின் மீதும், அவர்கள் குடியிருந்த இல்லங்களின் மீதும் நம் பண்டைய அரசுகள் பேர் கடமை,[42] பஞ்சுபீலி[43], பட்டாடை நூலாயம்,[44] பட்டாடை ஆயம்,[45] தறியிறை,[46] தறிக் கடமை,[47] அச்சுத் தறி,[48] பறைத்தறி,[49] சாலிகத்தறி,[50] தூசகத் தறி,[51] வாசல்வரி[52] போன்ற வரிகளை விதித்து அரசின் வருவாயைப் பெருக்கின என்பதை கல்வெட்டுகள் மூலம் அறிகின்றோம்.

கல்வெட்டுகளின் துணைகொண்டு பல்லவர், சோழர், சம்புவராயர், பாண்டியர், விஜயநகரப் பேரரசர்களின் காலங்களில் நெசவுத் தொழிலைச் செய்தவர் எவ்வாறு இருந்தனர் என்பதையும், அவர்களுடைய தொழிலின் முக்கியத்துவம் மற்றும் சமூகத்தில் அவர்களுக்கிருந்த செல்வாக்கு உரிமைகள் பற்றிச் சிறிது காண்போம்.

பல்லவர் காலம்

இரண்டாம் நந்திவர்மப் பல்லவனுடைய (கி.பி. 731-796) காசாக்குடிச் செப்பேடும், தண்டந்தோட்டம் செப்பேடும் தறியிறை பற்றிக் குறிப்பிட்டுத் தறியிறையிலிருந்து அரசிற்கு வருவாய் கிட்டியதைச் சுட்டுகின்றன.[53] பிற்காலப் பல்லவனான கோப் பெருஞ்சிங்க தேவனின் (கி.பி. 1943-79) எட்டாம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்த சிதம்பரம் கல்வெட்டு சாலிய வணிகர்களுக்கு இல்லங்கள் அமைத்துக் கொள்ள நிலமளித்ததை, அவர்கள் அதற்காக

சிதம்பரத்திலுள்ள இறைவனுக்கும், இறைவிக்கும் தேவையான ஆடைகளை அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் குறிப்பிடுகின்றது [54] இக்கல்வெட்டிலிருந்து அவர்கள் அரசிடமிருந்து பெற்ற சலுகையையும், தெய்வம் சார்ந்து அவர்களுடைய தொழிலுக்கிருந்த முக்கியத்துவத்தையும் நாம் அறிகின்றோம்.

சோழர் காலம்

பராந்தகச் சோழனின் (கி.பி. 907-955) இரண்டாம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு, கடிகாவன் களத்தன் என்னும் கைக்கோளப் படையைச் சேர்ந்தவன் 90 ஆடுகளை திருக்குட மூக்கில் எழுந்தருளியுள்ள திருக்கீழ் கோட்டத்து பரமசுவாமிக்கு நொந்தா விளக்கெரிப்பதற்காகக் கொடையாக அளித்தான் என்ற செய்தியைக் குறிப்பிடுகிறது.[55] இம்மன்னனின் இரண்டாம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்த உடையார்குடி கல்வெட்டொன்று கூத்தப் பெருமாளுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு சோடி ஆடை கொடுக்க வேண்டும் என்பதற்காக கைக்கோளப் படையைச் சேர்ந்த அரையன் ஜெயவிடங்கன் என்பவன் பத்துக் காசை கொடையாக அளித்துள்ளான் என்பதையும், இக்கொடையை அளித்தவர் கூத்த பிரானுக்கும், கணபதிக்கும், பிச்சதேவருக்கும் கோயில்கள் எடுப்பித்துள்ளதாகவும் குறிப்பிடுகிறது.[56]

உத்தம சோழன் காலத்தில் நெசவுத் தொழில் பெரும் சிறப்பினைப் பெற்றிருந்தது. குறிப்பாக காஞ்சிபுரத்தில் வாழ்ந்த நெசவுத் தொழில் புரியும் மக்கள் ஆலயங்களிலும் அரசியலிலும் மிகவும் ஈடுபாடுடையவர்களாக இருந்தனர். காஞ்சிபுரத்தில் இந்நெசவாளர்கள் வாழ்ந்த பகுதிகள் நான்கு இருந்தன. அவற்றைப் 'பாடிகள்' என்று உத்தம சோழனின் செப்பேடு குறிக்கிறது. இங்கு வசித்தவர்கள் பட்டசாலியன்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் பட்டாடை நெய்பவர்கள். இவர்கள் அரசர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கும் மட்டுமே ஆடை நெய்பவர்கள். உத்தமசோழன் இவர்களைக் காஞ்சிபுரத்திலுள்ள ஊரகம் என்ற கோயிலின் நிதி சம்பந்தப் பட்ட விவகாரங்களைக் கவனிக்கும்படி நியமித்தான். மேலும் சோழ நியமம் என்ற இடத்தில் வசித்தவர்களின் மீது விதித் திருந்த வரியை நீக்கி ஆலய சம்பந்தப்பட்ட கணக்குகளை மாதம்

ஒரு முறை பரிசோதிக்கும்படி நெசவாளர்களுக்குப் பொறுப்பை அளித்தான்.[57] முதலாம் இராசராசனுடைய கைக்கோளப் படையினர் வருவாய்த்துறை அதிகாரிகளுடைய ஒத்துழைப்புடன் சோழூரில் உள்ள இறைவியைச் சூரிய கிரகணத்தின்போது ஊர்வலமாகக் கொண்டு வரும் நாளை விழாவாகக் கொண்டாடவில்லை என்பதற்காக அக்கோயிலைச் சார்ந்த பொறுப்புடையவர்களின் மீது தண்டம் விதித்தனர்.[58]. முதலாம் இராசேந்திரனின் இரண்டாம் ஆட்சி ஆண்டில் கைக்கோளப் பெரும்படையைச் சேர்ந்தவர்கள் திருவிடைமருதூரிலுள்ள மகாலிங்க சுவாமி கோயிலில் ஒரு சன்னலும், ஒரு கதவும், ஒரு நிலைப்படியும், அங்குள்ள மண்டபத்தின் முன்னே படிகளும் கட்டுவித்தனர் என்று அங்குள்ள கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது.[59] முதலாம் இராசாதிராசனின் 35 ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு திருவிடைமருதூர் என்ற கிராமம் அங்கு உறையும் வராகப் பெருமாளுக்குக் கொடையாக அளிக்கப்பெற்றது என்றும் அக்கிராமத்திலிருந்து தறியிறையாக வரும் வருவாய் அரசன் பிறந்த நாளான பூர்வ பங்குனித் திருவிழாவிற்குப் பயன்படுத்தப்பட்டதென்றும் குறிப்பிடுகிறது.[60] வீரராசேந்திரனின் இரண்டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு திருவொற்றியூரிலுள்ள ஜெயசிங்க குலகால பெருந்தெருவில் வசிக்கும் நெசவுத் தொழில் செய்பவர்களும், சாலிய வணிகர்களும் அரசன் பிறந்த நாளன்று நடக்கும் விழாவிற்கு அவரவர்களுக்குரிய பங்கீட்டுப் பணத்தை அளிக்கவேண்டுமெனக் குறிக்கிறது.[61] மூன்றாம் இராசராசனின் 24-ஆம் ஆண்டுப் பொய்கை கல்வெட்டு நெல்லாயம், காசாயம் எனும் இரண்டு வகை வரிகளைக் குறிப்பிடுகிறது. தறியிறை காசாயம் என்ற பிரிவின் கீழ் வந்துள்ளது.[62] ஆகவே இதிலிருந்து தறியின் மீது விதிக்கப்பட்டிருந்த வரி என காசாகவே வசூலிக்கப்பெற்றதென்பதை நன்கு அறியலாம்.

சீன வரலாற்றாசிரியர் சௌ-ஜுகுவா (Chau-Ju-Kua) சோழ நாட்டிலிருந்து சீனாவிற்கு இறக்குமதியாகும் பொருள்களின் பட்டியல்களைக் குறிப்பிடும்பொழுது பருத்தியாலான துணிகளையும், பல நிறமுள்ள பட்டு நூலையும் சோழ நாட்டிலிருந்து கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை சீனா இறக்குமதி செய்தது என்று குறிப்பிடுகிறார். இதிலிருந்து பண்டைய நெசவுத் தொழிலின் பெருமையையும், வெளிநாட்டு வணிகத்தையும், நன்கு அறிய முடிகிறது.[63]

சம்புவராயர் காலம்

இராசநாராயண சம்புவராயனின் ஏழாவது ஆட்சி ஆண்டு நெறும்பூர் கல்வெட்டு திருவாலீஸ்வரமுடைய நாயனார் கோயிலைச் சுற்றி வசித்து வந்த கைக்கோளரின் மீது கடமையும், வாசல் வரியும் விதிக்கப் பெற்றதைக் குறிப்பிடுகிறது.[64] இவரது மற்றொரு புலிப்பார கோயில் கல்வெட்டு திருப்புலிப்பாகவ நாயனார் கோயிலைச் சுற்றியுள்ள திருமடவிளாகம் என்னும் பகுதியில் வசிக்கும் கைக்கோளர்களும், சாலியர்களும், தறிக் கடமையும், பேர்கடமையும் கோயில் இறை வழிபாட்டிற்காக அளிக்க வேண்டும் என்ற செய்தியைக் குறிப்பிடுகிறது.[65]

பாண்டியர் காலம்

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 14-ஆம் ஆட்சி ஆண்டு களத்தூர் கல்வெட்டு முன்குடுமீஸ்வரர் கோயிலுக்கு அக்கோயிலைச் சார்ந்த கைக்கோளர்களில் ஒருவரான கக்குநாயகன் என்பவர் இறைவழிபாட்டிற்காக நிலம் கொடையாக அளித் தமையைக் குறிக்கிறது.[66] இவ்வூரைச் சேர்ந்த இம்மன்னனின் மற்றொரு கல்வெட்டு கைக்கோளர் வகுப்பைச் சேர்ந்த ஆளுடைய நாயகன் என்பவன் கோயில் வழிபாட்டுச் செலவிற்காக நிலம் கொடையாக அளித்தமையைக் குறிப்பிடுகிறது.[67] இக்கோயி லிலேயே காணப்படும் மற்றொரு கல்வெட்டு மல்லந்தை என்னும் கைக்கோளன் கோயில் வழிபாட்டிற்காக நிலத்தைக் கொடையாக அளித்தான் என்றும், முன்னர் குறிப்பிட்ட கக்குநாயகன், ஆளுடைய நாயகன் ஆகியோர் இவனுடைய சகோதரர்கள் என்றும் குறிப்பிடு கிறது.[68] இதிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் ஒருவர் பின் ஒருவராக கோயிலுக்கு நிலக்கொடை அளித்துள்ளனர் என்று அறிய முடிகிறது. நெசவாளர்கள் நில உரிமையாளர் களாகவும் விளங்கினார்கள் என்பதும் தெரியவருகிறது.

இம்மன்னனின் 12-ஆம் ஆட்சி ஆண்டு புலிப்பார கோயில் கல்வெட்டு கைக்கோள வகுப்பைச் சார்ந்தவர்களும், அவர்களுடைய புதல்விகளும், புதல்வர்களும், குழந்தைகளும் கோயிலில் நடக்கும் எல்லாவிதமான செயல்களிலும் சுதந்திரமாக ஈடுபடவும், கிராமத்தில் நடக்கும் எல்லாவிதமான செயல்களிலும் ஈடுபடவும்,

சுதந்திரமாக இருக்கவும், விழாக்காலங்களிலும், சிறப்பான நாட்களிலும் இருப்பவர்களில் முதலாவதாக வெற்றிலை பெறும் உரிமை பெற்றிருந்தனர் என்று குறிப்பிடுகிறது.[69]

இரண்டாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டிய தேவனின் 14-ஆம் ஆட்சி ஆண்டு காஞ்சிபுரம் கல்வெட்டு அரசனுக்கும், கோயிலுக்கும், நெசவாளர்களும், கைக்கோளர்களும், சாலிய நெசவாளர்களும் ஆண்டு ஒன்றுக்கு ஆறு பணம் வீதம் ஒவ்வொரு தறிக்கும் வரியாக அளிக்கவேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது.[70]

கோட்டமங்கலம் சிவன் கோயிலில் காணப்படும் ஜடாவர்மன் வீரபாண்டியனின் கல்வெட்டு ஆவுடையார் சிலையையும், நாச்சியார் சிலையையும் அமைத்த ஆதித்ததேவன் என்பவனுக்குக் கைக்கோள முதலிகள் வீடுகட்டிக் கொள்வதற்கு ஏற்ற வீட்டு மனையைக் கொடையாக அளித்தமையைக் குறிக்கிறது.[71]

சிதம்பரம் நடராசர் கோயிலில் காணப்படும் மாறவர்மன் வீரபாண்டிய தேவனின் எட்டாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு சோழிய சாலியர் என்னும் வகுப்பைச் சார்ந்த நெசவாளர்கள் வாழ்வதற்கு கட்டடங்கள் அமைத்துக் கொள்ளத் தனியாக அவர்களுக்கு நிலம் அளிக்கப்பெற்றது என்றும், அவர்கள் வாழ்ந்த பகுதிக்கு தெரியவர நின்ற பெருமாள்புரம் எனப் பெயரிடப்பெற்றது என்றும், இங்கு வசிப்பவர்கள் சிவகாமசுந்தரி அம்மைக்கு குடிமக்கள் என்றும் முதல் விளைவைக் கோயிலுக்கு கடமையாகச் செலுத்தும் விழாவின் போது ஒவ்வொரு ஆண்டும் நான்கு புதிய துணிகளை அளிக்க வேண்டுமென்றும், திருஞானசம்பந்தன் கோயிலுக்கு ஐந்து சிறிய துணிகளைக் கொடுக்க வேண்டுமென்றும் கூறுகிறது.[72]

விஜயநகரப் பேரரசு காலம்

திண்டிவனம் வட்டத்திலுள்ள இரண்டாம் ஹரிஹரனின் அகத்தீசுவரர் கோயில் கல்வெட்டு கைக்கோளருக்குக் கொடுக்கப் பட்ட வரிச்சலுகையைக் குறிப்பிடுகிறது. இக்கோயிலின் சுற்றுப் புறத்தில் வசித்த கைக்கோள நெசவாளர்கள் வரிச்சுமை தாங்க முடியாத காரணத்தினால் கோயிலுக்குக் கட்டவேண்டிய பணத்தைக் கட்டாமல் வேற்றிடம் புகுந்தனர். ஆகவே இக்கோயில்

நிதியில்லாமையால் பாதிக்கப்பட்டு, கோயில் வழிபாடுகள் நின்று விடக்கூடிய நிலைமை ஏற்பட்டது. கோயிலை நிர்வாகம் செய்பவர்கள் நெசவாளர்களை அணுகி, அவர்களுடைய நெசவுத் தொழிலை மீண்டும் கோயிலின் சுற்றுப் புறத்திலேயே ஆரம்பிக்கக் கேட்டுக்கொண்டதையும் அவர்கள் மீது விதித்திருந்த வரியைப் பரிசீலித்து வரி குறைக்கபெற்றமையையும் இக்கல்வெட்டு நன்கு எடுத்தியம்புகிறது.[73] பாடி என்ற ஊரில் உள்ள இம்மன்ன னுடைய மற்றொரு கல்வெட்டு பதினெட்டு இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தொழில் வரியைக் குறிப்பிடுகிறது. அத்தொழில் வரியில் பட்டாடை நெசவு செய் பவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வரி ஆயம் என்றும், பட்டாடை நெய்வதற்கு வேண்டிய பட்டு நூலின் மேல் விதிக்கப் பெற்றவரி பட்டாடை நூலாயம் என்றும் குறிப்பிடுகிறது.[74]

இரண்டாம் வீரபுக்கண்ண உடையாரின் புலிப்பார கோயில் வியாக்ரபாதேஸ்வரர் கோயில் கல்வெட்டு, இக்கோயிலைச் சுற்றி யுள்ள திருமடவிளாகத்தில் வசிக்கும் கைக்கோளர் மீது ஆண் டொன்றுக்கு இரண்டு பணம் வீதம் வரியாக ஒவ்வொரு நெசவாளர் மீதும், ஒவ்வொரு தறிக்கும் விதிக்கப்பெற்றது என்றும் இவ்வரியி லிருந்து வரும் நிதி இக்கோயிலுக்கு கொடையாக அளிக்கப் பெற்றது என்றும் குறிப்பிடுகிறது.[75]

வீரவிஜயபூபதிராய உடையாரின் வியாக்ரபாதேஸ்வரர் கோயில் கல்வெட்டு இக்கோயிலின் திருமடவிளாகப் பகுதியில் வசித்திருந்த ஒவ்வொரு கைக்கோளர் குடும்பத்தின் மீதும் வாசல் வரியாக ஆறு பணம் வசூலிக்கப்பெற்றது என்றும், ஆறு பணம் வரியாக வசூலிப்பதற்கு முன்னால் மூன்று பணம் மட்டுமே வரியாக வசூலிக்கப்பெற்றது என்றும் வரிப்பணம் அதிகமாக வசூலிக்கப் பெற்றதால் வருவாய்த் துறையினருடன் கலந்தாலோசித்து நெசவாளர்களுக்கு வரி குறைப்புச் செய்யப்பெற்றது என்றும், மேலும் துணியின் மீது 40 பணம் வரி விதித்திருந்தது என்றும் கூறுகிறது.[76]

இரண்டாம் தேவராயரது நெறும்பூர் திருவாலீஸ்வரர் கோயில் கல்வெட்டு, இக்கோயில் திருமடவிளாகத்தில் வசிக்கும் பட்டாடை நெய்யும் கைக்கோள வகுப்பினர் மீது பட்டாடை நூலாயமாக

ஒவ்வொரு தறிக்கும் இரண்டு பணம் விதிக்கப் பெற்றதைக் கூறுகிறது.[77] மேலும் இம்மன்னனுடைய மாடம்பாக்கம் தேனு புரீஸ்வரர் கோயில் கல்வெட்டு, கோயிலுக்குப் பூசை செய்பவர்கள் தங்களுக்குரிய நிலத்தை இழந்தமையால் அவர்களுக்கு கைக் கோளர்கள் வசித்துவந்த தெருவில் வீடு கட்டிக் கொள்வதற்காக எட்டு வீட்டு மனைகள் அளிக்கப்பெற்றமையைக் குறிப்பிடுகிறது.[78] இவருடைய வெங்கலூர்க் கல்வெட்டு அதிசூதமங்கலம் என்ற கிராமத்தையும் அக்கிராமத்திலிருந்து வரும் தறிக்கடமை, பட்டிறை முதலிய இறைகளை இக்கோயிலின் வழிபாட்டிற்கும், பழுது பார்ப்பதற்கும் பயன்படுத்தப்பட்டமையையும் எடுத்தியம்புகிறது.[79]

பூபதி உடையாரது வழுவூர் பிரம்மபுரீஸ்வரர் கோயில் கல்வெட்டு கைக்கோளர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் இக்கோயிலுக் காக நிலம் வாங்கியதைக் குறிக்கிறது.[80] வீரகம்பண்ண உடையாரது திருக்கழுக்குன்றம் கல்வெட்டு அங்கு வசிக்கும் நெசவாளர்கள் ஆண்டொன்றுக்கு 70 பணம் வரியாக இறைவ னுக்குச் செலுத்த வேண்டும் என்று வரிவிதிக்கப் பெற்றமையைக் குறிக்கிறது.[81] மற்றொரு திருக்கழுக்குன்றக் கல்வெட்டு களவினை விசாரிப்பவர்களாகக் கைக்கோளர்கள் இருந்ததைக் குறிப்பிடுகிறது. ஆயிந்தன் என்பவன் குன்றவாணப் பெருமாள் மீது அணியப் பட்டிருந்த மாலையிலிருந்து 150 பொன்னைக் களவாடிவிட்டான். மெய்க்காவல் புரிந்தவன் இக்கோயிலைச் சார்ந்த தர்மகர்த்தாக் களிடம் இக்களவைப் பற்றிப் புகார் செய்தான். கைக்கோளர் களும், கைக்கோள முதலிகளும் மற்றவர்களுடன் இவ்வழக்கை விசாரிக்க நீதிபதிகளாக நியமிக்கப் பெற்றனர். இத்தருணத்தில் களவாடிய ஆயிந்தன் ஊரைவிட்டு ஓடிவிட்டான். ஆகையினால் அவனுடைய தரிசாகக்கிடந்த நான்கு சிறிய நிலங்களையும். அவன் அக்கோயிலில் அனுபவித்திருந்த வழிபாட்டு உரிமையையும் பொது மக்களிடம் ஏலத்திற்கு விட்டு அதன் மூலம் வந்த 800 பொன் கோயில் கருவூலத்தில் சேர்க்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.[82]

கிருஷ்ணதேவராயரது தேவிகாபுரம் பிரஹதாம்பாள் கோயில் கல்வெட்டு ஒவ்வொரு பட்டாடை நெய்யும் தறிக்கும் ஆண்டொன்றுக்கு $1\frac{1}{2}$ பணம் பட்டாடை நூலாயமாகக் கோயிலுக்கு அளிக்க வேண்டுமென்பதைக் குறிப்பிடுகிறது.[83]

ஸ்ரீரங்கதேவமஹாராயரின் காலத்து வெங்கலூர் கல்வெட்டு கைக்கோளர்களும் சேணியர்களும், பிற மதத்தினரும் நிலமும் ஒரு குறிப்பிட்ட அளவு பணமும் விருத்தாசலேஸ்வரர் கோயிலுக்குக் கொடையாக அளித்தமையைக் குறிப்பிடுகிறது. மேலும், இவர்கள் அனைவரும் ஒவ்வொரு ஆண்டும் தறி ஒன்றுக்கு ஒரு பணம் வீதம் செலுத்தியதோடு அல்லாமல், நிலத்தில் பயிரிட ஆரம்பிக்கும் போதே ஒரு குறிப்பிட்ட அளவுள்ள தானியத்தைக் கோயிலுக்கு அளித்துவிட வேண்டுமென்பதையும் குறிப்பிடுகிறது.[84]

மேற்குறிப்பிட்ட கல்வெட்டுகளிலிருந்து நெசவுத் தொழிலைச் செய்து வந்த சாலியர், சோழிய சாலியர், பட்டசாலியர், சேணியர் முதலிய பிரிவினருள் கைக்கோளர் என்ற பிரிவினர் மிகவும் சிறப்புடையவர்களாகவும், செல்வாக்கு மிகுந்தவர்களாகவும் இருந்தனர் என்பது தெரிகிறது. மேலும் இக்கைக்கோளப் பெருங்குடி மக்களுள் நன்கு வீரம் செறிந்தவர்களும், நல்ல வலிமையுடையவர்களும் பண்டைய அரசர்களின் காலாட் படையில் போர் வீரர்களாகப் பணியாற்றியுள்ளனர். அவர்களைக் கல்வெட்டுகள் கைக்கோளப் பெரும்படையினர் என்று குறிப்பிடுகின்றன. கல்வெட்டுகளை ஊன்றிக் கவனிக்கும் பொழுது பெரும்பாலும் இக்கைக்கோளர்கள் கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசித்து வந்திருக்கின்றனர். கோயிலைச் சுற்றியுள்ள பகுதி கல்வெட்டுகளால் திருமட விளாகம் என்று அழைக்கப்படுகிறது. நெசவாளர்களுக்கு இல்லங்கள் அமைத்துக்கொள்ள அரசால் நிலமளிக்கப்பட்டது. இதிலிருந்து அவர்களுக்குரிய சலுகையையும், அவர்களுடைய தொழிலுக்குள்ள முக்கியத்துவத்தையும் நன்கு அறிய முடிகிறது. இக்கைக்கோளப் பெருங்குடி மக்கள் கோயிலின் பணியாளர்களுள் ஒருவராக இருந்து வந்திருக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் ஒருவர் பின் ஒருவராக கோயிலின் இறைவழிபாட்டிற்கு நிலக்கொடை அளித்துள்ளதை முன்னர் கண்டோம். இதிலிருந்து அவர்கள் இறைவழிபாட்டின் முக்கியத்துவத்தை எவ்வாறு உணர்ந்திருந்தனர் என்பது நன்கு விளங்கும். நிலங்களேயன்றி ஆடுகள் முதலியனவும் கோயிலுக்குக் கைக்கோளப்படையினரால் கொடையாக அளிக்கப் பெற்றன. இதிலிருந்து வரும் வருவாய் கோயிலுக்கு நுந்தா விளக்கெரிப்பதற்குப் பயன்பட்டது என்று அறிகின்றோம்.

இவர்கள் கோயிலுக்குச் செய்த தொண்டுகளில் இறைவனுக்கு ஆடை நெய்து கொடுக்கும் தொண்டு மிகவும் போற்றற்குரிய தொண்டாகக் கருதப்படுகிறது, மேலும் இவர்கள் கூத்தபிரானுக்கும் கணபதிக்கும், பிச்சதேவருக்கும் கோயில்களெடுப்பித்ததைப் பற்றி முன்னர் கண்டோம். இதிலிருந்து இவர்களுடைய இறைப் பற்றையும், இவர்களிடமிருந்த பொருளாதார வசதியையும் நம்மால் உய்த்துணர முடிகிறது. இவர்கள் மேற் குறிப்பிட்டவாறு இருந்தமையால்தான் சமூகத்தில் நல்ல செல்வாக்கும், பிறர் பெறுவதற்கரியதாகிய உரிமைகளைப் பெற்றுத் திகழ்ந்தனர். இவர்கள் பெற்றிருந்த உரிமைகளில் மிகவும் போற்றற்குரியன வாகத் திகழ்ந்தவை கோயில் நிதி சம்பந்தப்பட்ட விவகாரங்களைக் கவனிக்கும் உரிமை, கோயிலைச் சார்ந்தவர்களின் மீது நிர்வாகத்தில் ஏதேனும் குறைகண்டால் அவர்கள் மீது தண்டம் விதிக்கும் உரிமை, கைக்கோள வகுப்பைச் சார்ந்தவர்களும், அவர்களுடைய புதல்வி களும், புதல்வர்களும், குழந்தைகளும், கோயிலில் நடக்கும் எல்லா விதமானச்செயல்களிலும் சுதந்திரமாக ஈடுபடவும், கிராமத்தில் நடக்கும் எல்லாவிதமான செயல்களிலும் ஈடுபடவும் சுதந்திரமாக இருக்கவும், விழாக்காலங்களிலும், சிறப்பான நாட்களிலும் இருப் பவர்களில் முதன்முறையாக வெற்றிலை பெறும் உரிமை, இவர்கள் நீதிபதியாக இருக்கும் உரிமை, மேலும் காஞ்சிபுரத்திலும், விரிஞ்சிபுரத்திலும் வாழ்ந்த கைக்கோளர்கள் பல்லக்கும் சங்கும் உபயோகித்துக் கொள்ள பெற்ற உரிமை முதலியன குறிப்பிடத் தக்கவையாக உள்ளன. கைக்கோளர்களுக்கு அரசியலிலும், சமூகத்திலும், நிர்வாகத்திலும் இருந்த செல்வாக்கின் பெருமையை நம்மால் உணரமுடிகிறது. இவர்களின் மீது விதிக்கப்பட்டிருந்த வரியின் மூலம் வரும் வருவாய் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. ஏனெனில் இந்த வருவாயைக் கொண்டுதான் சில ஆலயங்களில் இறை வழிபாடு நடைபெற்றது. இவர்கள் மூலம் வரும் வருவாய் இல்லாததால் கோயிலினுடைய நிதி நிலைமை மோசமாகி, கோயிலையே மூடும் நிலைமைக்கு வந்ததை முன்னர் கண்டோம். மேலும் இவர்கள் மூலம் வந்த வருவாய் பழுதுற்ற கோயிலைச் சீர்படுத்தவும் பயன்பட்டது. ஆகவே இவர்கள் மூலம் வரப்பெற்ற வருவாய் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப் பெற்றது. மேலும் கோயிலுக்குச் சன்னல், கதவு, நிலைப்படி, படிகள் முதலியவற்றை கொடையாக நல்கியுமுள்ளனர்.

பண்டைய தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக அரசுக்கு வருவாய் அளிக்கக்கூடியதாக இந்நெசவுத் தொழில் விளங்கிற்று. இத்தொழிலைச் செய்த கைக்கோளர்கள் தமிழ் மொழி பேசுபவர்கள். கையினால் நெசவுத் தொழிலைச் செய்த மையால் கைக்கோளர் என்ற பெயரைப் பெற்றனர். பெரும்பாலும் இக்கைக்கோளர்களில் பெரும்பாலானவர் சைவர்களாக இருந்திருக் கின்றனர். சிலர் லிங்கத்தை அணிகலனாக அணிந்துள்ளனர். ஒரு சிலர் வைணவராக இருந்திருக்கின்றனர். இவர்களின் வழி வந்தவர்கள் தற்பொழுது காஞ்சிபுரத்தில் வசித்து வருகின்றனர். காஞ்சிபுரத்தில் வசிக்கும் கைக்கோளரில் இரண்டு பிரிவினர் உள்ளனர். அவர்களுள் ஒரு பிரிவினைச் சேர்ந்தவர்கள் அய்யம் பேட்டையிலும், மற்றொரு பிரிவினைச் சேர்ந்தவர்கள் பிள்ளையார் பாளையத்திலும் வசிக்கின்றனர் என்று எட்கார் தர்ஷட்டன் கூறுகின்றார். மூவருலா பாடிய ஒட்டக்கூத்தர் இக்கைக்கோளர் வகுப்பைச் சார்ந்தவர் என்று கருதப்படுகிறது.

கைக்கோளரைத் தவிர தேவாங்கர் என்ற ஒரு பிரிவினர் நெசவுத் தொழில் செய்து வந்திருக்கின்றனர். இவர்கள் தெலுங்கும், கன்னடமும் பேசுபவர்கள். இவர்கள் தமிழ்நாட்டில் கோயம் புத்தூரிலும், பிற மாவட்டங்களிலும் வாழ்கின்றனர். இவர்கள் நெடுங்காலமாகத் தமிழகத்தில் வசித்து வருகின்றனர். கோவை மாவட்டத்தில் கிடைக்கப் பெறும் கல்வெட்டுகளில் இவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

நெசவுத் தொழில் தமிழர்களின் தொன்மையான தொழிலாக விளங்கிவந்துள்ளது. அத்தொழிலைச் செய்தவர்கள் சமூகத்திலும், ஆலயங்களிலும், ஆலய நிர்வாகங்களிலும் செல்வாக்குப் பெற்று வாழ்ந்து வந்தனர். இயந்திர நெசவாலைகள் பெருகிவரும் இன்னாளில் இத்தொன்மையான தொழிலைப் பேணிப் பாதுகாக்க நாமும் அரசும் துணைநிற்போம் என இந்நாளில் சபதமேற்போம்.

---

1. Pre and Proto History - India and Pakistan By H. D. Shankalia.

2. கூழை விரித்தல் காதொன்று களைத
லூழணி தைவர லுடைபெயர்த்துடுத்தலோ
டூழி நான்கே யிரண்டென மொழிப
- 262-2, பொருளதிகாரம், தொல்காப்பியம்

3. பருத்தி வேலிச் சீறூர் மன்னன்
– புறநானூறு – 299-1

4. பருவமில் கோங்கம் பகைமல ரிலவ
- பரிபாடல் 19:79

5. முலையோர் மென்முகை அவிழ்ந்த கொங்கின்
தலையலர் வந்தன வாரா தோழி
– குறுந்தொகை 254:2

6. மரனா ருடுக்கை மலையுறை குறவர்
– நற்றிணை 64:4

7. நூலினும் மயிரினும் நுழை நூற்பட்டினும்
பால்வகைத் தெரியாப் பன்னூற டுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதியும்
- சிலப்பதிகாரம் 14:205-7

8. வில்லெறி பஞ்சியின் வென்மழை தவழும்
- அகநானூறு 133 – 5

9. வழிதுளி பொழிந்த இன்குரல் எழிலி
எஃறு பஞ்சிற் றாகி வைகறை
- நற்றிணை 247:4

10. பருத்திப் பெண்டின் சிறு தீ விளக்கத்து
புறநானூறு - 326:5

11. ஆளில் பெண்டிர் தாளிற் செய்த
நுணங்கு நுண் பனுவல்
- நற்றிணை 358

12. பாம்புரி யன்ன வடிவினை காம்பின்
கழைபடு சொலியினிழையணி வாரா
– புறநானூறு 383:10:11

13. போதுவிரி பகன்றைப் புதுமலரன்ன
- புறநானூறு - 17

14. பாம்புரியன்ன வடிவின காம்பின்
கழைபடு .....
- புறநானூறு - 383:10-11

15. மேலது.

16. புகவிரிந் தன்ன பொங்கு துகிலுடீஇ
– புறநானூறு - 393:19

17. ஆவியன்ன அவிர் நூற் கலிங்கம்
- பெரும்பாணாற்றுப்படை 469

18. .....நேர்கரை
நுண்ணூற்கலிங்க முடீஇ
- புறநானூறு 392:14-15

19. ஒண்பூங் கலிங்க முடீஇ
- புறநானூறு 383:12

20. துன்ன காரரும் தோலின் துன்னரும் – சிலப்பதிகாரம்,
இந்திர விழவூரெடுத்த காதை 5:32

21. தோலின் றுன்னருந்த துன்ன வினைஞரும்
- மணிமேகலை 28:39

22. நலந்தகைப் புலத்தி பசைத் தோய்ந்தெடுத்துத்
துலைப்புடைப் போக்கித் தண்கயத் திட்ட
நிரிற் பிரியாப் பருயூஉத்திரி கடுக்கும்
– குறுந்தொகை 330:1–3

23. புகை முகந்தன்ன மாசில் தூஉடை
– திருமுருகாற்றுப்படை 138

24. மென்னூற் கலிங்கங் கமழ்புகை மடுப்ப
– மதுரைக்காஞ்சி 554

25. புட்டகம் பொருந்துவ புனைகு வோருங்
- பரிபாடல் 12:17

26. துவர்செய் யாடைச் செந்தொடை மறவர்
– நற்றிணை 33

27. துணைப்புணர்ந்த மடமங்கையர்
பட்டு நீக்கித் துகிலுடுத்தும்
- பட்டினப்பாலை 106:8

28. இணைபட நிவந்த நீல மென் சேக்கையுள்
– கலித்தொகை 72;1

29- பண்டையத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்
திரு. ஞா. தேவநேயன், 1966

30. The Chingleput, Late Madras District - A Manual by Charles Stweart Crolie - 1879

31. *Ancient India*. No. 2, July 1946

32. *Indian Archaeology* - A review for the year 1964-65
33. *The Colas,* Second edition - K.A. Nilakanta Sastri
34. *The commerce between the Roman Empire and India* (with map) - 1928 By Warmington (E.H.)
35. சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ - மதுரைக்காஞ்சி 521
36. காருக மடந்தை கணவனுங்கைவிட – மணிமேகலை 23:105
37. *Annual Report on Indian Epigraphy* (*ARE*) 300 of 1909
38. ARE. 300 : 1909
39. ARE. 269 : 1913
40. Museum Plates of Uttamacola, *Colas* By K.A. Nilakanta Sastri
41. ARE. 2 : 1913
42. ARE. 293 : 1910
43. SII IV, 371
44. ARE. 221 : 1910
45. Ibid
46. ARE. 72, 73 : 1887
47. ARE. 298 : 1910
48. SII 1 : 64
49. Ibid
50. Ibid
51. Ibid
52. ARE. 276 : 1912
53. *Thirty Pallava Copper Plates,* The Tamil Varalatru Kazhagam. Madras - 28, 1966.
54. ARE. 308 : 1913
55. SII. XIX. 1970
56. ARE. 555 : 1920
57. Museum plates of Uttamacola, *The Colas* - K. A. Nilakanta Sastri

58. ARE 67 : 1890
59. ARE. 253 : 1907, SII XIX
60. ARE. 258 : 1910
61. ARE. 136 : 1912
62. ARE. 72, 73 : 1887
63. *Colas*, Second edition - K. A. Nilakanta Sastri
64. ARE. 276 : 1912
65. ARE. 298 : 1910
66. ARE. 342 : 1911
67. ARE. 343 : 1911
68. ARE. 344 : 1911
69. ARE. 296 : 1910
70. ARE. 300 : 1909
71. ARE. 1962 - 63
72. ARE. 269 : 1913
73. ARE. 354 : 1909
74. ARE. 221 : 1910
75. ARE. 293 : 1910
76. ARE. 294 : 1910
77. ARE. 272 : 1912
78. ARE. 318 : 1911
79. ARE. 30 : 1913
80. ARE. 620 : 1908
81. 193D, ARE 2 : 1913; *Topographical List of the Inscriptions of the Madras Presidency* collected till 1915. By V. Rangacharya, M.A.L.T. Vol. 1-1919.
82 ARE. 185 : 1894, SII. Vol. V. No. 479 *Administration and Social life under Vijayanagar* - Dr. T. V. Mahalingam - 1940.
83. ARE. 364 : 1912
84. ARE. 2 : 1913

16

உடன் கட்டை ஏறிய தேவதாசி செப்பேடு

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டத்தில் மேலப் பனையூர் என்னும் ஊரிலிருக்கும் இசை வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த பொட்டுத்தாலி கட்டின அழகப்பப் பிள்ளையின் புதல்வி பொன்னழகு என்பவரிடம் ஒரு செப்பேடு உள்ளது. இவரது குடும்பத்தினர் கோயிலில் பொட்டுக் கட்டும் மரபுடையவர்கள். இவர்கள் குளிப்பிறையிலிருந்த நாகமாணிக்கத்தாள் அழகிய நல்லாள் என்ற நாட்டுமாணிக்கத்தின் வழித் தோன்றல்கள். நாட்டு மாணிக்கம், என்ற சொல் இன்றளவும் தேவதாசிகள் தேவரடியார் என்ற பொருளில் வழங்கி வருகிறது. நாட்டு மாணிக்கம் என்றழைக்கப்படும் தேவதாசிகளின் வழிவந்தோருடைய குடும்பங்கள் இன்றும் மேலப்பனையூரில் இருந்து வருகின்றன. இவர்களுடைய உறவினர்கள் குளிப்பிறை, பிரான்மலை போன்ற ஊர்களில் வசித்து வருகின்றனர். மேலப்பனையூரிலுள்ள சிவன் கோயிலில் குளிப்பிறையைச் சேர்ந்த தேவதாசிகளின் வழித் தோன்றல்கள் இறைவழிபாட்டின்போது மேளம் வாசிக்கும் தொழில் புரிகின்றனர். இவ்வூர் மக்கள் இவர்களை மேளக்காரர் என்றும், இசை வேளாளர் என்றும் அழைக்கின்றனர்.

செப்பேட்டின் காலமும் செய்தியும்

பொன்னழகு என்ற தேவதாசியிடம் உள்ள இச்செப்பேட்டின் காலம் சகாப்தம் 1400 என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. அதாவது கி பி. 1478-ஆம் ஆண்டைச் சேர்ந்தது. வென்று மாலையிட்டான் என்பவன் குளிப்பிறையைச் சேர்ந்த நாகமாணிக்கத்தாள் அழகிய நல்லாள் என்பவருடன் கூடியிருந்தபொழுது, அவ்வூரிலுள்ள பிடாரி அம்மனுக்கு திருவிழா நடைபெறுகிறது. அப்பொழுது நாக

மாணிக்கத்தம்மாளும் வென்று மாலையிட்டானும் அவளுடைய வீட்டிலிருந்து சுவாமிதரிசனம் செய்ய வருகின்றனர். அப்பொழுது வென்று மாலையிட்டானின் உயிர் பிரிகின்றது. நாகமாணிக்கத்தம் மாள் வென்று மாலையிட்டானின் சிதையில் உடன்கட்டை ஏறுகிறாள். நாகமாணிக்கத்தம்மாள் உடன்கட்டை ஏறியதினால் நத்தம் குடிகாட்டிலிருக்கும் கார்கார்த்த வேளாளரும், சேது காவல்ப் புரையன் மறமன்னர் நான்குவகைப் பிரிவினரும் கூடி, வென்று மாலையிட்டான் நிலத்தில் நான்கில் ஒரு பங்கு நிலமும், மனையும், கோவில், குளம், இடுகாடு, படுதுறையும் கொடையாக அளிக் கின்றனர்.

கோனாடு

இச்செப்பேட்டில் குறிக்கப்படும் கோனாடு பற்றிய ஓலைச் சுவடியொன்றும் கிடைத்துள்ளது. இச்சுவடி புதுக்கோட்டைத் தலைமை நீதிமன்றத்தில் உள்ளது. இச்சுவடி, கோனாடு திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள உறையூரிலிருந்து மதுரை மாவட்டத்திலுள்ள சோழவந்தான் வரை பரவியிருந்ததென்றும், இதனுடன் பிரான்மலை, பொன்னமராவதி, காரையூர், ஒளிய மங்கலம், அன்னவாசல், வயலோகம் முதலிய இடங்கள் சேர்ந் திருந்தனவென்றும் குறிப்பிடுகிறது.

கோனாடு மூன்று கூற்றங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை, உறையூர்க் கூற்றம், ஒளியூர்க் கூற்றம், உறத்தூர் கூற்ற மாகும். இம்மூன்று கூற்றங்களும் 64 நாடுகளைக் கொண் டிருந்தன. அந்நாடுகள் 756 ஊர்களைக் கொண்டிருந்தன. இந்நாட்டில் 312 கோயில்களுக்கு நிலங்கள் வரையறுத்து அளிக்கப் பட்டிருந்தன. 21 ஊர்கள் பிராமணர்களுக்கு அளிக்கப்பட்டன.

மேற்கூறிய கோனாடு பற்றிய செப்பேடு, 'சியசோளகெம்பிர வளநாடாகிய கோனாடதில் பிறமனை சூழ்ந்த பொன்னமறாபதி னாட்டில் வடபத்தில் வாகைமங்கலமாகிய குளிப்பிரை காணியாச் சித்தி நிலத்தறசு கற்த்தராகிய காற்காத்த வேளாற் பட்டம் 700க்கு 756 குடிகாடு 511க்கு பிறமதாயம் 21க்கு தேவதாயம் 212, னாடு 64க்கு தலையூராகிய ஒளியூற் கூற்றம் உள்ளிட்ட 6 குடிகாட்டி லிருக்கும்' என்று குறிப்பிடுகிறது.

கார்காத்த வெள்ளாளர்

இவர்கள் தங்களைக் காராளவெள்ளாளர் எனக் கூறிக் கொள்கின்றனர். மதுரைத் தலபுராணம் காராளவெள்ளாளர் தோற்றத்தைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

'மிகப் பழங்காலத்தில் பாண்டிய தேச அரசனுக்கும் தேவேந்திர கடவுளுக்கும் ஒரு சண்டை மூண்டது. இதனால் கோபமுற்ற தேவேந்திரன் மேகங்களைப் பாண்டிய தேசத்தில் மழை பொழியக் கூடாதெனக் கட்டளையிட்டான். மழைபொழியாததினால் பாண்டிய தேசம் பஞ்சமுற்றது. பாண்டிய தேசத்து மக்கள் மன்னனிடம் முறையிட்டனர். கோபமுற்ற பாண்டிய மன்னன் தேவேந்திரனிடம் படையுடன் போருக்குச் சென்று, வெற்றியும் பெற்றான். வெற்றிபெற்ற மன்னன் மேகங்களைச் சிறைப்படுத்தினான். இதனால் புவியில் மழை பொழியாதிருந்தது. மக்கள் பெரும் துன்பமுற்றனர். மக்கள் அனைவரும் கூடித் தங்கள் துன்பங்களைப் போக்க தேவேந்திரனை நாடினர். அவன் ஒரு தூதுவனையனுப்பி சிறைப்படுத்திய மேகங்களை விடுவிக்க முயன்றான். ஆனால் தன்னுடைய நாட்டில் மழை பொழிவதற்கு சம்மதித்தால் ஒழிய மேகங்களை விடுவிக்கமாட்டேன் என பாண்டிய மன்னன் கூறினான். இந்தச் சூழ்நிலையில் பாண்டிய தேசத்து வெள்ளாளர்கள் மேகங்களுக்குக் காப்பாக (Security) நின்றனர். இதனால் கார்காத்த வெள்ளாளர் என்ற பெயரினைப் பெற்றனர்.'[1]

இந்திரனுக்கு வெள்ளாளர்கள் செய்த சேவைகளுக்காக இந்திரனிடமிருந்து வெள்ளை யானையும், வெண்குடையும், மேழிக் கொடியும், செவ்வல்லி மாலையும், 'பூமிபாலர்' என்ற பட்டத்தை யும் பெற்றனர். கார்காத்த என்ற சொல் மழைக்காக காத்திருப் பவர் என்று பொருள்படும். வெள்ளாளர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது தர்ஷ்டன், காரைக்காடு என்ற எல்லைப்பகுதியைச் சேர்ந்த வெள்ளாளர்கள் கார்காத்த வெள்ளாளர்கள் என மாறி யிருக்கலாம் எனக் கருதுகிறார். இதனை உறுதிப்படுத்துவதற்கு

எவ்விதமான சான்றுகளும் இல்லை. மழையை நம்பியிருக்காமல் பயிர்களை வளர்க்கும் திறமை பெற்றிருந்தமையால் இவர்கள் 'காராளர்' மேகத்தை ஆள்பவர் எனப் பெயர் பெற்றனர்போலும். இதனை உணராத மக்கள் இவர்களை மேகத்தைக் கட்டுப்படுத்தும் திறன் மிக்கவர் என எண்ணுகின்றனர்.

இக்காராள வெள்ளாளர்கள் திருமயம் வட்டத்தில் தெக்காத்தூர், காரையூர், விராச்சிலை, பொன்னமராவதி, ஒளியமங்கல பகுதிகளிலும், கொளத்தூர் வட்டத்திலும், ஆலங்குடி வட்டத்திலும் வாழ்கின்றனர்.

கோனாட்டு வெள்ளாளர்க்கும், கானாட்டு வெள்ளாளர்க்கும் நடந்த போரில் கானாட்டு வெள்ளாளர்களுக்குத் துணைபுரியும் பொருட்டு ஐந்நூறு மறவர் குடும்பங்களை இராமநாதபுரத்திலிருந்தும் ராசேந்திர மங்கலநாட்டிலிருந்தும் கொண்டு வந்து விராச்சிலை என்னும் ஊரிலும் இன்னும் நான்கு ஊர்களிலும் அமர்த்தியதாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. இம்மறவர்கள் சேதுபதி நாட்டிலிருந்து வரப்பெற்றமையால் சேதுகாவலப் புறையர், மறமன்னர் என அழைக்கப்பட்டனர். மேலும் இச்செப்பேட்டில் குறிப்பிடப்படும் குழிப்பிறை, விராச்சிலையிலிருந்து மேற்கே 6 கி.மீ. தொலைவில் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இச்செப்பேட்டில் குறிப்பிட்டுள்ள கொடையைக் கூறும் கல்வெட்டு குழிப்பிறையிலுள்ள சொக்கநாதர் ஆலயத்தின் கருவறை நிலைக் கல்லில் வெட்டப்பட்டுள்ளதென இச்செப்பேடு கூறுகிறது.

பொதுவாகக் கணவன் உயிரிழந்த பின்னர் மனைவி உடன் கட்டை ஏறுவது பண்டைய வழக்கம். போகியாய் விளங்கிய மாணிக்கத்தாள் உடன்கட்டை ஏற விரும்பியது விசித்திரமே. தேவரடியாள் உடன்கட்டை ஏறிவிட்டால் அவளை நம்பி உயிர் வாழும் அவளுடைய குடும்பத்தினர் துன்புறுவர் என்பதற்காகவே அவள் பேரிலும், அவள் குடும்பத்தினர் பேரிலும் இரக்கங்காட்டி அவளுடைய வழித்தோன்றல்களுக்கு கொடையளித்தனர் போலும். கொடை அவளுக்கே அளிக்கப்பட்டதாகக் கூறினாலும் அக்கொடையினை அனுபவிப்பவர்கள் அவளுடைய வழித்தோன்றல்களே.

நாகமாணிக்கத்தாளுடன் கூடியிருந்த வென்றுமாலையிட்டானைச் செப்பேடு குறிப்பிடும்பொழுது 'வென்னு மாலையிட்டான்' என கொச்சையாகக் குறிப்பிடுகிறது. வென்றுமாலையிட்டானுடைய உயிர் போவதைச் செப்பேடு உயிர் இதமாய்ப் போனது என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக 'உயிறதெமா' போனதென்று அழகாகக் குறிப்பிடுகிறது. குறுநிலத் தலைவனை 'அரசு' (நிலத்தரசு) என்று குறிப்பிடுகிறது. நாலில் ஒன்று என்பதை நாலத்தொரு பங்கு என்கிறது. தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆளுகையின் கீழிருந்த வெள்ளாளர்களின் வழிவந்த கார்காத்த வெள்ளாளர்கள் தங்களை இச்செப்பேட்டில் மூவேந்திர வேளாளர் என்று குறிப்பிட்டுக் கொள்கின்றனர். கோனாட்டிலுள்ள ஒளியூர்க் கூற்றத்தில் எழுந்தருளியுள்ள இறைவி அழகிய பெரியவள் ஒளிய நாயகியின் துணை வேண்டி இச்செப்பேடு முடிக்கப் பெற்றுள்ளது.

செப்பேடு

1. ஸ்ரீமகா மண்டலேஸ்பரன் அரியதல
2. வியன் பாடன் ப(ா) சைக்கி தப்பு மூவறாய க
3. ன்டன் கண்டனாடு கொண்டு கொண்டனா
4. டு குடாதான் பாண்டிய மண்டல தான ப
5. ாஞ்சாள னாசாரியான் அசுபதி கிஷபதி
6. நரபதி தெச்சனாதி பிறிதிவு றாச்சிய பரிப
7. ன்ன அறுளா நின்ட சாலிவாகன சகா
8. த்தம் 1400 மேல் செல்லா நின்ட வி
9. சைய ஆவனி மீ 7 உ சிய சோள
10. கெம்பீர வளநாடாகிய கோனாடதில் பி
11. றமலை சூழ்ந்த பொன்னமறாபதி னாட்டில்
12. வடபத்தில் வாகை மங்கலமாகிய குளுப்
13. பிரை கானியச்சிக்கி நிலத்தறசு கற்த்தரா
14. கிய காற்காத்த வேளாற் பட்டம் 700 க்கும்

15. 756 குடிகாடு 511 க்கு பிற
16. மதாயம் 21க்கு தேவதாயம் 212
17. னாடு 64-க்கு தலையூறாகிய ஒலியுற் கூ
18. ற்றம் உள்ளிட்ட 6 குடிகாட்டி லிருக்கு
19. ம் காற் காத்தா வேளா(ா)ற் குடுத்த கானியாச்
20. சி வாகை மங்கலம் குலுபிரைக்கி வந்
21. தவன் சேதுகாவலப் புரையற் ம
22. ற மன்னற் நாலுவகை பேரும் கூ
23. டி குடுத்த காணியாச்சி குளுபிரைக்கு
24. வந்தவ தலத்தாரில் நாகர் மானிக்க
25. த்தாள் அளகிய நல்லாளே வென்னு
26. மாளையிட்டான் கூடியிருந்த விடத்தில்
27. சுவாமி திருவிலா அம்மன் பிடாரிறியர்
28. திருவிலாவில் அரமனை சளுப்பா நாகம
29. ானிகத்தாள் வீட்டில் யிருந்து சுவாமி தெ
30. ரிசனை பன்ன வந்த விடத்தில் உயி
31. றதெமா போனபடியிலா மாணிக்(க)
32. த்தாள் கூட உடன்கட்டை ஏறி
33. போனபடியின்னாலே நாங்கள்
34. உரார் ந(ா)லு வகை பேரும் குடுத்த க
35. ானியாச்சி வென்னுமாளையிட்டான்
36. கானியில் ஊறத்து பிறவில் நால
37. த் தொரு[2] பங்கு மன்னும் மனை கோ
38. வில் குளம் யிடுகாடு படுதுறை சக
39. லமும் மாணிக்கதாள் ஆண்டு கொள்வ

40. து யிதுர கல்வெட்டு சொக்க நாதற்
41. கொவில் கெற்ப்பகரகம் நில கல்
42. லு வெட்டி தாம்பூற சாதனம் பன்
43. னி குடுத்தோம் மூவேந்திர வேளா
44. ற் திறப்பூ அளகிய பெரியவள் ஒலிய
45. னாகிய துணை உ.

அடிக்குறிப்புகள்

1. S. Radhakrishna Iyer, A general History of the Puduk kottai State, p. 61.
2. நாலில் ஒன்று

பிழைத்திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
7	6	முன்பொன்பேடு	மூப்பொன்பெடு
15	13	செல்விருக்கை	செவ்விருக்கை
33	11	தோற்றம்	தேற்றம்
33	19	கபிலேகரகஜபதிக்கு	கபிலேசுர கஜபதி
34	29	திரட்டிச் கொன்று	திரட்டிக்கொண்டு
41	20	'முதுமக்கட்சாழ்	'முதுமக்கட்சாடி'
52	21	கீழள்ள	கீழுள்ள
65	21	கி.பி. 118-	கி.பி. 1118
106	34	'நவ்பத்கானாம் தெரு'	'நவ்பத்கானாத் தெரு'
110	27	மறக்காயர்	மரக்காயர்
117	14	சிற்பங்களின் கங்கை	சிற்பங்களில் கங்கை
119	21	இலக்கையை	இலங்கையை
120	18	அனுமன் காட்சி	அனுமன் காணும் காட்சி
124	12	கசவ்வர	செவ்வரக்
125	11	வேதமும் ஒன்கும்	வேதமும் ஒக்கும்
126	17	கோச் சோழன	கோச்சோழன்
134	23	முன்றுகை	மூன்றுகை
142	26	பல்லவனுடைப	பல்லவனுடைய
142	30	(கி.பி. 1943-79)	(கி.பி. 1243-79)
157	28	காணியாச்சித்தி	காணியாச்சிக்கி